99/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள்

மார்ச் 29, ௨௦௦௨, தொகுதி 91
எண் 2


D
V2II,31 'P00
P00 91-2
222775

வெளியீடு 9-11-2000 Issued 9-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 29, 2000 – தொகுதி 91– எண் 2

**Wednesday the 29th March, 2000 – Volume 91 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] **[Price Rs. 3.00**

D
V211,31'Poo
Poo-91.2
222775

# 29-3-2000

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 125-164

2. **தகவல் கோரல்—**

(அ) கச்சத்தீவு பகுதியில் மீனவர் மாரடைப்பால் இறந்தது. 165

(ஆ) அனுமதி மறுத்த பிரச்சினை 174

(இ) சத்துணவு அமைப்பாளர்களைப் பணி நிரந்தரம் செய்தல். 174-175

3. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

நன்னிலம் போன்ற பகுதிகளில் தீவிர வயிற்றுப்போக்கு நோயினால் மக்கள் பாதிப்பு. 165-173

டாக்டர் பத்மா 166-169

திரு. வை. சிவபுண்ணியம் 169-171

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 171-173

4. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000. 175-176

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2000 181

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999-2000 மொழிதல் (ஆசெ). | 176 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ). | 180 |
| **6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1999-2000 வாக்கெடுப்பு—** | 176-180 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 176-177 |
| **7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—** தொடர்ச்சி. | 181-257 |
| திரு. ச. அழகிரி | 182-200 |
| *திரு. குத்தாலம் பி. கல்யாணம் | 200-206 |
| *திரு. எஸ்.வி. கிருஷ்ணன் | 207-212 |
| திரு. கோ. தளபதி | 212-215 |
| *திரு. முகம்மது கோதர் மைதீன் | 215-221 |
| *திருமதி கோமதி சீனிவாசன் | 222-225 |
| செல்வி க. ராணி | 226-229 |
| *திரு. டி. மணி | 229-238 |
| திரு. வி.சி. சண்முகம் | 238-244 |
| திரு. அ. வெங்கடாசலம் | 244-249 |
| திரு. பா. வேல்துரை | 249-257 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 257-258 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 16, பிரமாதி-திருவள்ளுவர் ஆண்டு-2031**

**2000 மார்ச் 29, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

" இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்."

சொற்களின் வழிமுறையறிந்து நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 121, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**121—**

**துப்பாக்கிப் பயிற்சி**

***21306—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், திங்களூர் காவல் நிலையக் காவலர்களின் துப்பாக்கிப் பயிற்சிக்கான களம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 மார்ச் 29

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்கள் தாங்கள் பெற்றுள்ள துப்பாக்கிப் பயிற்சியைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொள்ளக்கூடிய வகையில் Shooting range என்று சொல்லக்கூடிய மையம் ஈரோடு மாவட்டத்தில் அரச்சலூர் என்ற ஒரேயொரு இடத்திலே மட்டும்தான் இருக்கிறது. அந்த இடத்திற்குச் சென்று வருவதிலே காலதாமதமும், அதனால் பணிச்சுமைகளின்மீது கவனம் செலுத்த முடியாத பலவீனமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. இதைக் கருத்திலேகொண்டு இந்தப் பகுதியில் ஒரு துப்பாக்கிப் பயிற்சிக் களம் (Shooting range) அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பொதுவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் துப்பாக்கி சுடுகின்ற மையங்கள் இருப்பதில்லை. குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய இந்த மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து ஏற்காடு மலையடிவாரத்திலே உள்ள கொண்டநாயக்கன்பட்டி என்ற இடத்திலேதான் துப்பாக்கி சுடும் மையம் இருக்கிறது. எனவே, ஒவ்வோர் இடத்திற்கும் இந்த மையங்களை ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம். அதற்கான வசதிகளும், வாய்ப்புகளும், சூழ்நிலைகளும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *122*, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**122—**

## பார்வையற்றவர்களுக்கு இட ஒதுக்கீடு

***15324—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும்போது பார்வையற்றவர்களுக்கு ஒரு விழுக்காடு என்பதை இரண்டு விழுக்காடாக உயர்த்த உத்தேசம் உள்ளதா?



2000 மார்ச் 29]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் பணியிடங்களில் காது கேளாதவர் மற்றும் வாய் பேசாதவர் ஆகியோருக்கான ஒரு விழுக்காட்டை, பார்வையற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்து, பார்வையற்றவர்களுக்கான மொத்த ஒதுக்கீடு, இரண்டு விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளி ஆசிரியர்கள் நியமனத்தில் பின்பற்றப்படும் பார்வையற்றவர்களுக்கான இரண்டு விழுக்காடு ஒதுக்கீடு, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் மேற்கொள்ளும் கல்லூரி ஆசிரியர் பணி நியமனத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *123*, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**123—**

## பொது நூலகம்

***25825—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை கிராமத்தில் ஒரு பொது நூலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1948* ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின்படி, *5,000* மக்கள் தொகைக்குமேல் உள்ள இடங்களில் கிளை நூலகங்களும், *1,000* மக்கள் தொகைக்குமேல் உள்ள இடங்களில் பகுதிநேர நூலகங்களும் திறக்க வழிவகை உள்ளது. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஈச்சங்கோட்டை கிராமத்தின் மக்கள்தொகை *2,708* என்பதால், இங்கு கிளை நூலகம் திறக்க இயலாது. எனினும், இவ்வூர்ப் பொதுமக்கள் பகுதிநேர நூலகம் திறப்பதற்குரிய நிபந்தனைகளை நிறைவு செய்தால், அவ்வூரில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 மார்ச் 29

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் தொகை என்பது நீண்ட நாட்களுக்கு முன்னாலே எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு. இப்போது ஈச்சங்கோட்டையைப் பொறுத்தவரையில், 5000 மக்கள்தொகை கொண்ட பெரிய ஊராக விளங்குகிறது. அதுமட்டுமல்ல. படித்த இளைஞர்களுக்குப் பொழுதைப் போக்கவேண்டும் அல்லது காலத்தைத் தள்ள வேண்டும் என்று சொன்னால், நூலகங்களில் இருக்கிற நூல்களைப் படித்து அவர்கள் அறிவை வளர்த்துக்கொண்டு, அதன்மூலம் நல்லொழுக்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிற வகையில் ஒவ்வோர் ஊராட்சியிலும் ஒரு நூலகம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்ந்த நோக்கங்கள் எல்லாம் உடனே நிறைவேறுவது இல்லை. குறிப்பாக, இப்போது மக்கள்தொகை அங்கே 5,000 ஆக உயர்ந்திருக்கிறது என்ற விவரம் இந்தத் துறையினருக்கு இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. உயர்ந்திருந்தாலும் அதுபோல எத்தனை ஊர்களில் உயர்ந்திருக்கிறது என்ற விவரம் தெரிய வேண்டும். அப்படித் தெரிகிறபோதும், அரசு சார்பாக ஓர் ஆண்டுக்கு 10, 20 இடங்களில் தான் புதிய கிளை நூலகங்கள் திறக்கப்படுகின்றன. எனவே, அந்த முன்னுரிமை அடிப்படையில், நிர்வாகம் என்ற முறையில், இது உரிய முறையில் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கிற நூலகங்களில் வேலை பார்க்கின்ற அலுவலர்களுக்கு நீண்ட நாட்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று என்னிடம் ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. இதுபற்றி அரசுக்குத் தெரியுமா? எவ்வளவு காலமாக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பதை இங்கே அறிவிக்குமாறு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் பொது விவாதத்தில் பேசுகிற நேரம் வரையில் காத்திராமல் கேள்வி நேரத்திலேயே அவருக்கு வந்திருக்கிற



2000 மார்ச் 29]

கடிதத்தைப்பற்றி என்னிடத்தில் கேட்டதற்காக மகிழ்ச்சி. அந்தக் கடிதத்தை அனுப்பினால் உரிய முறையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தகுந்த விளக்கம் தருவதற்கு நான் காத்திருக்கின்றேன். யார் யார் சம்பளப் பட்டியலில் உள்ள இடங்களில் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களோ அந்தப் பட்டியலின்படி அவர்களுக்குச் சம்பளம் தரப்படும். ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த நடவடிக்கை விசாரிக்கப்படும். எங்காவது சம்பளம் வழங்கப்படாத இடத்தில் யாராவது நியமிக்கப்பட்டு இருப்பார்களேயானால், நிதித் துறையினுடைய இசைவு பெற்று, வழங்குவதற்கு முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற அனைத்து ஊராட்சி மன்றங்களிலேயும் அய்யன் திருவள்ளுவர் பெயராலேயே நூல் நிலையங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தொடங்கப்பட்டிருக்கின்றன. அது தமிழகம் முழுமையிலும் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறதா? அதற்குக் கல்வித் துறையின் மூலமாகவோ அல்லது உள்ளாட்சித் துறையின் மூலமாகவோ நிதி ஒதுக்கப்படுகிறதா? தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்து அந்த நூல் நிலையங்களைச் சிறப்பாகச் செயல்படச் செய்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யன் திருவள்ளுவர் நூலகம் அல்லது படிப்பகம் ஒவ்வோர் ஊராட்சி மன்றத்திலும் அமைக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. அதற்கான மொத்தச் செலவு ரூ.5000 அளவுக்குத்தான். ஏனென்றால் நிறைய ஊராட்சிகள் இருக்கின்றன என்பதால் இந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்து, அதற்கு நிதி ஒதுக்கவும் வழி செய்யப்பட்டிருக்கிறது. அய்யன் திருவள்ளுவர் நூலகத்தில் படிப்பவர்களுக்கு ஓர் உணர்வு வருவதற்கேற்ற தகுதி உள்ள நூல்களை ஒரு பெரும் பட்டியல் தயாரித்து அந்த நூல்களில் ரூ.2,000 அளவுக்கு, அந்தந்த ஊராட்சி மன்றம் சார்பில் வாங்கிக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. செயல்படுவது என்பது ஒவ்வோர் இடத்தில் இருக்கின்ற வசதி நிலைக் கேற்ப, அவரவர்கள் மேலும் மேலும் முயற்சித்து தகுந்த முறையில் ஏற்பாடு செய்ய தொடர்ந்து அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

[2000 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 124, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**124—**

**சித்த மருத்துவத்திற்கு அங்கீகாரம்**

***13233—திரு. ஜி. நிஜாமுதீன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சித்த மருத்துவத்திற்கு உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற மாநில அரசு மத்திய அரசு மூலம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசு சித்த மருத்துவத்திற்கு அங்கீகாரம் வழங்கி இருப்பதால் உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து தனி அங்கீகாரம் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியமுறை மருத்துவத்திற்குப் பயன்படுகின்ற பழமைமிக்க மூலிகைப் பொருள்களை இப்போது Patent rights என்கிற விதத்திலே அமெரிக்காவிலே கொண்டு சென்று பதிவு செய்கின்றார்கள். உதாரணமாக, பூண்டு, வேம்பு, மஞ்சள் போன்றவற்றிற்கான Patent Rights-ஐ அமெரிக்கா எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான சித்த மருத்துவ மூலிகைகள் (raw drugs) இங்கே இருக்கின்றன. அது நமக்கே உரிமை உள்ளது. வெளிநாட்டவர்கள் அதற்கான உரிமையை கொண்டாடக்கூடாது என்கிற விதத்தில் எந்தெந்தச் சரக்குகளை இங்கே நாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கான ஒரு பட்டியலை எடுத்து அவற்றுக்கான Patent Rights முழுமையும் நமக்கு, தமிழர்களுக்கு, சித்த மருத்துவத்திற்குத்தான் உரியது என்கிற விதத்திலே பதிவு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 29]

(முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே இப்படிப்பட்ட Patent Rights ஒருவருக்கு வழங்கும்போது மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் அதற்கு ஆட்சேபணை தெரிவித்தோம். இங்கிருக்கிற பல்கலைக்கழகம் அப்படிப்பட்ட உரிமையைப் பெறுவதற்கே நாங்கள் ஆட்சேபணை செய்கின்ற நேரத்தில், அமெரிக்காவிலே உள்ளவர்கள் Patent Rights வாங்குவதற்கு இந்த அரசு நிச்சயமாக ஒத்துழைக்காது. இன்னும் சொல்லப்போனால், Director of Indigenous Medicine இதுகுறித்து விவரமாக மத்திய அரசுக்கும் கடிதம் எழுதியுள்ளார். அதைப்போலவே, எந்தெந்தப் பொருட்களுக்கு நமக்கு Patent Rights வேண்டுமென்பதற்கு இந்த அரசும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல மத்திய அரசிடமிருந்து ஒப்புதலைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற 'வருமுன் காப்போம்' சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் பரிசோதனை முகாம்களில் நாங்களெல்லாம் சென்று கலந்துகொண்டபோது சித்த மருத்துவத்துக்கு அதிகமான மக்கள் விரும்பி வருகின்றனர். அதோடு சித்த மருத்துவ மூலிகை பற்றியும் அங்கே சிறப்பாக எடுத்துச் சொல்லப்படுகிறது. தற்போது அரசு மருத்துவமனைகளில் மட்டும் சித்த மருத்துவ முறையில் நாம் சிகிச்சை அளித்து வருகிறோம். அந்த சித்த மருத்துவமானது மக்கள் மத்தியிலே பிரபலமடைந்திருக்கின்ற காரணத்தால், ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, 'வருமுன் காப்போம்' திட்டத்திலே சித்த மருத்துவத்துக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஏறக்குறைய 20-லே இருந்து 25 சதவீத நோயாளிகள் சித்த மருத்துவ மருந்துகளைத்தான் கேட்கிறார்கள். இருந்தாலும் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4-வது முறையாக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, சித்த மருத்துவத்துக்குத் தனி முக்கியத்துவம் தந்து, மேன்மேலும் அதை

[2000 மார்ச் 29

ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக, பல இடங்களில் சித்த மருத்துவப் பிரிவு இல்லாத சூழ்நிலையைப் போக்கி, இப்பொழுது எல்லா தாலுகா மருத்துவமனைகளிலேயும், மாவட்ட மருத்துவமனைகளிலேயும் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இதை மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அதை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறோம். முதல் கட்டமாக, 24 மணி நேர மருத்துவமனைகளில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. காலப்போக்கில் படிப்படியாக அது மேலும் விரிவுபடுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்திற்கான மூலிகைகளை தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலே உற்பத்தி செய்வதற்கான சில வழிமுறைகளை இந்த அரசு ஏற்படுத்தினாலும், அது சீராகச் செயல்படுவதில்லை என்றும், இப்பொழுது சித்த மருத்துவப் பிரிவுகளில், குறிப்பாக குழித்துறை அரசு மருத்துவமனையிலும், இடைக்கோடு மருத்துவமனையிலும் உள்ள சித்த மருத்துவப் பிரிவுகளில் மருந்துகள் இல்லாத குறையும் இருக்கிறது, மருத்துவர் இல்லாத குறையும் இருக்கிறது. அதைப் போக்குவதுடன், பரவலாக நம்முடைய மாவட்டங்களில் எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம், அதிகப்படியாக மூலிகைகளை உற்பத்தி செய்ய முடியுமோ அந்தப் பகுதிகளில் எல்லாம் மூலிகைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Director of Indigenous Medicine இப்போது தமிழகத்திலே எங்கெங்கே மூலிகைகள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் மூலிகைகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதிலே தனிக் கவனம் செலுத்தி வருகிறார். சித்த மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லை என்பது உண்மை. இன்னும் 10, 15 நாட்களில் தேர்வாணைக் குழு அந்தப் பட்டியலைத் தரவிருக்கிறது. அந்தப் பட்டியல் கிடைத்தவுடன் ஏப்ரல் மாதத்திற்குள்ளாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். ஆனால் மருந்துகள் இல்லை என்ற புகார் இதுவரையிலே அரசுக்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூலிகைகள் அழிந்து வருகின்றன. ஆகவே மூலிகைத்



2000 மார்ச் 29]

தோட்டங்களை அதிகப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? மூலிகை மூலமாக பெட்ரோல் உற்பத்தி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைகளை தமிழ்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும். மூலிகை மூலமாக பெட்ரோல் உற்பத்தி செய்வதற்கு முயற்சித்தவர்கள் இப்போது சிறைச்சாலையில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வருமுன் காப்போம்' திட்டம் நல்லமுறையில் கிராமத்து மக்களெல்லாம் ஆதரிக்கக்கூடிய திட்டமாக இருக்கிறது. 5 ஆயிரம் மக்கள் தொகையுள்ள இடங்களில் முகாம்கள் அமைத்து, அந்த முகாம்களின் மூலம் ஏழை எளிய மக்கள் நல்லதொரு மருத்துவ உதவி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளில் உள்ள தொழிலாளிகளுக்குப் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமைதான் விடுமுறை. இது குறித்து அரசிடம் கேட்டால், திங்கள், வெள்ளிக்கிழமைகளில்தான் நாங்கள் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். அரசு விடுமுறையான ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தினால் அது அந்த ஏழைத் தொழிலாளிகளுக்கு ரொம்பவும் உபயோகமாக இருக்கும் என்பதால் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக 8,400 இடங்களிலே 'வருமுன் காப்போம்' திட்டத்தை அமல்படுத்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அதற்குப் பிறகு இந்தத் திட்டம் தேவைப்பட்டால் மற்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவிலே மருத்துவத் துறையிலே ஆராயப்பட வேண்டியவற்றிலே சித்த மருத்துவம் முக்கியமானது என்பதை நாம்

[2000 மார்ச் 29

மறுப்பதற்கில்லை. உலக அளவிலே, சர்வதேச அளவிலே ஆராய்ச்சிகள் செய்யும்போது, நல்ல பல விளைவுகள் ஏற்படுகிற வாய்ப்புகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு எய்ட்ஸ்-க்கு இப்போது தாம்பரம் சானடோரியத்திலே மிகப் பெரிய அளவிலே extensive drive என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு பரிட்சார்த்த முறையிலே சித்த மருந்துகள் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. அந்த மருந்துகள் எல்லாம் இப்போது Patent செய்யப்பட்டிருக்கின்றனவா? அதை Patent செய்கின்ற முயற்சியிலே அரசு ஏற்கெனவே ஈடுபட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் எய்ட்ஸ் நோய்க்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அது சில நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் குணம் அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டுமென்று உலகத்திலேயிருக்கக்கூடிய மற்ற விஞ்ஞானிகள் சொல்கின்ற காரணத்தினால், எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மூலமாக அந்த மருந்துகள் எல்லாம் இப்போது விஞ்ஞானபூர்வமாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றன. அதிலே வெற்றி கிடைக்குமானால், உலகத்திலேயே எய்ட்ஸ்-க்கு மருந்து கண்டுபிடித்த பெருமை தமிழ்நாட்டைச் சாரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த சித்த மருத்துவ முறையை விஞ்ஞான ரீதியாக வளர்க்கவும், ஆராய்ச்சிகளிலே ஈடுபடவும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. தலித் எழில்மலை அவர்கள் தலைமையில் 100 கோடி ரூபாய் செலவிலே தாம்பரத்திற்கு அருகில் ஓர் ஆராய்ச்சி நிலையம் தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டு விழா, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக நடந்திருக்கிறது. அதற்கான நிதியை நாம் இன்னும் பெறவில்லை. காரணம், அந்த அடிக்கல் நாட்டு விழா நடந்த சில நாட்களுக்கெல்லாம் அவர் அமைச்சர் பொறுப்பிலேயிருந்து விலகிக்கொண்டார். இப்போது புதியதாக பொறுப்புபேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சரிடம் இது குறித்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மத்திய வர்த்தகத் தொழில் துறை அமைச்சரிடத்திலேயும் இதை முறையிட்டிருக்கிறோம். அவருடைய உதவியோடு விரைவில் அந்த 100 கோடி ரூபாயைப் பெற்று ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.



2000 மார்ச் 29]

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணிலே விளைகின்ற மரம், செடி, கொடி போன்ற தாவர இனங்களுக்கு மனித உடலில் தோன்றுகின்ற எல்லா நோய்களையும் தீர்க்கின்ற ஆற்றல் இருப்பது இயற்கை தந்திருக்கின்ற வரப்பிரசாதமாகும். ஆனால், எந்த நோயை, எந்த வகைப்பட்ட தாவரங்கள் தீர்க்கும் என்பதைக் கண்டறிய முயன்ற மனித முயற்சியினுடைய விளைவுதான் சித்த வைத்தியம். எனவே, இந்த சித்த வைத்தியம் செவி வழியாகவே காப்பாற்றப்பட்டு வந்த காரணத்தினால், குறிப்பிட்ட கட்டத்தில் மிக உயர்ந்த வளர்ச்சி பெற்று, அந்த உயர்ந்த வளர்ச்சியோடு அழிந்து விட்டதாகத்தான் இதுவரையிலும் சொல்லப்படுகிறது. ஆனால், இப்போது சொல்லப்படுகிற இந்த சித்த வைத்திய முறை, பழைய தமிழ் மண்ணில் கண்டறியப்பட்ட சித்த வைத்திய உண்மைகளில் இன்னும் ஒரு குறிப்பிட்ட அளவுகூட வெற்றிபெறவில்லை என்று பலரும் சொல்கிறார்கள். எனவே, இந்த விஷயத்தின் நுட்பம் என்ன என்பதுபற்றி கண்டறிவதற்காக பொருத்தமான அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, கடந்த காலத்தில் தமிழ்நாட்டில் சித்த வைத்தியத் துறையில் ஏற்பட்டிருந்த முன்னேற்றம் பற்றியும் நிகழ்காலத்தில் ஏற்பட்டிருக்கின்ற விஷயங்களைப் பற்றியும் ஆராய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, பல ஆண்டுகளுக்கு முன்னாலே சித்த மருத்துவத்திலேயிருந்த அந்த மகிமை இடைக்காலத்திலே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிட்டது என்பது உண்மை. அதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். நம்முடைய முதல்வர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக்கொண்ட உடனே அந்த மருத்துவ நூல்கள்கூட சரியாக இல்லாது இருந்த ஒரு சூழ்நிலையை மாற்றி, அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கி அந்த சித்த மருத்துவ நூல்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, சித்த மருத்துவத்திலே ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும் என்பதற்காக—இதுவரையிலும் மேல்பட்டப்படிப்பு இல்லாமல் இருந்தது—இப்போது எட்டு துறைகளிலே மேல்பட்டப்படிப்புகளும் தொடங்கப்பட்டு, கடந்த காலத்திலே எப்படியெல்லாம் சித்த மருத்துவத்திலே நோய்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்களோ, அந்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2000 மார்ச் 29

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம் மூலமும், யுனானி போன்ற மருத்துவம் மூலமும் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த முடியும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். தாம்பரம் சானடோரியத்திற்குக்கூட தமிழகத்தின் பல்வேறு மூலைகளிலேயிருந்து பல டாக்டர்கள், வருகிறார்கள். வாணியம்பாடியிலிருந்து அக்பர் கவுசர், அதேபோல, பெங்களூரிலிருந்து டாக்டர் சுந்தரமூர்த்தி என்கிற ஒரு தமிழர், அதேபோல, வேலூரிலே உள்ள அர்ஜுனன் என்கிற டாக்டர் இப்படிப் பல டாக்டர்கள் தாம்பரம் சானடோரியத்திற்கு வந்து சில நோயாளிகளைத் தத்து எடுத்துக்கொண்டு, பரிட்சார்த்தமாக சிகிச்சை அளித்து முடித்தார்கள். நம்முடைய அரசோ அல்லது நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏதாவது பல்கலைக்கழகங்களோ இதுபோன்ற சித்த மருத்துவம்மூலம், யுனானி மருத்துவம்மூலம் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தக்கூடிய டாக்டர்களுக்கு ஓர் அங்கீகாரத்தை வழங்கினால்தான் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள், இல்லையென்று சொன்னால் நோய் முற்றிப்போன ஒரு எய்ட்ஸ் நோயாளி வந்து, உடனடியாக மருந்து கொடுத்து செத்துவிட்டார் என்று சொன்னால், போலி டாக்டர் என்று ஒரு பட்டத்தைச் சூட்டிவிடுகிறார்கள். இப்படி நல்ல மருத்துவர்களுக்கெல்லாம்கூட போலி டாக்டர்கள் என்கிற ஒரு பட்டம் வந்துவிடுகிற காரணத்தினாலே, நம்முடைய அரசு உடனடியாக அவர்களுக்கு ஏதாவது ஓர் அங்கீகாரத்தை பல்கலைக்கழகம் மூலமாகவோ அல்லது ஏதாவது ஒரு நிறுவனத்தின் மூலமாகவோ கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்திலே இந்த நோய்களைத் தீர்ப்பதாகத் தெரிவித்து இருக்கின்ற மருத்துவர்கள், வல்லுநர்கள் அந்த மருந்துகளை 30 நாட்கள், 60 நாட்கள், 90 நாட்கள் வரையில் கொடுத்து, படிப்படியாக சில நன்மைகள் இருப்பதை அவர்கள் நிரூபித்து இருக்கிறார்கள். நன்மைகள் என்பது வேறு; Cure என்பது வேறு. நன்மைகள் ஏற்படுகிற காரணத்தாலேயே முழு cure ஏற்படுவதில்லை. காச நோய்க்கு அப்படித்தான் தொடக்க காலத்திலே கொடுத்த மருந்துகள், காச நோய் விளைவைத் தடுத்துக் கொண்டிருந்ததே தவிர, காசநோயை முழுவதுமாக நீக்கி விடவில்லை. அதைப்போல, இறுதிக் கட்டத்தில் எய்ட்ஸ் நோய் முழுவதையும் அந்த மருந்து நீக்குகிறதா அல்லது அந்த நோயினுடைய



2000 மார்ச் 29]

விளைவுகளைத் தடுத்து நிறுத்துகிறதா என்பது மேலும் பரிசீலிக்கப்பட வேண்டும். இரண்டாவது, இந்த குறிப்பிட்ட டாக்டர்களை யாரும் போலி டாக்டர்கள் என்று சொல்ல முடியாது. அவர்களெல்லாம் பரம்பரை வைத்தியத்தினால் தகுதி பெற்றவர்கள். அவர்களை போலி வைத்தியர்கள் என்று சொல்வது கிடையாது. பட்டம் இருப்பதாகவே போலியாக நடிக்கிற டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக மூல வினா எழுப்பிய திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பல பரம்பரை வைத்தியர்கள் தாங்கள் அறிந்த மருத்துவக் குறிப்புகளை இரகசியமாக தங்களுக்குள்ளேயே வைத்திருந்து, அதை எவருக்கும் சொல்லாமல் இறந்துவிடுகிறார்கள். இதுபோன்ற முறையான மருந்துகளை வைத்து இருப்பவர்களைக் கண்டறிந்து, அதற்குக் காப்புரிமை வழங்கி, அந்த மருந்துகளை வெளிக்கொண்டுவர அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதோடு Parkinson மற்றும் சர்க்கரை வியாதிக்கு இதுவரை எந்தவித மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதை சித்த வைத்தியத்தின் மூலம் கண்டுபிடிப்பதற்கு ஆய்வுக் குழு தனியாக அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 125, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**125—**

**24 மணிநேர சுகாதார நிலையம்**

***16657—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் இயங்கிடச் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

[2000 மார்ச் 29

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு ஆணை (டி) எண் 745, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நாள் 27-6-1996-ல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களை மட்டுமே 24 மணி நேர நிலையங்களாகத் தரம் உயர்த்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி வட்டாரத்தில் உள்ள விக்கிரமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணிநேர நிலையமாக இயங்கிடச் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமங்கலம் என்பது நிறைய கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பகுதி. ஏறக்குறைய 10 கிலோமீட்டர் சுற்றளவிலே எந்த மருத்துவமனையும் கிடையாது. அந்தப் பகுதிக்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட வந்திருக்கிறார்கள். எனவே, அது ஒரு கிராமப்புறப் பகுதியாகவும், நிறைய மக்கள் தொகையைக் கொண்ட பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால், அதை அரசு மீண்டும் மறு பரிசீலனை செய்து 24 மணி நேர மருத்துவமனையாக மாற்றுவதற்கு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட இந்த அவையிலே நான் சொல்லும்போது ஓர் ஒன்றியத்திற்கு ஒரு 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையம்தான் வழங்கப்படும் என்று தெரிவித்து இருந்தேன். அந்த அடிப்படையிலே இப்போது 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலே தேவைப்பட்டால், நிதிநிலையைக் கருத்திற்கொண்டு இன்னும் 100 இடங்களிலே 24 மணி நேர மருத்துவமனைகள் தொடங்குவதுபற்றி அரசு முயற்சிக்கும்; அப்போது இதுபற்றிப் பரிசீலிக்கும்.



2000 மார்ச் 29]

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விக்கிரமங்கலம் பற்றிய கேள்வியா?

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 13 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் இல்லை. போதுமான மருந்துகள் இல்லை. விரைவில் மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும். மருந்துகளைக் கொடுக்க வேண்டும். தானிப்பாடி அரசு மருத்துவமனையிலே 3 மருத்துவர் பணியிடங்கள் இருந்தும், ஒருவர்கூட இல்லாத நிலையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணை வினாவா? உட்காருங்கள்.

வினா எண் 126, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**126—**

**வருவாய் கிராமங்கள்**

***26014—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரிய வருவாய் கிராமங்களை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வில்லுக்குறி கிராமத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். அரசாணை (நிலை) எண் 878, வருவாய்த் துறை, நாள் 3-9-1996-ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 26 பெரிய வருவாய்

[2000 மார்ச் 29

கிராமங்களைப் பிரித்து, பழைய 26 கிராமங்களுடன் 26 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) அதில் கல்குளம் வட்டத்தில் உள்ள வில்லுக்குறி கிராமத்தை இரண்டாகப் பிரித்து வில்லுக்குறி மற்றும் பரசேரி ஆகிய கிராமங்களைத் தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

*முற்பகல் 9-55*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று என்னுடைய தொகுதிக்குட்பட்ட இரணியல் கிராமமும் மிகப் பெரிய கிராமமாக உள்ளது. அதை இரண்டாகப் பிரித்து பேயங்குழியை மையமாக வைத்து, பேயங்குழி கிராமம் என்ற ஒரு புதிய கிராமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** நான் வில்லுக்குறியிலே நிற்கிறேன். மற்ற இடத்திற்கு வர விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பெரிய வருவாய் கிராமங்களை இரண்டாகப் பிரிப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று கல்குளம், விளவங்கோடு போன்ற பெரிய தாலுகாக்களையும் பிரிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா? அப்படி கிராமங்களைப் பிரிக்கிற நேரத்தில், அங்கேயிருக்கிற பஞ்சாயத்து உறுப்பினர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் கூட்டி, இதுசம்பந்தமாக ஆலோசனை பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரனின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 127, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2000 மார்ச் 29]

**127—**

### நூத்தலாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***16537—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நூத்தலாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது ஒப்பளிப்பு செய்யப்பட்டது?

(ஆ) இத்திட்டத்தினால் பயனடையும் கிராமங்கள் எத்தனை?

(இ) இந்தத் திட்ட வேலை எப்பொழுது முடியும் என்பதை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) நூத்தலாபுரம் மற்றும் 14 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் அனைத்தும் முடிவடைந்து, தற்போது சோதனை ஓட்டத்தில் (trial run) உள்ளது. விரைவில் மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 128, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**128—**

### காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***23608—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், குண்டடம் பகுதியில் அரசால் செயல்படுத்த உள்ள காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எஸ். இராமநாதபுரம், எஸ். காஞ்சிபுரம், கோப்பன கவுண்டன்பாளையம், குப்பணங்கோவில், காதப்புள்ளபட்டி மற்றும் சென்னிமலைபாளையம் ஆகிய ஊர்கள் சேர்க்கப்பட்டுள்ளனவா?

[2000 மார்ச் 29

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 6 ஊர்களும் முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டபோது அந்த ஊர்களெல்லாம் சேர்க்கப்படவில்லை. இப்போது அந்த ஊர்களைச் சேர்த்திருப்பதற்கு மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. அடுத்து, பில்லூர்-அத்திக்கடவு திட்டம் என்பது மிக அருமையான திட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிறபோது முழுமையாகத் தண்ணீர் வருகிறது. அங்கே 20 கிராமங்களுக்குத் தண்ணீர் வரவில்லை என்று நேற்றைக்கு தொலைபேசியிலே ஒரு புகார் வந்திருக்கிறது. இப்பொழுது அங்கே கடுமையான வெயில். இந்தத் திட்டத்தின் பயன் முழுமையாகக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இதே திட்டமா?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** இந்தத் திட்டத்திலே இல்லை. பொங்கலூர்-அத்திக்கடவு திட்டத்திலே 20 ஊர்களுக்கு இன்னும் தண்ணீர் சரியாக வரவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் வரவில்லையே? நான் வந்தபோது தண்ணீர் வருகிறது, வராதபோது தண்ணீர் வரவில்லை என்கிறீர்களே?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** ஆமாம். நீங்கள் வரும்போது ஒழுங்காக தண்ணீர் கொடுத்து விடுகிறார்கள். பிறகு 20 ஊர்களுக்குத் தண்ணீர் வரவில்லை. நீங்கள் கடுமையாகச் சொல்கிறீர்கள். தண்ணீர் கொடுக்கிறார்கள். பிறகு பழையபடி கடைசியாக உள்ள ஊர்களுக்குத் தண்ணீர் வருவதில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அது சம்பந்தமாக எழுதிக் கொடுப்பீர்களேயானால் நாளைக்கே நடவடிக்கை எடுக்கிறேன். ஆனால் இதுபோல் காலம் தாழ்த்தி, கேள்வி-பதில் நேரத்திலேயே இதனைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பது அவ்வளவு நன்றாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற இடையில் ஏற்படுகிற பிரச்சினைகளை அவ்வப்போது என் கவனத்திற்கோ அல்லது உரிய தலைமை அதிகாரிகள் கவனத்திற்கோ கொண்டுவந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.



2000 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டு, தண்ணீர் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலே தண்ணீர் ஏற்றுகின்ற நேரத்தில் குழாய்கள் எல்லாம் உடைந்துவிடக்கூடிய சூழ்நிலையைப் பல்வேறு இடங்களிலே பார்க்கிறோம். எதிர்காலத்திலே இப்படி குழாய்கள் உடைவது குழாய்களில் பழுது ஏற்படுவதாலா அல்லது தொழில்நுட்பம் காரணமாகவா அல்லது மோசமான குழாய் என்பதாலா என்பதை ஆராய்ந்து, இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை 21,000-க்குமேல் சிறிய திட்டங்களை முடித்திருக்கிறோம். ஆனால் திட்டத்தில் அப்படிப்பட்ட நிலைமை எங்கேயாவது ஓரிடத்தில் இருந்தால்கூட அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படாமல் இல்லை. உறுப்பினர் கூறுகின்ற தகவல், எந்த ஊர், எந்தத் திட்டத்தில், எங்கே பழுதடைந்திருக்கிறது என்று சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்பு, 15 ஆண்டுகளுக்கு முன்பு மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. மிக மிக நலிவடைந்திருக்கிற, வருமானம் இல்லாமல் இருக்கிற பஞ்சாயத்துகளில் உள்ள குடிநீர்த் தொட்டிகள் முற்றிலுமாகப் பழுதடைந்திருக்கின்றன. ஊராட்சி மன்றத்திலிருந்து 50 விழுக்காடு நிதி கொடுத்தால்தான் அவை பழுதுபார்க்கப்படும் என்று புதிய அரசு ஆணை வெளியிடப் பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றத்தில் நிதி இல்லை. ஆகவே, மிக மிக நலிவடைந்திருக்கிற ஊராட்சி மன்றங்களுக்குத் தனியாக சிறப்பு நிதி வழங்கி, மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளைப் பழுதுபார்த்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 29

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு முறைகளாக வகுக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்தப் பிரச்சினை புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வரலாம் என்று நான் கருதுகிறேன். அந்தப் புனரமைப்புத் திட்டத்தில் வருகிறபோது 50 சதவிகிதம் நிதியைப் பஞ்சாயத்தும், மீதி இருப்பதைக் குடிநீர் வடிகால் வாரியமும் செலுத்தி அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்ளலாம் என்று விதி அமைத்திருப்பது உண்மை. ஆனால் அப்படிப்பட்ட 50 சதவிகித நிதியை அந்த பஞ்சாயத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிதிதலைப்பின்கீழ் முறையாகச் செலவழிக்கப்பட்டு, அப்படி நிதி இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைக்குமானால் அது பற்றிப் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொண்டு குடிநீர் வழங்குவதை நாம் நிச்சயமாக ஏற்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே, பர்கிட் மாநகரத்திலே இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் போடப்பட்டிருக்கக்கூடிய குழாய்கள் எல்லாம் மிகத் தரம் குறைந்ததாக இருக்கின்றன. ஆகவே அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்கிற கோரிக்கையை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வந்த நேரத்திலேயே பாளையங்கோட்டையிலே தெரிவித்தேன். அமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக, அங்கே அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு வந்தார்கள். ஆனால் இப்போது, அந்தக் குழாய்கள் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. நீங்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் எந்த இடத்திலாவது, இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொன்னாலும்கூட, இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்தக் கிராமங்களுக்கு முறையாகத் தண்ணீர் வழங்கப்படவில்லை. ஆகவே அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே அதற்காகத்தான் குறிப்பிட்டேன்.



2000 மார்ச் 29]

இப்படிப்பட்ட பிரச்சினைகள் குறித்து கேள்வி நேரத்தில் மட்டும் எழுப்பி காலம் தாழ்த்தக்கூடாது என்று கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, ஏறத்தாழ ஓர் ஆண்டைத் தாண்டிவிட்டது. ஓர் ஆண்டுக்கு முன்பு என்னிடத்திலே தெரிவித்தபோது, நான் சொல்லியும், அதிகாரிகள் கவனக்குறைவாக இருந்திருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இப்போதுதான் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலித்து, அதன்மீது நடவடிக்கை தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 129, திரு. ம. சண்முகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**129—**

## பதப்படுத்தும் தொழிற்சாலை

***30846—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு, பொள்ளாச்சிப் பகுதியில் அதிகமாக விளைகின்ற தக்காளி போன்ற பழவகைகளைப் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவுக் பகுதியில் ஏராளமான காய்கறிகளும் பழங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. குளிர்பதனக் கிடங்குகளாவது வரும் ஆண்டிலே அமைக்கப்படுமா என்பதையும், அதுபோல உழவர் சந்தைகள் இப்போது மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்ற நிலையில், விவசாயிகளும் நுகர்வோர்களும் பயன்படுகின்ற அந்த நல்லத் திட்டம் கிணத்துக்கடவுப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுமா என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வட்டம், கிணத்துக்கடவு பகுதியில் 778 எக்டேர் பரப்பளவில் சுமார் 8,558 மெட்ரிக் டன் தக்காளிப் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பகுதியில் தக்காளிப் பழ வகைகளை பதப்படுத்தும் தொழிற்சாலைகளோ, குளிர்பதனக் கிடங்குகளோ இல்லை என்பது உண்மை. இங்குள்ள சாகுபடிப் பொருட்களைப் பயன்படுத்தி தொழிற்சாலை அமைக்கும் அளவிற்கு அவை போதுமானதாக இல்லையென தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்த் துறை ஆணையர் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் தக்காளி 25 ஆயிரம் எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு 2,45,000 டன் உற்பத்தியாகிறது. தக்காளி சாகுபடியில் சேலம் மாவட்டம் முதன்மையில் உள்ளது. தருமபுரி, கோவை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள் முறையே அடுத்தடுத்து உள்ளன. கோவை மாவட்டத்திலே 11 தனியார் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் தற்போது இயங்கி வருகின்றன. தமிழக அரசால் பழம் பதப்படுத்தப்படும் தொழிற்சாலை ஒன்று கிருஷ்ணகிரியில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார்கள் பழம் பதப்படுத்தக்கூடிய தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களானால், தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம், மத்திய உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம், புதுடில்லி மூலம் தக்காளி பதப்படுத்தப்படும் தொழிற்சாலை அமைத்திட அதிகபட்சமாக ரூபாய் ஐம்பது இலட்சம் குறுகிய காலக் கடன், 4 சதவிகித வட்டியில் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 130, திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**130—**

### நீர்த்தேக்கத் திட்டம்

***6326—திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை வட்டத்தில் அடங்கிய திருத்தண்டலத்தில் கிருஷ்ணா நதிநீர் சேமிப்புக்காக



குசஸ்தலை ஆற்றில் புதிதாகக் கட்டப்பெறும் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் எந்நிலையில் உள்ளன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ் கிடைக்கும் குடிநீரைத் தேக்கி வைக்க திருத்தண்டலம் மற்றும் ராமஞ்சேரி ஆகிய இடங்களில் நீர்த்தேக்கங்களை அமைக்கும் பணியை மேற்கொள்வதற்காக திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருந்ததாலும், கிணறுகளும், வீடுகளும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளும் மூழ்கும் சூழ்நிலை இருப்பதாலும், இத்திட்டத்திற்காக ஆய்வு செய்யும்போது பொதுமக்கள் உடன்படாமலும் தடை செய்தனர். எனவே, மேற்கூறிய திட்டத் தளத்தின் ஆய்வு, ஆய்வு நிலையிலேயே உள்ளது.

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள, குறிப்பாக குறுவயல், சேத்துப்பாக்கம், திருத்தண்டலம், புன்னப்பாக்கம், ஆயத்தம்பட்டு, அழிஞ்சிவாக்கம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்தவர்கள் விவசாயத்தையே நம்பி இருக்கின்ற காரணத்தினால், அந்த நீர்த்தேக்கத்தை மாற்றி, வேறு எங்காவது சேமிக்க அரசிடம் தக்க குறிப்புகள் உள்ளனவா என அறிய விரும்புகிறேன். விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். அந்த இடத்தில் நீர்த்தேக்கம் தேவையில்லை என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நீர்த்தேக்கங்களை அமைப்பதற்காக அரசு ஆய்வு செய்தபொழுது விவசாயப் பெருங்குடி மக்களும் மற்றவர்களும் அதிகாரிகளை ஊரினுள்ளேகூட விடாமலே தடுத்து நிறுத்திவிட்டார்கள். தீக்குளிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அரசு அதிகாரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் திரும்பி வந்திருக்கிறார்கள். நானே ஒருமுறை அவர்களை அழைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களை வைத்து பேசிப் பார்த்தேன். அவர்கள் எதற்கும் உடன்படுவதாக இல்லை. அப்படி ஒரு நிலையை எடுக்க வேண்டுமானால் மிகப் பெரிய Law and Order situation-ஐ நாம் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த இரண்டு ஏரிகளை அமைப்பதற்காக கிட்டத்தட்ட 7,000 ஏக்கர்களை நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. சுமார் 1,500 வீடுகளையும் மேலும் பல

[2000 மார்ச் 29

கட்டடங்களையும், மற்றவற்றையும் எடுக்க வேண்டியுள்ளது. சிறிதும் பெரிதுமாக 30 கிராமங்களைக் காலி செய்ய வேண்டியிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், சற்றொப்ப 50 ஆயிரம் மக்களை வெளியேற்ற வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், மாற்று ஏற்பாடு செய்வதற்காக அரசு யோசனை செய்து கொண்டிருக்கிறது. அதிலே ஒன்றுதான் கிட்டத்தட்ட 3645 M.F.C.D. உள்ள செம்பரம்பாக்கம் ஏரியைக் குடிநீருக்காக எடுத்துக்கொள்ளலாமா, பாசனப் பகுதியிலேயிருந்து அதை எடுத்துப் பிரிக்கலாமா என்பதை அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 131, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**131—**

**போக்குவரத்துக் கிளை பணிமனை**

***30052**—**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போச்சம்பள்ளி வட்டத்தில் போச்சம்பள்ளியினைத் தலைமையிடமாகக் கொண்டு அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை பணிமனை தொடங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போச்சம்பள்ளி வளர்ந்து வரும் ஒரு வட்டத் தலைமையிடமாகும். தமிழ்நாட்டிலேயே பெரிய சந்தைகளில் ஒன்று போச்சம்பள்ளி சந்தை. மேலும், அது வளர்ந்துவரும் நகரமாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே Taluk Office, Court மற்றும் விவசாயத்திற்காக வேண்டிய உரங்கள் விற்பதற்குரிய பெரிய godown-இருப்பதோடு, தொழில் தொடங்குவதற்காக TACID என்ற தொழில் நிறுவனம் மூலம் சுமார் 250 தொழில் நிறுவனங்களைக் கொண்ட ஒரு புதிய தொழிற்பேட்டை



2000 மார்ச் 29]

உருவாகிக்கொண்டிருக்கிற காலகட்டத்தில், அங்கே ஒரு கிளை அலுவலகம் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நீண்ட நாட்களாக நேரிலும், மனு மூலமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அருருக்கு அமைச்சர் வருகை தந்தபோது, அங்கே அலுவலகத் திறப்புவிழா நிகழ்ச்சியின்போதுகூட மேடையிலேயே கோரிக்கை வைத்திருக்கிறோம். எங்கள் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் மூலமாகவும் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். அங்கே ஒரு கிளை பணிமனை திறந்தால், பெரும்பாலும் விவசாயிகள் இருக்கின்ற அந்தப் பகுதிக்கு கிராமங்களிலே பல்வேறு நிலைகளிலே இருக்கின்றவர்களுக்குப் பேருந்து வசதியை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். மேலும், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கிருஷ்ணகிரியிலே உழவர் சந்தை தொடங்கப்பட்டு நல்லமுறையிலே நடைபெற்று வருகின்றது. விவசாயிகள், தங்களுடைய விவசாயப் பொருட்களை அங்கு கொண்டு வருவதற்கும் இது ஆரம்ப நிலையாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, விரைவிலே போச்சம்பள்ளியிலே ஒரு கிளை பணிமனையைத் திறக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் அந்த மாவட்டத்திலே பொம்மிடியிலே ஒரு கிளை தொடங்கப்பட்டது. பல உறுப்பினர்களிடமிருந்தும், அவரவர் தொகுதிகளிலே கிளை அலுவலகம் வேண்டுமென்று இதுபோன்ற கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஆனால், குறிப்பாக, ஒரு கிளைக்கும் மற்றொரு கிளைக்கும் இடையில் 40 கிலோமீட்டர் தூரம் இருந்தால்தான் ஒரு புதிய கிளையைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. குறைந்தபட்சம் 25 பேருந்துகளாவது அங்கே தங்குகின்ற, இயக்குகின்ற வாய்ப்பும் இருக்க வேண்டும். இந்த இரண்டும் இருக்கின்ற நேரத்தில், போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலையையும் கருத்தில்கொண்டு இதுபோன்ற கிளைகளைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளிக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

[2000 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**132—**

## சுற்றுச் சாலைகள் அமைத்தல்

***18236*—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரத்தில் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலைக்கும் திருச்சி நெடுஞ்சாலைக்குமான சுற்றுச் சாலைகள் அமைக்கும் பணிகள் அரசின் ஆய்வில் உள்ளனவா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கன்னியாகுமரி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையினைத் தவிர்த்து, மீதமுள்ள சாலையான மதுரை-திருச்சி, மதுரை-கன்னியாகுமரி சாலைகளை இணைத்து மதுரை மாநகருக்குச் சுற்றுச் சாலை அமைக்கும் பணியானது நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்பட்டு வருகிறது. பணிகள், மதுரை மாநகராட்சியின் வைப்பு நிதியின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-கன்னியாகுமரி, மதுரை-திருச்சி செல்லக்கூடிய சாலைகளை இணைத்து சுற்றுச் சாலை அமைக்கும் பணி நடந்து கொண்டிருப்பதை நான் அறிவேன். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்பது, மதுரை-திருச்சி சாலையிலிருந்து மதுரை-திண்டுக்கல் சாலை வரையிலான அந்தச் சுற்றுச் சாலைப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? நிலங்கள் கையகப்படுத்தப் பட்டிருக்கின்றனவா? அந்த வேலை எப்போது தொடங்கப்படவிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-திருச்சி சாலையிலிருந்து, மதுரை-கன்னியாகுமரி சாலை வரையில் அமைக்கப்பட்டு வருகின்ற அந்தச் சுற்றுச் சாலையும், பாலங்களும்....



2000 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்பது வேறு.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** அதற்குத்தான் வருகிறேன். நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெறுகின்றன என்பதும், மதுரை மாநகராட்சியின் மூலம்தான் அந்த நிதியாதாரம் பெறப்பட்டது. என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அறிந்த ஒன்று. எனவே, திருச்சி-மதுரை சாலையிலிருந்து திண்டுக்கல்-மதுரை சாலையை இணைக்கின்ற அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கும் மதுரை மாநகராட்சியே முயற்சி எடுக்க வேண்டும், அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்ப வேண்டும். நிலம் கையகப்படுத்துவதற்கான ஆணையை அரசு வெளியிட வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுகுறித்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களோடும், அதிகாரிகளோடும் கலந்து பேசப்பட்டிருக்கிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கல்லுப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் வழியாகக் கொல்லம் செல்லும் தேசிய நெடுஞ்சாலைப் பணி, எவ்வளவு கிலோமீட்டர் தூரத்திற்கு, எவ்வளவு ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்டது? எப்போது அந்த வேலை முடியும்? இதற்கென்று எங்கெங்கே அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படும்? இருக்கின்ற சாலைகளை, அப்படியே போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அகலப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபடவில்லை. ஆகவே, நில ஆர்ஜிதம் செய்து அகலப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், திருமங்கலத்திலே இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் வழியாகச் செல்லக்கூடிய அந்தச் சாலை இப்போதுதான் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு இப்போது நிதி ஆதாரம் தரப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அகலப்படுத்தவில்லை என்று அங்கலாய்க்கின்றார். ஏற்கெனவே அவர்கள் கொஞ்சம் அகலப்படுத்தியிருந்தால் நாங்கள் கொஞ்சம் அகலப்படுத்தியிருக்க முடியும்.

[2000 மார்ச் 29

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 133, திரு. கோ. தளபதி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**133—**

**நெடுஞ்சாலைகள் மராமத்து**

***24719—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள் போக்குவரத்திற்குப் பயனற்றதாக உள்ளன. அரசு மராமத்து செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் 38.20 கிலோமீட்டர் சாலைகள் ரூ. 96.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்த்தளம் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. மேலும் இந்த நிதியாண்டில் 12.40 கிலோமீட்டர் சாலைகளை ரூ. 71.63 இலட்சம் மதிப்பீட்டில் NABARD திட்டத்தில் மேம்பாடு செய்யப்படவுள்ளது. நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் சாலைகள் படிப்படியாக சீரமைக்கப்படும்.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேலைகள் நடைபெறுகின்றன என்பது உண்மை. இன்னும் அதிகமான அளவிலே, மிக மோசமாக உள்ள சில சாலைகளை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சீரமைத்துத் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். இதர மாவட்டச் சாலைகள் திட்டத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே ரூ. 86 இலட்சத்திற்குப் பணிகள் இப்போது நடைபெறுகின்றன. இன்னும் ரூ. 115 இலட்சத்திற்குப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மார்ச் மாதத்திற்குப் பிறகு அந்தப் பணிகள் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 134, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**134—**

**எழுத்துகள் சீர்திருத்தம்**

***28658—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஐ, ஔ என்ற எழுத்துகளை அய், அவ் என்ற சீர்திருத்த எழுத்துகளாக மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர், மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முனைவர் வா.செ. குழந்தைசாமி போன்ற அறிஞர்கள் எல்லாம் ஐ, ஔ என்ற எழுத்துகளை அய், அவ் என்று சீர்திருத்த எழுத்துகளாக மாற்றித்தர அரசு முயலுமா என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அதைப் பரிசீலித்து, அவ்வாறு சீர்திருத்த எழுத்துகளாக மாற்ற முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டித்தான், 19-10-1978 அன்று னை, ணை, லை, ளை போன்ற

எழுத்துகளிலும், ஐ, ஔ போன்ற எழுத்துகளிலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, பல தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள், சான்றோர்கள் வலியுறுத்தியதன் அடிப்படையில், அய், அவ் என்பதை மட்டும் கைவிட்டு, பழைய ஐ, ஔ என்ற வரி வடிவங்களையே கையாளலாம் என்று *23-5-1979* அன்று மீண்டும் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்பது முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் அதற்காக ஓர் அறிக்கையைத் தந்திருக்கிறார்களே, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது. அந்த வரி வடிவங்களோடு மட்டுமல்லாமல் வேறு வகையான வரி வடிவங்களையும், எழுத்து வடிவங்களையும் மாற்ற வேண்டும், இடம் மாற்றியமைக்க வேண்டும் என்பது அவருடைய பரிந்துரை. இதுகுறித்து ஏற்கெனவே தமிழ் வளர்ச்சி மன்றத்தில் ஆய்வு செய்யப்பட்டபோது பல தமிழ் அறிஞர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததனாலும், அதேநேரத்தில் இப்படி வரி வடிவங்களை மாற்றத் தேவையில்லை என்பதாலும் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அரசு ஏற்கெனவே இந்த அவையில் உறுதியளித்திருக்கிறது. முறையாக அனைவரும் ஒத்துக்கொண்டாலன்றி இதில் அவசரப்பட்டு அரசு எந்த முடிவும் எடுத்துவிடாது என்பதை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன, தமிழ் அறிஞரா? டாக்டர் இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழக முதல்வர் அவர்கள் குமரிமுனையிலே திருவள்ளுவர் சிலையைத் திறக்கின்றபோது ஒரு புதிய அடைமொழியைக் கொடுத்தார்கள். அப்பன் நீ, அம்மன் நீ, அய்யன் நீ, மாமன் மாமனும் நீ என்ற சமயக் குரவர்களுடைய பாடலில் இருந்து எடுத்து 'அய்' என்ற அடைமொழியை நீங்கள் கொடுத்தது தெய்வப் புலவராகிய வள்ளுவருக்குச் சேர்த்த சிறப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிக் கொடுக்கின்ற அந்த அடைமொழியிலே 'அய்' என்ற அந்த இரண்டு எழுத்துகளை தமிழ் உயிரெழுத்துகளிலே வரக்கூடிய 9-வது எழுத்தாகத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு சர்ச்சையை தமிழ் அறிஞர்கள் தோற்றுவித்திருக்கிறார்கள். ஒரு வார இதழில்கூட பெரிய கட்டுரை ஒன்று, முதல் பக்கத்திலே வெளியாகி இருக்கிறது. இதுகுறித்து, நம்முடைய தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் விளக்குவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்பது இலக்கணத்திற்கே சொல்லப்பட்ட இலக்கணம். இரண்டாவதாக, திருவள்ளுவருடைய பெருமையை உயர்த்துவதற்கு அவர் திருக்குறளை எப்படி அகரத்திலே தொடங்கினாரோ அதைப்போல, அகரத்திலேயே அவருடைய பெருமைக்குரிய பெயர் தொடங்க வேண்டும் என்ற உணர்வோடு அமைந்துள்ளது. உச்சரிப்பிற்கு அது மாறுபாடு அல்ல என்ற தெளிவோடு தேவாரம், திருவாசகத்திலே, இடம்பெற்ற ஒரு சொற்றொடர், 'அய்யன்' என்ற அந்த அடிப்படையில் 'அய்யன் திருவள்ளுவர்' என்று அவரது உயர்வு கருதி, அவரது பெயருடன் அந்த அடை அகரத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஐந்தாம் தமிழாக, அறிவியல் தமிழும், அதனை வளர்த்தெடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மிகவும் அரும்பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். இப்போது தமிழ் நெடுங்கணக்கை குறியீடுகளை மட்டும் பயன்படுத்தி, 30 எழுத்துகளாகச் சுருக்கி, அவற்றைப் பயன்படுத்தினால், கணினி, இணையம் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கு இன்னும் எளிதாக இருக்கும். புதிதாக தமிழைக் கற்பவர்கள் விரைந்து கற்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையிலே இத்தகைய சீர்திருத்த முறைகளையெல்லாம் ஆய்வு செய்வதற்கு, என்னென்ன சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்பதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு ஓர் ஆய்வுக் குழுவை நியமிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்; இப்போது தமிழ்நாட்டில் கணினி, இணையம், மின் அஞ்சல் என்று சொல்லப்படுகிற E.mail இந்த மூன்றிலும் தமிழ் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. என்னைக் கேட்டால், இந்தியாவிலேயே

[2000 மார்ச் 29

ஆங்கிலத்திற்கு அடுத்து அதிகமாக இந்த மூன்றிலும் பயன்படுத்தப்படுவது தமிழ் மட்டும்தான். அந்தவகையில் இப்போது இருக்கிற வரி வடிவங்களில் எந்த இடர்ப்பாடும் இல்லை. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே தமிழக அரசு தமிழ் இணைய மாநாட்டை நடத்தி விசைப் பலகையில் இருக்கின்ற எழுத்துகளுடைய வரி வடிவங்களைத் தக்கவாறு இடமாற்றம் செய்து, தரப்படுத்தப்பட்ட விசைப் பலகை — standardisation of the key — board — என்ற அடிப்படையில், அதுவும் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் இப்போது மென்பொருள்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே, அதற்கு ஒரு குழு அமைக்க வேண்டியதில்லை. ஏற்கெனவே மாநாடு அமைத்து, எல்லாமே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இப்போது பயன்படுத்தப்படுகின்ற வரி வடிவங்களில் எந்தவிதமான இடரும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வப்புலவர் வள்ளுவர் அவர்களுடைய பெயருக்கு முன்னாலே அய்யன் என்ற பெயரை நாம் இப்போது பயன்படுத்த முடிவு செய்திருக்கிறோம். அய்யன் என்பது எந்தப் பொருளிலே வருகிறது என்பதை என்னைப் போன்றவர்கள் அறிய விரும்புகிறோம். ஏனென்றால், அது கடவுள் என்ற பெயரிலே, பொருளிலே வருமேயானால், அய்யன் என்பதை எங்களால் பயன்படுத்த முடியாது. ஆனால், தேவாரம், திருவாசகம் போன்ற இலக்கியங்களிலும் இது பயன்படுத்தப்படுவதாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான்.

"அய்யனே, துய்யனே, ஆதாரமான பொருளே"

என்று தேவாரம், திருவாசகம் வழுத்துகிறது. எனவே, அந்தப் பொருளிலேயா? அல்லது அய்யன் என்று, அய்யா என்று சாதாரணமாக எங்கள் மாவட்டத்திலே சொல்வோம், தகப்பனாருக்கு, "எங்களுடைய அய்யா" என்று சொல்வோம். தந்தை என்ற பொருளிலேயா அல்லது கடவுள் என்ற பொருளிலேயா என்பதை விளக்கிச் சொன்னால், நாங்களெல்லாம் அதைப் பயன்படுத்துவதற்குச் சௌகரியமாக இருக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நபிகள் அவர்களை நாயகம் என்று எந்தப் பொருளில் அழைக்கிறோமோ, அந்தப் பொருளில்தான் அய்யன் என்று வள்ளுவரை அழைக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



2000 மார்ச் 29]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நபிகள் நாயகம் என்று சொன்னால், நபிகளில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுத்தேனா? நீங்களாகவே எழுந்து பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடு) எங்கே கேட்டீர்கள்? நீங்களாகவே பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். சரி, பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நாயகம் என்றால் நபிகளில் நடுவானவர், முக்கியமானவர் என்ற பொருளிலேதான் அது வருகிறது. கடவுள் என்ற பொருளிலே வரவில்லை. எனவே, நம்முடைய தமிழ் இலக்கியங்களில்

"அய்யனே, துய்யனே, ஆதாரமான பொருளே....."

என்று கடவுளைச் சொல்லும்போது, அய்யன் என்று சொன்னால், கடவுள் என்று பொருள் வருகிறது. அந்தப் பொருளிலே வந்தால் நாங்கள் அதைப் பயன்படுத்த முடியாது. தந்தை என்ற பொருளிலே அல்லது மரியாதைக்குரிய ஒரு பொருளிலே என்றால் நாங்களும் அதைப் பயன்படுத்தலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தந்தை என்ற பொருளிலே வருவதாக எண்ணிக்கொண்டு, கருதிக்கொண்டு தாங்கள் அதைப் பயன்படுத்தலாம். நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்த மாட்டோம். பயன்படுத்துவதும், பயன்படுத்தாததும் தங்களுடைய விருப்பம்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 135, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**135—**

**நியாயவிலைக் கடை**

***20466—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், நல்லிக்குறிச்சியில் தனியாக நியாயவிலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், நல்லிக்குறிச்சி கிராமத்தில் ஒரு புதிய நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு 356 குடும்ப அட்டைகளுடன் 7-1-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த என்னுடைய தந்தை திரு. தங்கபாண்டியன் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில், முழுவதுமாக ஆதிதிராவிட மக்களே வாழும் நல்லிக்குறிச்சி கிராமத்திற்கு அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் அங்கே நியாயவிலைக் கடையை அமைத்திருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 136, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**136—**

### அரசு தொழிற்பயிற்சி நிலையம்

***28074—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு ஒன்றியத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆணை வழங்கியிருக்கிறது. அதற்காக தொகுதி மக்களின் சார்பாக நான்



நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில் நீடாமங்கலத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிற அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர்கள் நலன் கருதி நிரந்தரக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**137—**

### குற்றவியல் நீதிமன்றம்

***28126—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் இயங்கி வரும் குற்றவியல் நீதிமன்றம் எண் 2-ஐ சோளிங்கருக்கு மாற்றுவதை நிறுத்தி அரக்கோணத்திலேயே இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணம் நகரில் இயங்கி வந்த குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 2-ஐ சென்னை உயர்நீதிமன்ற அனைத்து நீதிபதிகள் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், சோளிங்கருக்கு மாற்றி அரசு ஏற்கெனவே ஆணை வெளியிட்டு, அந்த நீதிமன்றம், 4-10-1999 முதல் இயங்கி வருகிறது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரில் கடந்த 118 ஆண்டுகளாக இயங்கி வந்த ஒரு நீதிமன்றம் திடீரென்று சோளிங்கருக்கு மாற்றப்பட்டுள்ளது. சோளிங்கர் இடம் பெற்றுள்ள வாலாஜா தாலுகாவும், அரக்கோணம் தாலுகாவும் ஏறத்தாழ ஒரே அளவு மக்கள்தொகை கொண்ட தாலுகாக்கள் ஆகும். அப்படி இருக்கின்றபோது இந்தக் குற்றவியல் நீதிமன்றம் இடம்

[2000 மார்ச் 29

பெற்றிருக்கின்ற வாலாஜா தாலுகாவில் மட்டும் 8 நீதிமன்றங்கள் இயங்குகின்றன. அரக்கோணம் தாலுகாவிலே ஓர் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் மட்டுமே இயங்கி வருகின்றன. இப்போது இந்தக் குற்றவியல் நீதிமன்றம் எண் 2 சோளிங்கருக்கு மாற்றப்பட்டுவிட்டதால், தற்போது விசாரிப்பதற்கு ஒரே ஒரு நீதிபதி மட்டும் உள்ள நிலையில், ஏறத்தாழ 2,300 வழக்குகள் இதுவரையில் விசாரிக்கப்படாமல் நிலுவையில் உள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் இதனை மீண்டும் மறுபரிசீலனை செய்து, அந்தக் குற்றவியல் நீதிமன்றம் எண் 2-ஐ மீண்டும் அரக்கோணத்திலேயே இயங்கச் செய்வார்களா அல்லது ஒருவேளை புதிய நீதிமன்றத்தை உருவாக்கித்தர முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே நீதிபதிகளுடைய Full Court, முழுவதும் தீவிரமாகப் பரிசீலித்து சோளிங்கருக்கு நீதிமன்றம் அளிக்கப்பட வேண்டும், அரக்கோணத்தில் இந்த நீதிமன்றம் இருக்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்து, அதனடிப்படையில் இந்த உத்தரவு 1996 ஆம் ஆண்டிலேயே போடப்பட்டுவிட்டது. அதற்கு எதிர்ப்பு இருந்தாலும், அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு சோளிங்கரில் நீதிமன்றம் திறக்கப்படுவது நியாயம், தேவை என்ற அடிப்படையில்தான் உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது. அதனடிப்படையிலேதான் தற்போது அந்த நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**138—**

### கயிறு ஆராய்ச்சி நிலையம்

***26887—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பூசாரிப்பட்டியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



2000 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், பூசாரிப்பட்டியில் கயிறு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 139, திரு. கே.சி. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**139—**

### சுற்றுலா மையம்

***26339—திரு. கே.சி. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கங்கைகொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் படிக்கிறேன். தமிழ்நாட்டில் எந்த ஓர் இடத்திலும் சுற்றுலா மையம் கட்டப்படுவதில்லை. எனவே, கங்கைகொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கங்கைகொண்ட சோழபுரம் கோவில் ஒரு பிரசித்தி பெற்ற கோயில். அங்கு பல்வேறு நாடுகளிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும் பயணிகள் அடிக்கடி வந்து பார்வையிடுகிறார்கள். அத்திருத்தலத்தை, தங்கிப் பார்வையிடுவதற்குப் போதுமான இடவசதி கிடையாது. ஆகவே, இதனை மறுபரிசீலனை செய்து அங்கே ஒரு சுற்றுலா மையத்தை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 29

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரம் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான பட்டா நிலம், ஜெயங்கொண்டம்-சிதம்பரம் பிரதான சாலையை ஒட்டியுள்ளது. அந்த இடத்தில் ஓய்வு இல்லம் மற்றும் கழிப்பறை கட்டுவதற்கு, சுற்றுலாத் துறையின் சார்பாக 2 இலட்சம் ரூபாயும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் பரவலாக்கும் பகுதி திட்டத்தின்கீழ் 2 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் ஓய்வு இல்லம் கட்டுவதற்கு நிலம் பொதுப் பணித் துறை வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 140, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**140—**

**சமுதாயக் கூடம்**

***29477—திரு. இரா. பெர்னார்டு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தெந்த மீனவர் கிராமத்தில் சமுதாயக் கூடம் உள்ளது?

(ஆ) சமுதாயக் கூடம் இல்லாத மீனவ கிராமங்களில் உடனடியாகக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 44 கடலோர மீனவ கிராமங்களில், கீழ்க்கண்ட 22 மீனவ கிராமங்களில் சமுதாய நலக் கூடங்கள் உள்ளன:—



2000 மார்ச் 29]

(1) ஆரோக்கியபுரம்

(2) கோவளம்

(3) பள்ளம்

(4) மேல மணக்குடி

(5) புத்தன்துறை

(6) ஆழிக்கல்

(7) கீழமுட்டம்

(8) மேலகடியப்பட்டிணம்

(9) சின்னவிளை

(10) பெரியவிளை

(11) குளச்சல்

(12) கோடிமுனை

(13) வாணியக்குடி

(14) நடுத்துறை

(15) இணையம்

(16) இணையம் புத்தன்துறை

(17) இராமன்துறை

(18) பூத்துறை

(19) தூத்தூர்

(20) இரவிபுத்தன் துறை

(21) வள்ளவிளை

(22) நீரோடி

(ஆ) சமுதாய நலக் கூடம் இல்லாத மீதமுள்ள 22 மீனவ கிராமங்களிலிருந்து கோரிக்கை பெறப்பட்டால், இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

[2000 மார்ச் 29

**திரு. இரா. பென்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 44 கடலோர மீனவ கிராமங்களில், 22 மீனவ கிராமங்களில் சமுதாய நலக் கூடம் அமைக்க இருப்பதற்கு நன்றி தெரிவிப்பதோடு, மீதியிருக்கிற 22 கிராமங்களும் நெருக்கடியான பகுதிகள் என்பதைக் கருத்திலேகொண்டு, அங்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற, நான் இங்கே வைக்கின்ற இந்த வேண்டுகோளையே கோரிக்கையாக ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை எந்த அரசும் செய்யாத ஒரு திட்டத்தை, அதாவது உள்நாட்டு மீனவர்களுக்கு 1000 வீடுகள் கட்டப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே, காருண்யமிக்க கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, உள்நாட்டு மீனவர்கள் அதிகமாக உள்ள மீனவர் பகுதிகளிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நலக் கூடம் அமைக்க ஒரு மீனவ கிராமத்தை, மாதிரி கிராமமாகத் தேர்வு செய்ய, அதில் 75 வீடுகள் இருக்க வேண்டும். அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் 75 இருக்க வேண்டும். அப்படி இருக்கும்பட்சத்தில், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து சமபங்காக வழங்கி, அதில் ஒன்றேகால் இலட்சம் ரூபாயில் சமுதாய நலக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்தக் கிராமங்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்று சொன்னால், அவை, மாதிரி கிராமங்களாக இருந்தால், 75 வீடுகள் அடங்கியிருந்தால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். அப்படி இல்லாவிட்டால், அந்தக் கிராமத்தில் 75 வீடுகள் கட்டிக் கொடுத்து, அங்கே சமுதாய நலக் கூடம், மாதிரி கிராமம் மூலம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யும். இன்னொன்றும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்ற ஒரு நிதியைத் தருகிறார்கள். அந்த நிதி மூலமாகக்கூட, மீனவ கிராமங்களுக்குச் சமுதாய நலக் கூடம் கட்டிக் கொடுக்கலாம். அல்லது 'நமக்கு நாமே' என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலம்கூட, கால் பங்கை மீனவர்களிடமிருந்து பெற்று, மீதிப் பங்கை சமுதாய நலக் கூடம் அமைப்பதற்கு வழங்க இந்த அரசு ஆவன செய்யும். இதன் மூலமாகக்கூட, சட்டமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்யலாம் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.



2000 மார்ச் 29]

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) கச்சத்தீவுப் பகுதியில் மீனவர் மாரடைப்பால் இறந்தது

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன், நீங்கள் உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இன்று காலையிலே வானொலியின் மூலமாக வந்த ஒரு செய்தி. நம்முடைய தமிழக மீனவர்களை, கச்சத்தீவுப் பகுதியிலே மீன்பிடிக்கச் சென்றவர்களை, இலங்கை அரசு கைது செய்து, அப்படிக் கைது செய்தவர்களிலே ஒருவர் மாரடைப்பால் மரணம் அடைந்துவிட்டதாகவும், அவருடைய உடல் இலங்கையிலே இருக்கிறது என்றும், அவருடைய உறவினர்கள் மற்றும் தமிழக அரசின் விருப்பத்திற்கேற்ப அவ்வுடல் அனுப்பி வைக்கப்படும் என்றும் அந்த அரசு அறிவித்திருக்கிறதே, அதுபற்றி முதலமைச்சர் அவர்களுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அரசு என்ன முயற்சிகளை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கேள்வியாகக் கேட்காமல், ஒத்திவைப்பு அல்லது கவன ஈர்ப்பு என்ற அந்த முறைப்படி கேட்டிருந்தால், அதற்கான விவரங்களைப் பெற்று பதிலளிக்க இயலும்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### நன்னிலம் போன்ற பகுதிகளில் தீவிர வயிற்றுப்போக்கு நோயினால் மக்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழகத்தில், திருவாரூர் உள்ளிட்ட சில பகுதிகளில், காலரா நோயினால் பலர் இறந்தது குறித்து.... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

[2000 மார்ச் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இப்போது ஒரு பொருளை எடுத்துக்கொண்டு இருக்கிறேன். (குறுக்கீடு) நேற்றைக்கு கடைசி எச்சரிக்கை செய்தேன். தொடர்ந்து அந்த வேலையைச் செய்யாதீர்கள். பிறகு, நான் நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள்.

தமிழகத்தில், திருவாரூர் மாவட்டம் உள்ளிட்ட சில பகுதிகளில், காலரா நோயினால் பலர் இறந்தது குறித்து, திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. சி. வேலாயுதன், டாக்டர் பத்மா மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் கவன ஈர்ப்பாகவும், திரு. ஜி. பழனிசாமி, திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பாகவும், டாக்டர் தே. குமாரதாஸ் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும் எடுத்துக் கொள்ள அறிவிப்புக் கொடுத்துள்ளனர். அவற்றை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, முதலிலே டாக்டர் பத்மா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*முற்பகல் 10-35*

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதியில் காலரா நோய் பரவியுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தை நான் ஈர்க்க விரும்புகின்றேன்.

கடந்த மாதம், பிப்ரவரி கடைசியிலிருந்து, மார்ச் மாதம் 24 ஆம் தேதி வரையில், நன்னிலம் அரசு மருத்துவமனையில் 6 உள்நோயாளிகள் இறந்திருக்கின்றார்கள். 4 பேர் குடவாசல் ஒன்றியத்திலும், நன்னிலம் ஒன்றியத்திலும், 2 பேர் கொரடாச்சேரியிலும் மொத்தம் 6 பேர் இறந்திருக்கின்றார்கள். இதற்குக் காரணம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் சரியாக இல்லையென்று கூறுகின்றார்கள். ஆனால், உண்மையான காரணம், கள்ள, சாராயமா அல்லது பாதுகாக்கப்பட்ட குடிநீர் சரியாக இல்லாததாலா என்பது குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தினை நான் ஈர்க்க விரும்புகின்றேன். அத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தையும் நான் ஈர்க்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாராயப் பானையிலும் குண்டுகள் பாயும் என்று கூறியிருக்கின்றார்கள். ஆனால், எனது தொகுதியில் காலங்காலமாக, பதநீர் விற்பனை என்ற பெயரில் licence வாங்கிக்கொண்டு கள் விற்பனை



அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றது. இந்த வேளையில், எனது கொரடாச்சேரி ஒன்றியத்தைச் சேர்ந்த கொண்டாம்பாளையம் கிராமத்திலும் 4 பேர் இறந்திருக்கின்றார்கள். இதற்குக் காரணம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் சரியாக இல்லை என்று மக்கள் கூறுகின்றார்கள். தகாத காரணத்தினால், இந்த நோய் வந்திருக்கிறது என்று கூறுகின்றார்கள். அதனால் சுகாதாரத் துறையைக் கேட்கும்போது, நாங்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று கூறுகின்றார்கள். ஆனால், என்னுடைய கவனத்திற்கு வந்தபடி, இதுவரை நோய் வந்த பிறகுதான், காலரா தடுப்பூசி போடுகின்றார்களே தவிர, நோய் வருவதற்குமுன் ஒரு தடவைகூட, கடந்த 5 ஆண்டுகளாக என்னுடைய தொகுதியில் தடுப்பூசி போட்டதாக என் கவனத்திற்கு வரவில்லை. காரணம், epidemic season-ல் போடுவதைவிட, நோய் வருவதற்கு முன்பு தடுப்பு செய்வதுதான் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆகிய மூன்று பேர்களுடைய கவனத்தையும் நான் ஈர்ப்பதற்குக் காரணம், சாராயம், கள், குடிநீர்.

அடுத்து, சாலை வசதி எதுவுமே கிடையாது. இப்போது நான் பார்க்கிற அத்தனை கிராமங்களிலேயும், கடந்த ஜனவரி 2-லிருந்து, மார்ச் மாதம் வரை நான் சுற்றுப்பயணம் செய்தபோது, ஓர் ஆதிதிராவிடர் காலனியில்கூட, இருக்கின்ற குடிநீர்க் குழாய்கள் ஒழுங்கான இடத்திலே இருந்தது இல்லை. சாக்கடை அல்லது வடிகால் இருக்கின்ற இடத்திலேதான் குடிநீர்க் குழாய்கள் வைத்திருக்கின்றார்கள். பாதுக்காக்கப்பட்ட குடிநீர் என்ற பெயரில் அரை மணி நேரத்திற்கு மேல் அங்கு குடிநீர் வருவது கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் காலரா நோய் பற்றிப் பேசுங்கள். மற்றதைப்பற்றிப் பேசுவதாக இருந்தால், நீங்கள் பொது விவாதத்திலே பேசுங்கள். அப்போது தாராளமாகப் பேசலாம்.

**டாக்டர் பத்மா:** காலரா நோய் தண்ணீரால்தான் முக்கியமாக வருகிறது. அதனால் அதுபற்றிப் பேசுவது அவசியம் என்று நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைச் சொல்லவில்லை. தாராளமாகப் பேசுங்கள். இறந்தவர்கள் குடிநீரால் இறக்கவில்லை, சாராயத்தினாலே என்று சொல்கிறார்கள் என்று நீங்களே சொன்னீர்கள். அப்படி என்றால், அதை வேறு நேரத்திலே பேசுங்கள் என்று சொல்கிறேன்.

**டாக்டர் பத்மா:** சாராயமும் ஒரு காரணம் என்று கூறுகின்றார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தையும் நான் ஈர்க்க விரும்புகிறேன். சாராயம், சாராயம் என்று சொல்லிவிட்டு, இந்தமாதிரி ஒரு காலரா நோயை பரவவிடக்கூடாது என்ற ஒரு முக்கியமான எண்ணத்தில்தான், உங்களை நான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, நன்னிலம் அரசு மருத்துவமனை. காலரா வியாதிக்கு என்று வருகின்றவர்கள், ஜனவரி மாதக் கடைசியிலோ அல்லது பிப்ரவரி மாதம் முதலிலோ வருவார்கள். ஆனால், தற்போது மார்ச் மாதம் வந்திருக்கிறது. காரணம், கண்டிப்பாக இது தண்ணீரின் குறைபாடு என்றுதான் நான் நினைக்கின்றேன். அதைவிட, மருத்துவமனையில் I.D. ward என்று சொல்லக்கூடிய ward கிடையாது. நானும் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து, ஒரு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறேன். அந்தப் புதுக் கட்டடத்தை, அந்த shed-ஐ, குழந்தைகளுக்காக உபயோகப்படுத்த வேண்டிய கட்டடத்தை, இப்போது காலரா வியாதி நோயாளிக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பொது ஆண்களுக்காக, பொது பெண்களுக்காகக் கொடுக்கப்பட்ட அந்த ward-களையும், தற்போது I.D. ward-ஆகத் தொடர்ந்து உபயோகப்படுத்துகின்ற காரணத்தினால், பொது மருத்துவமனைக்கு வருகின்ற அத்தனை பேரும் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக ஒரு I.D. wardல் எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி, எங்களுடைய அரசு மருத்துவமனைக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். 1986-லே நான் வேலை பார்க்கும்போது 6 மருத்துவர்கள் அங்கே வேலை பார்த்தோம். ஆனால் தற்போது, இரண்டே இரண்டு மருத்துவர்கள்தான் அங்கே பணிபுரிகின்றார்கள். இரண்டு மருத்துவர்களில் ஒருவர் பெண் மருத்துவர், ஒருவர் ஆண் மருத்துவர். ஆனால், அங்கு வருகின்ற நோயாளிகள் பெரும்பாலும் medico legal cases காரணமாக வருகிற காரணத்தினால், மருத்துவர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

வருமுன் காப்போம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, இப்போது நோய் வருவதற்கு முன்பே இங்கே நோயாளிகளை நாங்கள் சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தத்



திட்டத்தின்கீழ் நற்பெயரைக் கொண்டுவர வேண்டுமென்றால், எங்களுடைய மருத்துவமனையை முழு வசதியுள்ள மருத்துவமனையாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, நீடாமங்கலம், கொரடாச்சேரி, நன்னிலம், திருவாரூர் ஆகிய ஒன்றியப் பகுதிகளிலே கொள்ளை நோயான காலரா நோயினால் பாதிக்கப்பட்டு 10 பேர் இறந்திருக்கிறார்கள். கடந்த 1 வார காலமாக இந்த நோயின் கொடுமையினாலே திருவாரூர் மாவட்டம் முழுவதும் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பல மருத்துவமனைகளிலே உள் நோயாளிகளாகப் பல பேர் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியான மன்னார்குடி மருத்துவமனையிலேயே இப்போது 10-க்கும் மேற்பட்டவர்கள் உள்நோயாளிகளாக சிகிச்சைபெற்று வருகிறார்கள். ஆக, மன்னார்குடி சவலைக்காரன் என்ற இடத்திலே வைத்தியநாதன் என்பவரும், நீடாமங்கலத்திலே பூவனூர் என்ற இடத்திலே ரேணுகாதேவி என்பவரும், கொரடாச்சேரி கமுகக்குடி என்ற கிராமத்திலே அருளானந்தம் என்பவரும், கருத்தம்மாள் என்பவரும், திருவாரூர் வண்டாம்பாளையம் என்ற கிராமத்திலே அய்யாறு என்பவரும், கணபதி என்பவரும், மன்னார்குடி மேலப்பனையூரில் எனது சொந்த கிராமத்தைச் சேர்ந்த காசியம்மாள் என்பவரும், நீடாமங்கலம், பழங்களத்தூர் கிராமத்தைச் சேர்ந்த அப்பர் என்பவரும், நன்னிலம், சீதக்கமங்கலத்திலே— பெயர் தெரியவில்லை— ஒருவரும், நன்னிலம், மகிழஞ்சேரி கிராமத்திலே முரளி என்பவரும் இறந்திருக்கிறார்கள். ஆக, 10 பேர் இந்தக் காலரா நோயினாலே இறந்திருக்கிறார்கள். இது எங்களுடைய மாவட்டத்திலே மிகப் பெரிய பாதிப்பையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இருந்தாலும், அவருடைய செய்தியின் மூலமாகப் பார்க்கும்போது, பதநீர் என்ற பெயராலே கள் இறக்கி, அதைக் குடிப்பதாலே, கள்ளச்சாராயம் மூலமாக வந்திருப்பதாகச் செய்தி வெளியிட்டிருக்கிறார். இதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இருக்கிறது. காலரா நோய்க்கும், சாராயத்திற்கும் சம்பந்தம் இல்லை. சாராயம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு உடன்பாடுதான். ஆனால், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய முறையிலே, தகுந்த முறையிலே

சிகிச்சை அளிப்பதும், தகுந்த குடிநீர் ஆதாரங்களும் பிரச்சினைகளாக இருக்கின்றன. இவற்றைச் சரிசெய்வதற்குரிய முயற்சியை எடுப்பதற்குப் பதிலாக, மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையைக் திசை திருப்புவதாகவே நான் கருதுகிறேன். அந்தக் கிராமங்களிலே குடிநீர்ப் பிரச்சினையும் இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீரும் இருக்கிறது. இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதுகுறித்து எனக்கு வந்திருக்கிற செய்தியிலிருந்து. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சரியாக சுத்தப்படுத்தப்படாமல் பல ஆண்டுகாலமாக இருப்பதன் மூலமாகக்கூட அப்படி இருக்குமோ என்ற ஒரு ஐயம் வந்திருக்கிறது. சில கிராமங்களிலே குளத்து நீரை, குட்டை நீரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதன் காரணத்தினாலே இப்படிப்பட்ட வியாதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குரிய தடுப்பு முயற்சிகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, அங்கே தடுப்பு ஊசி நடவடிக்கைகளை மாவட்டம் முழுவதும் விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மன்னார்குடி பகுதியைச் சுற்றிலும் உள்ள நீடாமங்கலம், கொரடாச்சேரி, கோட்டூர் போன்ற பகுதிகளிலே இருக்கிற நோயாளிகள் மன்னார்குடி அரசு மருத்துவமனையிலேதான் அனுமதிக்கப்படுகிறார்கள். அதுகுறித்து பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றை இந்த நேரத்திலே சொல்வது பொருத்தமில்லை என்றாலும், வசதிக் குறைவுகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைச் சரிசெய்வதற்கான முயற்சிகளை எடுப்பதுடன் போதிய மருந்துகளையும் அங்கே வழங்க வேண்டும். இப்போது 8 பேர் discharge ஆன நிலையிலேயும் இன்னும் 10 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, பரவலாக அந்த மாவட்டம் முழுவதும் அந்த நோய் பரவியிருக்கிறது. இந்த அபாயத்திலேயிருந்து பாதுகாப்புச் செய்வதற்கான முயற்சிகளை நம்முடைய அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டு இறந்திருப்பவர்கள் சாதாரண விவசாயத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இதிலே பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உரிய வகையிலே, கருணையுள்ளத்தோடு ஏதாவது உதவிகளைச் செய்ய முடியுமா, இதற்குரிய வாய்ப்பு இருக்கிறதா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இப்போது விவசாயப் பணிகள் எல்லாம் முடிந்து தங்களுடைய வாழ்க்கைக்கே போராடிக் கொண்டிருக்கிற நேரத்திலே,





இப்படி உயிர்ப்பலி கொண்டிருக்கிற கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய நிவாரணத்தை நம்முடைய அரசாங்கம் வழங்கி, பாதுகாக்க வேண்டும், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-45*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் பத்மா அவர்களும், திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும் திருவாரூர் மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நிலை குறித்து சில கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் பத்மா அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில், அங்கே கள்ளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது சாராயத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது குடிநீரால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்ற ஒரு ஐயத்தை எழுப்பினார்கள். அதைப்போலவே சிவபுண்ணியம் அவர்கள் இங்கே எடுத்துச்சொல்கின்ற நேரத்திலே, அங்கே பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலோர் குட்டையிலேயும், குளத்திலேயும் இருக்கின்ற நீரைப் பருகியதால்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இன்று காலையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்புகொண்டு கேட்டபோது, அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் இருந்தும், சில பகுதிகளில் சாதாரண ஏழை மக்கள் குட்டைகளிலே இருந்த நீரையும், குளத்திலே இருந்த நீரையும் பருகிய காரணத்தினால்தான், அந்த நோயால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும் இப்போது உரிய நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்ட பிறகு, அந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று எடுத்துச்சொன்னார்கள்.

அரசாங்கத்திற்குக் கிடைத்த தகவலைப் பொறுத்தவரையில், வேலூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் காலரா நோயினால் எந்தப் பாதிப்போ அல்லது இறப்போ நிகழவில்லை. நோயுற்றவர்களின் மலத்தை ஆய்வுக் கூடத்தில் பரிசோதித்ததில் காலராக் கிருமி இல்லை என்று தெரியவந்துள்ளது. ஆயினும் தீவிர

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மார்ச் 29

வயிற்றுப்போக்கு போக்கு நோயினால் இந்த ஆண்டு 1-1-2000 முதல் 27-3-2000 முடிய பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறந்தவர்களுடைய எண்ணிக்கையை இந்த அவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

வேலூர் மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்கள் 955 பேர், யாரும் இறக்கவில்லை. பெரம்பலூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 11 பேர், யாரும் இறக்கவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 39 பேர், இறந்தவர்களுடைய எண்ணிக்கை 2. நாகை மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்கள் 342 பேர், இறந்தவர்கள் 9 பேர். திருவாரூர் மாவட்டத்திலே பாதிக்கப்பட்டவர்கள் 378 பேர், இறந்தவர்கள் 10 பேர். இப்படி இறந்தவர்கள் யாரும் காலரா நோயால் பாதிக்கப்படவில்லை என்றும் காலரா நோய் வந்திருக்குமானால் அதற்கென்று சில அறிகுறிகள் இருக்கின்றன. அப்படி இந்த நோயாளிகளிடத்திலே எதுவும் காணப்படவில்லை என்றும் அவர்கள் தீவிர வயிற்றுப்போக்கு நோயினால்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் தெரிவித்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் தலைமையில் தனியாகக் குழுக்களை அமைத்து நோய்களைக் கண்டறிந்து, உடனடியாகத் தீவிர சிகிச்சை அளித்து, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்பாக தேவையான கிருமிநாசினிகள் கையிருப்பில் வைத்துக்கொள்ள நகராட்சிகள் மற்றும் ஊராட்சி ஆணையாளர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மருந்துகள் கையிருப்பில் உள்ளன.

மேலும், பாதிக்கப்பட்ட இடங்களில் 1,05,551 நபர்களுக்குக் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 9,351 குடிநீர் நிலைகளுக்கு Chlorinisation செய்யப்பட்டுள்ளது. 15,051 எண்ணிக்கையிலான உப்புக்கரைசல் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு, பொது சுகாதாரப் பணியாளர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த மாவட்டங்களில் காலரா நிகழ்வுகள் ஏதும் ஏற்படவில்லையென்றாலும் இந்த மாவட்டங்கள் மருத்துவக் குழுவின் கண்காணிப்பில் இருந்து வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மார்ச் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், வேலூர், பெரம்பலூர், நாகை, திருவாரூர், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் இரண்டு பேர் மட்டும்தான் இறந்தார்கள்; வேலூரிலே 955 பேர் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு பிறகு அவர்கள் சென்று விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பிறகு அவர்கள் இறந்து விட்டார்கள். இரண்டு பேர் மட்டும்தான் இறந்ததாகவும், 955 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாகவும் அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) அவர்கள் இறக்கவில்லை, அதை ஒத்துக்கொள்கிறேன் நான். நான் கேட்பதெல்லாம் பொதுவாக மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, 2,3 குளுகோஸ் பாட்டில்கள் ஏற்றுகிறார்கள். பிறகு, இடம் இல்லை என்று அனுப்பிவிடுகிறார்கள். அப்படி அனுப்பிவிட்ட பிறகு அவர்கள் வீடுகளிலே போய் இறந்துவிடுகிறார்கள். மருத்துவமனைகளிலே இறந்தால்தான் அது காலரா நோய் என்று இவர்கள் ஒத்துக்கொண்டு பதிவு செய்கிறார்களேயொழிய, வீடுகளுக்குச் சென்றோ அல்லது அவர்களது உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றோ இறந்தால், இதுபோன்ற கணக்குகள் வருவதில்லை. ஆகவே, இப்படி அனுமதிக்கப்பட்டவர்களை நன்றாகக் குணமாகும் வரையில், மருத்துவமனைகளிலே இருக்கச் செய்து, அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் மனசாட்சி உள்ளவர்கள், மனிதநேயம் உள்ளவர்கள். நோயாளிகளை நோய் இருக்கின்ற நேரத்தில் யாரும் வீட்டிற்கு அனுப்பிவிட மாட்டார்கள். அவர்களை முழுமையாகக் குணப்படுத்திய பிறகுதான் வீட்டிற்கு அனுப்புவார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு யாராவது அப்படித் தகவல் கொடுத்திருந்தால் அது தவறு. பொதுவாக மருத்துவமனைகளிலே சேர்க்கப்படுகின்ற நோயாளிகள் முழு சிகிச்சை அளித்ததற்குப் பிறகுதான் வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். வேலூர் மாவட்டத்திலே யாரும் இறக்கவில்லை.

[2000 மார்ச் 29

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) அனுமதி மறுத்த பிரச்சினை

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை மாநகரத்தினுடைய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையிலே அறையிலே வந்து கேட்டீர்கள். நான் அனுமதி மறுத்துவிட்டேன், உட்காருங்கள்.

### (இ) சத்துணவு அமைப்பாளர்களைப் பணி நிரந்தரம் செய்தல்

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள் 3 நாட்களாகத் தமிழ்நாடு முழுவதும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற சிறப்பு அந்தஸ்து கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், குறைந்தபட்சம் என்னுடைய அறையிலேயாவது வந்து சொல்ல வேண்டும். நீங்கள் திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி? இதைத்தான் மரபை மீறிச் செயல்படுவது என்று நான் சொல்கிறேன். நீங்கள் தயவுசெய்து என்னுடைய அறையிலே வந்து இது முக்கியமான பிரச்சினை, நான் எதிர்க்கட்சித் தலைவர்; நான் எழுப்ப வேண்டும் என்று கேட்டீர்கள் என்றால் நான் உங்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டுப் போகிறேன். ஆனால், நீங்கள் இப்படிப் பேசுவது எனக்கு முறையாகத் தெரியவில்லை. பேசுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, கடந்த 3 தினங்களாகத் தமிழ்நாடு முழுவதும் 1½ இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவு அமைப்பாளர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த மாநாட்டில், அவர்களையெல்லாம் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குகிறேன் என்று உறுதிமொழிகூடக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி நம்முடைய அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? ஏதாவது தகவல் சொல்லுமாறு நான் முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சத்துணவு அலுவலர்கள் அல்லது ஊழியர்கள் தங்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக



2000 மார்ச் 29] [கலைஞர் மு. கருணாநிதி]

சம்பளம் போன்றவை வழங்கி இருப்பதிலும், சலுகைகள் அளித்ததிலும் எந்த அளவிற்கு அரசுக்குச் செலவாகியிருக்கிறது என்பது இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும்; எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இப்போது அவர்கள் முழு நேரமும் அங்கே வேலை செய்பவர்கள் அல்ல. Part-time workers ஆகத்தான் இப்போது இருக்கின்றார்கள். Part-time workers-ஐ எப்படி அரசு, முழுநேர அரசு ஊழியர்களாக ஆக்க முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, அதை ஆக்குவதற்கு வழியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, அதையொட்டி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதையொட்டி ஒன்றும் கேட்க வேண்டாம். அவர்கள் கேட்டாகிவிட்டது; பதில் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதில் விளக்கம் கேட்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, கொடுக்க முடியாது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2000 மார்ச் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999-2000, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the financial year 1999-2000."

## 6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. 1999-2000, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"1999-2000 ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-3-2000 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### நிறைவேற்றப்பெற்ற 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 1. நில வருவாய்த் துறை | 1,63,43 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 4 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 6,61,07 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 21,71,72 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 76,52 |
| 6. ஆவணப் பதிவு | 5,71,25 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 99,13 |

**நிறைவேற்றப்பெற்ற 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—தொடர்ச்சி**

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| 8. தேர்தல்கள் | 51,41,78 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 23,62,76 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 70,81 |
| 11. மாவட்ட நிருவாகம் | 29,27,78 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1,08,63 |
| 13. நீதி நிருவாகம் | 9,55,68 |
| 14. சிறைச்சாலைகள் | 13 |
| 15. காவல் துறை | 1,50,80,40 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 13 |
| 17. கல்வி | 88,34,04 |
| 18. மருத்துவம் | 76,97,06 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 74,29,72 |
| 20. வேளாண்மை | 8,51,10,41 |
| 21. மீனளம் | 3,78,92 |
| 22. கால்நடை வளர்ப்பு | 22,56,18 |
| 23. கூட்டுறவு | 10,91,37 |
| 24. தொழில்கள் | 2 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 9 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 3,56,15 |
| 27. ஊரக வளர்ச்சி | 23 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 4,83,13 |
| 29. சமூக நலன் | 78,75,26 |



**நிறைவேற்றப்பெற்ற 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—தொடர்ச்சி**

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 26,34,61 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 16,27,98 |
| 32. வீட்டுவசதி | 3 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,29,53 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 5 |
| 35. பாசனம் | 46 |
| 36. பொதுப்பணிகள்-கட்டடங்கள் | 10,78,80 |
| 37. சுற்றுச்சூழல் | 3 |
| 38. சாலைகளும், பாலங்களும் | 9 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 3,27,24 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 36,02,12 |
| 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 7,06,75,51 |
| 42. பல்வகை | 21 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 5,00,17 |
| 44. காட்டுவளத் துறை | 10,13,27 |
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1 |
| 46. செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் | 46,93 |
| 47. ஊரகத் தொழில்கள் | 13 |
| 48. குடிநீர் வழங்கல் | 14,66,23 |
| 49. நகராட்சி நிருவாகம் | 4 |

**நிறைவேற்றப்பெற்ற 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்—தொடர்ச்சி**

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| 50. சுற்றுலா | 1,35,44 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 6,15,11 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | **2,358,57,83** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 61,07 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,44,39,18 |
| 55. பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 52,95,69 |
| 56. சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 9 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 4,31 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 9,65,21 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 1,94 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 16,80,81 |
| **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **2,24,48,30** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் | 2,53,43,85 |
| பெருமொத்தம் | **2,836,49,98** |

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### *(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2000 (ஆ. இ.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### *(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2000*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10.55*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் தொடங்கி வைக்கின்றார்கள். இப்போது மணி 10-55 ஆகிறது. 11-10 மணிக்கு அவராகவே பேச்சை முடித்துவிடுவார் என்று நம்பி, அவரை அழைக்கின்றேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்திலே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எங்களது கருத்துகளைத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழகத்தினுடைய விவசாயிகள், தொழிலாளர்கள், தொழில் நடத்துவோர், பாமர மக்கள் ஆகியோர் பாராட்டக்கூடிய வகையிலே ஒரு வரவு-செலவுத் திட்டத்தைப் போடுவதற்குத் தவறியதற்காக நாங்களெல்லாம் பாராட்ட முடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம் என்பதை மிகுந்த வருத்தத்தோடு இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரை, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே எந்தவிதமான சலுகையும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. நீண்டகாலமாகவே, குறிப்பாக கரும்பு விவசாயிகள் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கேட்டுப் போராடி வருகிறார்கள். அரியானா மாநிலத்திலே கரும்புக்கு நல்ல விலை கொடுப்பதனை எங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர் சட்டமன்றத்திலே எடுத்துச்சொன்னார். உதாரணமாக 8.78 சதவீதம் கட்டுமானமுள்ள கரும்புக்கு அரியானா மாநிலத்திலே 1998-99 ஆம் ஆண்டில் முன்பட்டப் பருவத்திற்கு 950 ரூபாயும், நடுப்பட்டப் பருவத்திற்கு 930 ரூபாயும், பின்பட்டப் பருவத்திற்கு 910 ரூபாயும் வழங்கியிருக்கிறார்கள். 8.83 சதவீதம் கட்டுமானமுள்ள கரும்புக்கு 1999-2000 ஆண்டில் முன்பட்டத்திற்கு 1,100 ரூபாயும், நடுப்பட்டத்திற்கு 1,060 ரூபாயும், பின்பட்டத்திற்கு 1,040 ரூபாயும் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே நாம் வழங்குவதோ வெறும் 740 ரூபாய்தான். அதையும் தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்குவது கிடையாது. முதலமைச்சர் அவர்களை அல்லது வேளாண்மைத் துறை அமைச்சரை நான் கேட்கிறேன், விவசாயிகளுக்கு இப்படியொரு அநீதி இழைப்பதுதான் மக்கள் நல அரசா என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். அரியானா மாநிலத்தில் கொடுக்கிறபொழுது தமிழகத்தில் ஏன் கொடுக்க முடியவில்லை என்பதனையும் நீங்கள் விளக்க வேண்டும். அரியானா மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் ஒரு டன் கரும்புக்கு 271 ரூபாய் விலையில் வித்தியாசம் இருக்கிறது என்பதனை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்தத் தொகை பெரிய தொகை என்பதனை அவர்களும் மறுக்கமாட்டார்கள். சரி, தமிழகத்திலேயே எடுத்துக்கொண்டால்கூட, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கொடுக்கின்ற தொகையை தனியார் ஆலைகள் தருவது கிடையாது.



நேற்றையதினம் ஒரு கேள்வியின்போது வேளாண்மைத் துறை அமைச்சர் 'நீதிமன்ற விவகாரம் குறுக்கீடு இருக்கிறது; அதனால் முடியவில்லை' என்று சொன்னார். நான் வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேட்க ஆசைப்படுகிறேன். இரண்டு ஆண்டுகாலமாக நீதிமன்றத்திடமிருந்து உங்களால் நீதியைப் பெற முடியவில்லை என்று சொன்னால், உங்களுடைய துறை அதிகாரிகள் செயல்படுகிறார்களா அல்லது செயல்படாமல் இருக்கிறார்களா என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.

உதாரணமாக, ஒரே பகுதியிலே ஒரே சாலையிலேயே, இரண்டு ஆலைகள் இருக்கின்றன. புகளூர் சர்க்கரை ஆலை E.I.D. Parry என்கிற தனியார் கம்பெனியினுடையது. அதே சாலையிலே, சேலம் மோகனூர் கூட்டுறவு கரும்பாலை இருக்கிறது. இந்த இரண்டு ஆலைகளுமே இரண்டு விதமான தொகையைக் கரும்பு விவசாயிகளுக்குத் தருகின்றன. கூட்டுறவு ஆலை அதிகமாகத் தருகிறது. தனியார் ஆலை குறைந்த விலை தருகிறது. எனவே, நான் கேட்க விரும்புவது என்னவென்றால், நீதிமன்றத் தீர்ப்பை உங்களால் விரைந்து பெற முடியவில்லை என்றால், அதற்கு உங்களுடைய அதிகாரவர்க்கம் உங்களுக்குத் துணை நிற்கவில்லை என்றால், தனியார் ஆலைகளுக்குக் கரும்பு போடுகின்ற கரும்பு விவசாயிகளைக் கூட்டுறவு ஆலைகளுக்குப் போடுவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா?

தனியார் ஆலைப் பகுதியில் நடவு செய்யப்படுகின்ற கரும்பை வெட்டி எடுத்து அதிகமாக விலை கொடுக்கின்ற கூட்டுறவு ஆலைக்கு விற்பதற்கு விவசாயிகளுக்கு நீங்கள் அனுமதி வழங்குவீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். நீங்கள் அப்படி அனுமதி வழங்கினால் உங்களை விவசாயிகளுடைய நண்பன் என்று சொல்ல முடியும். அப்படி அனுமதி வழங்க மறுப்பீர்களேயானால் தனியார் ஆலைகளுக்குச் சிறந்த வழக்கறிஞர்களாக நீங்கள் செயல்படுகிறீர்கள் என்கிற குற்றச்சாட்டை இந்த அரசின்மீது நான் சுமத்த விரும்புகிறேன்.

அதேபோல, சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் இப்போது மத்திய அரசாங்கம் நிறைய சலுகைகளை வழங்கி இருக்கிறது.

முற்பகல் 11-00

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99-ல் மாநில அரசாங்கம் பரிந்துரை விலை செய்வதற்கு சட்டத்திலே இடமில்லை, பரிந்துரை விலை செய்யக்கூடாது என்று 1998-லே தனியார் ஆலைகள் தடை உத்தரவைப் பெற்றார்கள்.

அந்தத் தடை உத்தரவை நீக்குவதற்கு அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தத் தடை உத்தரவு நீக்கப்பட்டது. அதற்குப் பின்னால் இப்போது அவர்கள் Full Bench-க்கு நான் நேற்றைக்குக்கூட சொன்னேன்— appeal செய்து, அந்த நீக்கப்பட்ட தடை உத்தரவின்பேரிலே, மீண்டும் தடை உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை விரைவிலே முடிக்க வேண்டும் என்று அரசின் தரப்பில் விரைவான நடவடிக்கையை நாங்கள் எடுத்து வருகிறோம்.

தனியார் ஆலைகளுக்கு, ஆலை முதலாளிகளுக்கு இந்த அரசு என்றைக்கும் துணையாக இருக்கக்கூடிய அரசு அல்ல. இது விவசாயிகளுடைய அரசு. இன்னும் சொல்லப்போனால், எந்த முதலாளியினுடைய தயவிலும் இந்த ஆட்சி இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த அரசு அந்தத் தடை உத்தரவை நீக்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்கும். நீதிமன்றத்திலே போய் நாங்கள் தலையிட்டு 'உடனே வழக்கை முடி' என்று சொல்ல முடியாது. அரசு வழக்கறிஞர்களை வைத்து வாதாடலாம். 'இது அவசரம்' இந்த வழக்கை உடனே முடியுங்கள் என்று Petition போடலாம். நீதிமன்றம்தான் வழக்கை வாய்தா போட்டு, விசாரித்து, தீர்ப்புச் சொல்ல வேண்டுமே தவிர, நீதிமன்றத்தைக் கட்டாயப்படுத்த முடியாது. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது எல்லாம் வழக்குகளை எத்தனை ஆண்டு காலம் இழுத்தடிக்கிறார்கள், அதற்கு எப்படியெல்லாம் முயற்சி செய்கிறார்கள் என்பதுபற்றி அவர் எந்தப் பக்கம் இருக்கிறாரோ அதையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சருடைய பின்னாலே முதலாளிகள் இல்லை என்பதை அவர்கள் நிரூபிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அவர் நிரூபிப்பார் என்றும் நான் நம்புகிறேன். விரைந்து நீதிமன்ற வழக்குகளை முடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தால்தான், இது விவசாயிகள் நல அரசாக இருக்க முடியும் என்பதையும் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தவிர, கரும்பு சாகுபடிச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால் நடப்பு அரவைப் பருவத்திற்குக் கொடுக்கும் கரும்பு விலை, அதற்கு முந்தைய ஆண்டு கரும்பு விலைக்குக் குறைவில்லாமல் கொடுக்கப்பட



வேண்டும் என்று 1997-98 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு அரசு சர்க்கரைத் துறை ஆணையாளர் அவர்களுடைய ஒப்பந்தத்திலே இருந்தது. ஆனால், இப்போது நம்முடைய அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்றால் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்திருக்கிறது. சென்ற ஆண்டு கொடுத்ததைவிட இந்த ஆண்டு குறைவாக விலை கொடுக்கலாம் என்பதற்கிணங்க, ஒப்பந்தத்தை ரத்து செய்திருக்கிறீர்கள் என்று சொன்னால், நீங்கள் தனியார் முதலாளிகள் பக்கம் இருக்கிறீர்களா அல்லது விவசாயிகள் பக்கம் இருக்கிறீர்களா என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஏதாவது இடுபொருட்களின் விலை குறைந்திருக்கிறதா, டீசல் விலை குறைந்திருக்கிறதா? ஆனால், கரும்பின் விலையைக் குறைப்பதற்கு மட்டும் ஓர் ஒப்பந்தத்தை நீங்கள் ரத்து செய்கிறீர்கள் என்று சொன்னால், இந்த அரசு எப்படி விவசாயிகளுடைய அரசாக இருக்க முடியும் என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். வரவு-செலவுத் திட்டத்திலே பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மொத்தத்தில் கடைசியாக பதில் சொல்லிக்கொள்ளலாம், உட்காருங்கள். அதை வைத்துக்கொண்டு அவர் இன்னும் அரை மணி நேரம் வேண்டும், எல்லாம் குறுக்கீடு என்பார். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தவறான கருத்தை ஏற்படுத்திவிடும் என்பதற்காக நான் சொல்கிறேன். அரசாங்கம் அப்படி ஓர் ஒப்பந்தம் போட்டிருப்பதாகச் சொல்கிறார். அப்படி அல்ல. சென்ற ஆண்டு 1998-99-லே ஒரு recovery இருக்கிறது. 1999-2000-லே ஒரு recovery இருக்கிறது. 1999-2000-லே 1998-99-ஐவிட குறைந்திருந்தாலும்கூட, அந்தப் பழைய rate-ஐத்தான் கொடுக்க வேண்டும் என்பதுதான் இப்போதைய அரசாங்கத்தினுடைய ஆணை. குறைத்துக் கொடுக்கிற மாதிரி இல்லை. அதை மாண்புமிகு உறுப்பினர் தவறாகப் புரிந்து கொண்டு சொல்கிறார். இந்த அரசு அப்படிப்பட்ட ஓர் ஒப்பந்தம் போடவில்லை.

முற்பகல் *11-05*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், சர்க்கரைத் துறை ஆணையரோடு கரும்பு விவசாயிகள் பேச்சுவார்த்தை நடத்தியபோது, சென்ற ஆண்டைவிட வருகிற ஆண்டில் குறைந்த விலைகொடுக்கக்கூடாது என்கின்ற வாய்மொழிரீதியான ஓர் உத்தரவாதம் இருக்கிறது. ஆனால், அந்த உத்தரவாதம் இப்போது நீக்கப்பட்டுவிட்டது. சர்க்கரைத் துறை ஆணையர் அந்த உத்தரவாதத்திற்கு இப்போது ஒத்துக்கொள்ள மறுக்கிறார். பேச்சுவார்த்தையிலே அது இருக்கிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அதாவது சர்க்கரைத் துறை ஆணையர் 8.5 சதவிகிதம் கட்டுமான அடிப்படையிலே நடப்பு ஆண்டிலே விலை கொடுக்க வேண்டும் என்று ஓர் உத்தரவு போட்டார். அதிலே, ஏற்கெனவே தொடர்ந்து நாம் கொடுத்துக்கொண்டு வருகிறமாதிரி, இந்த ஆண்டிற்குக் கட்டுமானம் குறைந்தால்கூட பழைய விலை அதிகமாக இருந்தால் அதைத்தான் கொடுக்க வேண்டும் என்பதை அவர் அந்த உத்தரவிலே போடாமல் விட்டுவிட்டார். பிறகு, அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு அது வந்த பின்னாலே, திரும்ப அந்த ஆணை இடப்பட்டு கட்டுமானம் குறைந்து இருந்தாலும்கூட, அந்த கட்டுமானத்திற்கான பழைய விலையைத்தான் கொடுக்க வேண்டும் என்பதுதான் உத்தரவே. அதிலே ஒன்றும் பேச்சுவார்த்தை கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்து, நானும் அவரும் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ஆணையை வெளியிட்டிருக்கின்றார்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போன்றதொரு தெளிவான விளக்கத்தைப் பெறவே நாங்கள் விரும்புகிறோம். விளக்கம் சொன்னதற்கு நன்றி. ஏனென்றால், முன்பு இது போன்ற ஒரு தெளிவான விளக்கம் இல்லை. சர்க்கரைத் துறை ஆணையர் ஒவ்வொரு பேச்சுவார்த்தையின்போதும் மாறுபட்டுத்தான் பேசுகின்றார். நீங்கள் சொன்ன பிறகு அவர் இனிமேல் மாறுபட்டுப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்காது என்று நான் கருதுகிறேன்.

சமீபத்திலே 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலே தண்ணீர் பஞ்சம். Pipeline மூலம் வழங்கப்பட்ட குடிநீர் டிசம்பர் முதல் வாரத்தில் நிறுத்தப்பட்டது. அதன்பிறகு இராயப்பேட்டை மருத்துவமனையிலே ஒவ்வொரு நாளும் லாரிகள் மூலமாகவே தண்ணீர் விடுகிறோம் என்று மருத்துவர்கள்



சொன்னதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. நான் இந்த அரசாங்கத்தைப் பார்த்து கேட்கக் ஆசைப்படுகிறேன். 1996-97 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வரவு-செலவு திட்டத்திலும் கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வருகிறது, தண்ணீர் பஞ்சம் தீர்த்துவிடும், ஒவ்வொரு குடிமகனுக்கும் இவ்வளவு குடிநீர் நாங்கள் தரவிருக்கிறோம் என்றெல்லாம் ஆரவாரமாக இந்த அரசு சொல்லி வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்து' பத்திரிகையிலே இராயப்பேட்டை மருத்துவமனை குறித்து வந்த செய்தியை மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டுகிறார். அந்தச் செய்தி வந்த உடனேயே Government Royapettah Hospital Superintendent 26 ஆம் தேதி ஒரு rejoinder பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறார். அதனுடைய நகலை வேண்டுமானால் மாண்புமிகு சபாநாயகருக்குக் கொடுக்கிறேன். நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிற அந்தச் செய்தி முழுக்க முழுக்கத் தவறானது. நம்முடைய சென்னை மாநகர மேயர் வணக்கத்திற்குரிய ஸ்டாலின் அவர்கள், ஒவ்வொரு வாரமும் அங்கு சென்று உரிய நடவடிக்கை எடுத்து, நாள்தோறும் 30 ஆயிரம் லிட்டர் தண்ணீர் அங்கே வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தி தவறு என்பதற்கு அந்த அதிகாரியினுடைய கடிதம் என்னிடத்திலே இருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த உதாரணத்தைச் சொல்ல வந்ததற்குக் காரணமே, சென்னை நகரத்திலே குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது என்பதற்காகத்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நியாய உணர்வோடு பேசக்கூடிய உறுப்பினர் என்று நான், பேரவைத் தலைவர், நினைக்கிறேன். ஆகையினாலே, 'இந்து' பத்திரிகையிலே வந்த செய்திக்கு மறுப்பு வந்திருக்கிறது என்று அவர் சொன்னால், மறுப்பு வந்ததை நான் கவனிக்கவில்லை என்று சொல்லுங்கள். இல்லையென்றால் மறுப்பு வந்திருக்கிறது, ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லுங்கள். அடுத்தாற்போல் பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மறுப்பு கொடுத்த வரைக்கும் நன்றி. எனக்கு இதிலே மாற்றுக் கருத்து இல்லை. மறுப்பு இருந்தால் ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு ஒன்றும் விதண்டாவாதம் செய்ய வேண்டும் என்று ஆசை இல்லை.

[திரு. ச. அழகிரி] [2000 மார்ச் 29

நான் இதைவிட ஒரு நல்ல உதாரணத்தைச் சொல்ல ஆசைப்பட்டேன். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சங்கடப்படுவாரே என்பதற்காகத்தான் இராயப்பேட்டை மருத்துவமனைக்குப் போனேனேயொழிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு ஒன்றும் சங்கடமே கிடையாது. நீங்கள் ஆதாரத்தோடு என்ன வேண்டுமானாலும் பேசலாம்.

**திரு. ச. அழகிரி:** சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்திலே சட்டமன்றம் கூடுவதற்கு முன்பாக நான்கு நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கப்பட்டது. நான் சட்டமன்றப் பேரவைச் செயலகச் செயலாளர் அவர்களோடு தொடர்பு கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள், தினமும் தண்ணீர் கொடுங்கள் என்று சொன்ன பிறகுதான் இப்போது தினமும் தண்ணீரைக் கொடுக்கிறார்கள். ஆக, குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குற்றச்சாட்டு சொல்கிறீர்கள். நியாயமாகத்தான் பேசுகிறீர்கள். ஓர் அரசினுடைய கடமை என்ன என்பதைப் புரிந்திருப்பீர்கள். அதனாலே உங்களைமாதிரி பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் சொன்ன உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால் நன்றாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப் பொறுத்தவரைக்கும் Metro Water நிர்வாகம் நேரடியாக supply பண்ணி, இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லையென்பது உங்களுக்கே தெரியும். நீங்கள் சொன்ன குற்றச்சாட்டின்பேரிலேதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயலாளரிடம் நான் சொன்ன பிறகு அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று நானே சொன்னேன். அவசரத்தில் தாங்கள் இதைக் கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். எனவே நான் இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புவது என்னவென்றால், ஐந்து வரவு-செலவுத் திட்டங்களை நீங்கள் சமர்ப்பித்தும்கூட, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவில்லை என்றால், அது எப்போதுதான் வரும்?



2000 மார்ச் 29]

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆந்திரத்திலே உள்ள காங்கிரஸ்காரர்கள், தங்களுடைய தடையை விலக்கிக்கொண்டால் இன்னும் விரைவிலே வரும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கே இன்னும் நன்றாகத் தெரியும். எத்தனை முறை கிளர்ச்சி செய்திருக்கிறார்கள், எத்தனை முறை சாலை மறியல் பண்ணியிருக்கிறார்கள், எத்தனை முறை சத்தியாக்கிரகம் பண்ணியிருக்கிறார்கள், சாகும்வரையிலே உண்ணாவிரதம் என்று பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம், சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று சமீபத்திலேகூட, நான்கு மாதங்களுக்கு முன்பு கூட மறியல் செய்தார்கள். இவற்றையெல்லாம் சமாளித்து, தண்ணீர் வரக்கூடிய ஒரு சூழ்நிலையில், அங்கும் மழை வறண்டுவிட்ட காரணத்தால், நமக்கு வர வேண்டிய தண்ணீர் வர இயலவில்லை. அதற்கிடையிலே அங்கே சிறு பழுது ஏற்பட்டு விட்டது. அந்தப் பழுதைப் பார்த்து, இந்த மாதக் கடைசியிலோ அல்லது அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்குள்ளோ அந்தத் தண்ணீரை நிச்சயமாக நான் அனுப்பிவைக்கிறேன் என்று - நான் சற்றுக் கடுமையாக எழுதிய கடிதத்திற்கு - ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் எனக்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். 15 ஆம் தேதிக்குள்ளாக நிச்சயமாகத் தண்ணீர் தரப்படும் என்று எழுதியிருக்கிறார். இப்படிச் சில பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டனவே தவிர வேறல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து இதைவிட ஒரு பொறுப்பான பதிலை நான் எதிர்பார்த்தேன். துரதிருஷ்டவசமாக அவர்கள் அளிக்கவில்லை. ஆந்திர மாநில காங்கிரஸ்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்துவருவது, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குக் கொடுக்கப்படக்கூடாது என்பதற்காக அல்ல. சோமசீலா அணைத் தண்ணீரை, அவர்கள் விவசாயத்திற்காகப் பயன்படுத்தி வருகிற தண்ணீரை, இரண்டு மாநில அரசாங்கங்களும் வேறு காரணங்களைக் காட்டி, சென்னைக்கு அனுப்புவதைத்தான் அவர்கள் எதிர்த்துப் போராட்டம் நடத்தி வருகிறார்களேயொழிய, கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்பிரகாரம் சென்னைக்கு வருவதற்கு காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்தவேயில்லை. எந்த இடத்தில் வேண்டுமானாலும் இதனைப் பகிரங்கமாக விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன். இதைப்பற்றிய முழு விவரமும் என்னிடத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, காங்கிரஸ்காரர்களோ, அவர்களோ பகிரங்கமாக விவாதிக்கட்டும். நாங்கள்

[திரு. துரைமுருகன்] [2000 மார்ச் 29

பயப்படப்போவதில்லை. நாங்கள் தயார். We are ready. எங்களிடம் ஒளிவுமறைவு இல்லை. ஒன்று சொல்கிறேன். இப்போது அவர்கள் சொன்னதிலே ஒரு தவறான செய்தி-சோமசீலா அணையிலிருந்து போகிற தண்ணீர். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்களே, அந்தப் பெயரை எல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை—கர்னூல் பகுதி என்பது, அடுத்த பகுதியில் இருக்கிறது. ஆகையினாலே அவர்கள் பிரம்மகாரியம் செய்து தண்ணீரை அந்தப் பக்கம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அதிலே அவர்களுக்குத் தர வேண்டுமென்று தகராறு இருக்கிறது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வது, சோமசீலா அணைக்குத் தண்ணீர் வருவதற்கு முன்னாலேயே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பது. எங்களுக்குத் தந்துவிட்டுப் போக வேண்டும் என்கிறார்கள்.

இரண்டாவது, நாம் சோமசீலா அணையின் தண்ணீரைக் கேட்கவில்லை. நாம் பெற விரும்புவது, கிருஷ்ணா தண்ணீரைத்தான். ஆனால் கிருஷ்ணா தண்ணீர், பெண்ணையாற்றுக்குள் வருகிறது. அந்த அணை அங்கே இருப்பதால் இரண்டும் கலக்கிறது. எனவே முழுக்கப் போகவேண்டுமானால், அதிலே சில பிரச்சினைகள் இருந்தாலும், காங்கிரஸ்காரர்கள் திட்டமிட்டு அங்கே செய்கின்ற போராட்டம் காரணமாக, அந்த அரசும் நீக்குப் போக்கோடும் சில நேரங்களில் தாமதத்தோடும் நடந்துகொள்கிறது. காங்கிரஸ்காரர்கள் அதை மறுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அடுத்தது, geographical-ஆகத் தப்பாகச் சொல்கிறார்கள். அது வேறு place, இது வேறு place.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உறுதியாகச் சொல்கிறேன். காங்கிரஸ்காரர்கள் *12* T.M.C. கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வருவதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அவர்களுடைய எதிர்ப்பு முழுவதும் கிருஷ்ணா நதி நீரைக் கொடுங்கள், ஆனால், எங்களுக்கு விவசாயத்திற்காக அளிக்கப்பட்டிருக்கின்ற நீரை எடுத்து நீங்கள் சென்னைக்குத் தர வேண்டாம் என்பதுதான் அவர்களுடைய வாதம். அது பல பத்திரிகைகளில் வந்திருக்கிறது. பல நேரங்களில் காங்கிரஸ் தலைவர்கள் இதைத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். எனவே, இது திசை திருப்புகிற விஷயம் என்பதனை மெத்தப் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அப்படி ஒரு காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், விளைவு, சென்னைக்கு வருகின்ற தண்ணீருக்குத் தடை, அவ்வளவுதான்.



2000 மார்ச் 29]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்த அவையிலே சொல்லப்பட்ட காரணங்கள்கூட, உங்களுடைய வாயிலாகவே சொல்லப்பட்ட காரணங்கள்கூட, *1997* ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் நீங்கள் எழுதியிருப்பதுகூட, ஒரு சிறு கசிவு ஏற்பட்டிருக்கிறது, அந்தக் கசிவை அடைக்கிற காலதாமதத்தினால்தான் தண்ணீர் வரவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறீர்களேயொழிய, அரசியல் காரணங்கள் அதிலே சொல்லப்படவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மன்னிக்கவேண்டும். கசிவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னது அப்பொழுது. அப்பொழுதெல்லாம் காங்கிரஸ்காரர்கள் எந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடவில்லை. கசிவு ஏற்பட்ட காலத்திலே கசிவு ஏற்பட்டது என்று சொன்னோம். காங்கிரஸ்காரர்கள் கிளர்ச்சி செய்தது அதற்குப் பிறகுதான். எனவே அதையும் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர, காரணத்தை மாற்றிச் சொல்லவில்லை.

*முற்பகல் 11-15*

**திரு. ச. அழகிரி:** அடுத்து, எனக்கு மேலும் ஒரு சந்தேகம். ஒரு கசிவை சரி செய்வதற்கே இந்த அரசாங்கத்திற்கு நான்கு ஆண்டுகாலம் ஆகிறது என்று சொன்னால், ஓர் உடைப்பு ஏற்பட்டு இருந்தால் என்ன நிலை ஏற்பட்டிருக்கும் என்பதைத் தயவுசெய்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, விரைந்து கிருஷ்ணா நதி நீர் கிடைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அம்சங்கள் எதுவுமில்லை. தமிழகத்திலே *18* கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. அதிலே *5* நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்றன. இரண்டு நூற்பாலைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு, மதுரையிலே இருக்கிற மத்திய கூட்டுறவு வங்கியே மறுத்திருக்கிறது. எனவே, இந்த ஆலைகள் எல்லாம் இதுவரையில் *540* கோடி ரூபாய் அளவுக்கு நட்டத்தை ஈட்டியிருக்கின்றன. எனவே, இவற்றைச் சரி செய்வதற்கு வரவு-செலவுத் திட்டத்திலே எதுவும் சொல்லப்படவில்லை. அதேபோல, *18* கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. *3* பொதுத் துறை ஆலைகள் இருக்கின்றன. *1999* வரை இவற்றிலே ஏற்பட்டிருக்கிற நட்டம் *507* கோடி ரூபாய். மார்ச் *2000*-க்குள் மேலும் *100* கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று துறையினுடைய தணிக்கை சொல்கிறது. எனவே, இவற்றைச், சரி செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

என்பது தெரியவில்லை. மேலும், 1997-98, 1998-99, 1999-2000, 2000-2001 ஆகிய நான்கு வரவு-செலவுத் திட்ட அறிக்கைகளிலும் எண்ணூரிலே 7,000 கோடி ரூபாய் செலவில் ஒரு பெட்ரோலிய இரசாயனப் பூங்கா வரும் என்று, மீண்டும் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இந்தத் திட்டங்கள் அனுமார் வால் போல திரும்பத் திரும்ப வருகிறது. நீண்டு கொண்டே போகின்றன. 4 வரவு-செலவுத் திட்டங்களிலும் இவை கூறப்பட்டு, எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன? ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு? யாராவது ஒப்பந்தம் போட்டிருக்கிறார்களா? ஒரே விஷயம் ஏன் திரும்பத் திரும்ப வருகிறது என்பதைச் சொல்ல வேண்டும்.

அடுத்து, கடலூரிலே ரூ.2250 கோடி ரூபாய் செலவில் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை வரும் என்று இரண்டு வரவு-செலவுத் திட்டங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை வந்தபாடில்லை. அதுபோல சிலவற்றை மட்டும் நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தொழில் துறையை மேம்படுத்துவதற்காக எதுவும் கூறப்படவில்லை என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் துறையிலே நாம் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். Economic Times பத்திரிகை அதை மறுத்திருக்கிறது. ஆந்திரத்தை அடுத்து, மகாராஷ்டிரத்தை அடுத்துத்தான் தமிழகம் வருகிறது என்று சொல்கிறது. அதிலே தவறில்லை. எந்த இடத்திலே நாம் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. தகவல் தொழில்நுட்பத்திலேகூட நாம் ஓரளவிற்கு சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் நமக்கு அருகிலே இருக்கிற ஐதராபாத், பெங்களூர் அளவிற்குத் தகவல் தொழில் நுட்பத்திலே நாம் வளரவில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு நாம் வரவேண்டும். அப்படி வந்தால்தான் இந்தியாவிலேயே முதலிடத்தை நாம் பெற முடியும்.

நான் ஏற்கெனவே சொன்னேன், கிளிண்டனுடைய பயணம்கூட, சென்னைக்குக் கிடைக்காமல் போனது நமக்கு ஒரு பெரிய துரதிருஷ்டம். அவர் வந்திருப்பாரேயானால் பல்லாயிரம் கோடி ரூபாய் அளவுக்கான வர்த்தக உறவுகள் நமக்கு ஏற்பட்டிருக்கும், தமிழகம் மேல் நிலைக்குப் போயிருக்கும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கிளிண்டன் இந்தியாவிற்கே வரக்கூடாது என்று சொல்கின்ற கட்சியோடு கூட்டணி



அமைத்துக்கொண்டிருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் (மேசையைத் தட்டும் ஒலி) அவர் தமிழ்நாட்டிற்கு வரவில்லை என்று வருத்தப்படுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிளிண்டன் சீனாவிற்கே சென்றிருக்கிறார். எனவே, அது அவர்களுடைய கட்சிக் கொள்கை. எனவே, அதற்காக நீங்கள் அதைச் சம்பந்தப்படுத்துவது எனக்குச் சரியாகப்படவில்லை. (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. இந்திய கம்யுனிஸ்ட் கட்சி அல்லது இடது சாரிக் கட்சி, கிளிண்டன் இந்தியாவிற்கு வருவதை எதிர்ப்பதற்குக் காரணம், தனிப்பட்ட கிளிண்டன் முகம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களிடம் காரணம் கேட்கவில்லை. எதிர்த்ததைத்தான் சொன்னார்கள். நீங்கள் உட்காருங்கள். எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம்; இருந்தாலும் நாங்கள் தோழமையாக இருக்கிறோம் என்று அழகிரி சொல்கிறார். அதனால் பரவாயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். சீனாவிற்கும் சென்றார் என்று குறிப்பிட்டார். ஆனால் அவர் சீனாவிற்குச் செல்வது என்பதும், இந்தியாவிற்குச் செல்வது என்பதும் ஒன்றல்ல. இன்றைக்கும் W.T.O-வில் சீனாவை இணைத்துக்கொள்ளக் கூடாது என்று எதிர்க்கிறது அமெரிக்கா. காரணம் என்னவென்றால் அங்கே இருப்பது என்பது வலிமை நிறைந்த பொதுத் துறை. அதேபோல அங்கேயிருக்கிற power ஒடுக்கப்பட்ட மக்களின் கைகளிலே இருக்கிற காரணத்தால் இவர்களுடைய நிலை அங்கே வெல்லாது என்பதால் அவர்கள் சீனாவை விரும்பவில்லை. ஆனால் இந்தியாவை விரும்புகிறார்கள். அதனால்தான் நாங்கள் இங்கே எதிர்த்தோம்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு, 11-20 ஆகிவிட்டது. நீங்கள் 11-10 மணிக்குள் பேசி முடிக்க வேண்டுமென்று ஏற்கெனவே சொன்னேன். இன்னும் 5 நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு.ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளிண்டன் சீனாவுக்குச் சென்றார் என்று நான் சொன்னது தவறு. கிளிண்டன் சீனாவுக்கு வர வேண்டுமென்று சீனா விரும்புகிறது. அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவுளித் தொழிலின் மேம்பாட்டுக்காக 25 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கி இருக்கிறது. இந்தியாவில் இருக்கிற மொத்த ஜவுளி ஆலைகளிலே 50 சதவிகிதம் தமிழகத்தில் இருக்கிறது. அது தமிழகத்திற்கு ஒரு பெரிய பெருமை. ஆனால் அந்த 25 ஆயிரம் கோடியிலே நாம் பெற்றிருக்கிற பங்கு என்பது மிகவும் குறைவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, பெருமளவிலே நாம் அதிலிருந்து நிதியாதாரம் பெறுவதற்கு ஒரு Co-ordination Committee-யை முதல்வர் அவர்கள் உருவாக்க வேண்டும். அதிலே தொழில் அதிபர்கள், அரசு அதிகாரிகள், வங்கியாளர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து பெரும்பகுதி தொகையை தமிழகத்திற்குப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை பெரும்பகுதி மராட்டிய மாநிலத்திற்கும், அரியானாவுக்கும் சென்றிருக்கிறது என்பதையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறை. போக்குவரத்துத் துறையைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே பாராட்டக்கூடிய வகையிலே எதுவும் சொல்லப்படவில்லை. தமிழகத்திலே 21 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. 1996-97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திலே 300 கோடி ரூபாய் நட்டம் என்று நாம் அறிவித்திருக்கிறோம். 1998-99-லே கூடுதல் பங்கு மூலதலனமாக 200 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். 1999 அக்டோபர் மாதம் 25 ஆம் தேதி அளவில் ஒட்டுமொத்த நட்டம் 560 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. டீசல் விலை உயர்வால் மட்டும் நட்டம் 222 கோடி ரூபாய். ஆக ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது 782 கோடி ரூபாய் நட்டத்திலே நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயலாற்றி வருகின்றன என்பது பாராட்டுக்குரிய ஒன்றல்ல என்பதனை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். அதன்பிறகு பேருந்துக் கட்டணத்தை நாம் உயர்த்தினோம். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொன்னார்கள். அப்படியெல்லாம் உயர்த்தியும்கூட இப்போது 170 கோடி



ரூபாய் நட்டம் வந்திருக்கிறது. 612 கோடி ரூபாய் அளவுக்குப் பேருந்துக் கட்டணத்தை நாம் உயர்த்தியிருக்கிறோம் என்பதனையும் இந்தச் சபை உணர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டணம் உயர்த்தியது ஐந்து மாதங்களுக்கு முன்புதான். மீதி ஏழு மாதங்களுக்குக் கட்டணம் உயர்த்தாமலேயே போக்குவரத்துக் கழகங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அந்த ஏழு மாத நட்டத்தையும் ஈடுகட்டி, இந்த ஐந்து மாதங்களில் வந்த வருமானத்தின் மூலமாக இந்த நிதியாண்டில் கிட்டத்தட்ட இதனுடைய இழப்பு 100 கோடி அளவுக்குக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ச. அழகிரி:** ஆக, இந்த இழப்பைத் தவிர்த்து செயல்திறனோடு போக்குவரத்துக் கழகங்களை இந்த அரசாங்கத்தால் நடத்த முடியுமா? அப்படி முடியாது என்று சொன்னால் பாமர மக்களுடைய தலையிலே மிக அதிகமாக சுமையை ஏற்றுவது என்ன நியாயம் என்பதனை நான் கேட்க விரும்புகிறேன். முடியவில்லை என்று சொன்னால், தனியாருக்கு அவற்றை வழங்கிவிடலாம். தனியாருக்கு வழங்குவதன் மூலமாக அரசாங்கத்திற்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இலாபம் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரே பேச்சில் இரண்டு கருத்துகளை வெளியிட்டு இருக்கிறார்கள். முதலில் கரும்பு விவசாயிகளெல்லாம் தனியார் துறைக்கு கரும்பை அளிக்காமல், கூட்டுறவுத் துறையே பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கூட்டுறவுத் துறைக்காகச் சிபாரிசு செய்தார். தனியார் துறைகளை எல்லாம் ஒழித்துவிட வேண்டுமென்று சொன்னார். இப்பொழுது பேருந்துகளைப் பொறுத்தவரையில், தனியார் துறைக்குச் சிபாரிசு செய்து, பொதுத் துறையை ஒழித்துவிட வேண்டுமென்று சொல்கிறார். இந்த இரண்டு கொள்கைகளில் எந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வது? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறை விஷயமானாலும், பொதுத் துறை விஷயமானாலும் நான் தெளிவாக இருக்கிறேன். பொது மக்களுக்கு எந்தத் துறை இலாபம் பயக்குமோ

அந்தத் துறைக்கு வழங்கலாம். இன்றைக்கு அமெரிக்காவில்கூட தனியார் துறையும் இருக்கிறது, பொதுத் துறையும் இருக்கிறது. தனியார் துறையின் மூலமாக எவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியுமோ அவை தனியாரிடத்திலே இருக்கலாம். பொதுத் துறை மூலமாக, கூட்டுறவுத் துறை மூலமாக எவை எவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்தமுடியுமோ அவை பொதுத் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் இருக்கலாம். பொதுத் துறைதான் வேண்டுமென்று சொல்கிறவனும் அல்ல, தனியார் துறையே இருக்கக்கூடாது என்று சொல்கிறவனும் அல்ல. எந்தத் துறையில் இருந்தாலும் அது பொதுமக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டுமேயொழிய, பொதுமக்களுக்குப் பயன்படாத எந்தத் துறையும் வேண்டாம், அது அரசுத் துறையாக இருந்தாலும், சரி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் இயங்குகிற சர்க்கரை ஆலைகள்கூட நட்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. நீங்கள் பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று சொல்கிற கருத்தை நட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்கிறீர்களா, அல்லது பொதுமக்களுக்கு நன்மை வேண்டுமென்ற கருத்தை வைத்துச் சொல்கிறீர்களா? பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகங்கள் இயக்குகின்ற காரணத்தினாலேதான் பொதுமக்களுக்கு நன்மை கிடைக்கிறது. நட்டங்கள் ஏற்பட்டாலும் அதை ஈடுசெய்துகொண்டு கழகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 11-25*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு இவ்வளவு பெரிய விவாதமே தேவையில்லை. தனியார் துறையால் லாபகரமாக இயக்க முடியும் என்று சொன்னால், நான்கு நகரப் பேருந்துகளை அவர்களால் லாபகரமாக நடத்த முடியும் என்று சொன்னால், இரண்டு கிராமப் பேருந்துகளையும் நீங்கள் நடத்த வேண்டுமென்று ஒரு சட்டம் போட்டு அவர்கள் கையிலே கொடுப்பீர்களேயானால் நகரப் பேருந்தும் ஓடும், கிராமப்புறப் பேருந்தும் ஓடும், லாபமாகவும் அவர்கள் இயக்குவார்கள், மக்களுக்கும் service கிடைக்கும். இதிலே என்ன தத்துவம் இருக்கிறது? இதிலே எந்தத் தத்துவமும் கிடையாது. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். (குறுக்கீடு) சுப்பராயனுக்கும் எனக்கும் சண்டை வராது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கும் உங்களுக்கும் சண்டை வரப்போகிறது. (சிரிப்பு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவேதான் இந்த வரவு-செலவுத் திட்டம் ஒரு வறட்சியான வரவு-செலவுத் திட்டம் என்று நாங்கள் சென்னோம், அலங்கார வார்த்தைகள் இருக்கின்றனவேயொழிய தொலைதூரப் பார்வை இதற்கு இல்லையென்று நான் சொன்னேன். இப்போதுகூட நான் சொல்கிறேன், முதலமைச்சர் பல திட்டங்களை அறிவித்திருக்கிறார். உழவர் சந்தை பற்றி சொல்லியிருக்கிறார், வருமுன் காப்போம், வாழ்ந்து காட்டுவோம், சமத்துவபுரம் இப்படிப் பல பெயர்கள் இடப்பெற்றிருக்கின்றன. அழகான பெயர்கள். பெயர்களை வைப்பதிலே முதலமைச்சருக்கு ஈடு இணையானவர் யாரும் இருக்க முடியாது. அவர்கள் எடுக்கின்ற திரைப்படங்களாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தினுடைய திட்டங்களாக இருந்தாலும் சரி அழகாகப் பெயர் வைத்திருக்கிறார், நான் மறுக்கவில்லை. நான் இந்தத் திட்டங்களைக் குறை சொல்லவும் இல்லை. ஏதோ எதிர்க்கட்சி என்பதற்காக நான் குறை சொல்ல விரும்பவில்லை. இதில் சில நன்மைகள் இருக்கலாம். ஆனால், ஒன்று, ஏதோ இந்தத் திட்டங்களைப் போடுவதன் மூலமாகத்தான் இந்தத் தமிழகமே மேல்நிலைக்கு வர முடியும் என்பது போன்ற ஒரு மாயையை உருவாக்க நீங்கள் முயற்சிக்கிறீர்கள். ஒரு வீட்டின் உத்திரம் இடிந்து தொங்குகிறது, அந்த நேரத்திலே நான் அந்த வீட்டிற்கு வெள்ளை அடிக்கப்போகிறேன், வண்ணம் பூசப் போகிறேன் என்று சொல்லி ஒருவர் போனால், அதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம். இப்போது நேரம் 11-27.

**திரு. ச. அழகிரி:** உத்திரம் தொங்குகிறபோது வண்ணம் பூசுவது என்பது ஏற்புடைய செயல் அல்ல. எனவேதான் நான் சொல்கிறேன், ஒரு தொலைதூர நோக்கோடு, தொலைதூரத் திட்டங்களோடு இந்த அரசு செயல்பட வேண்டும். பேனை பெருமாள் ஆக்குகிற முயற்சியிலே நீங்கள் இறங்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவுதான் முயன்றாலும் தலையிலே இருக்கின்ற பேன் பேன்தான், பெருமாள் பெருமாள்தான். பெரிய திட்டங்கள்தான் தேசத்தை முன்நிறுத்த முடியுமேயொழிய, கவர்ச்சிகரமான திட்டங்கள் வாக்குகளை வாங்கித் தரலாம், தேசத்தை முன்னுக்கு இழுத்துச் செல்லாது என்பதனைப் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தமிழகத்திலே இடஒதுக்கீடு இருக்கிறது. இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் ஒரு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய சார்பிலேகூட, இப்போது ஓர் அறிக்கை வந்திருக்கிறது. நாடாளுமன்றத்திலே வசுந்தரா ராஜே சிந்தியா அவர்கள் இடஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். தனியார் ஆலைகளுக்கு இடஒதுக்கீடு பொருந்தாது, creamy layer கூடாது, 49.5 சதவீதத்திற்குமேல் இடஒதுக்கீட்டை மத்திய அரசு அனுமதிக்காது, பிற்படுத்தப் பட்டவர்களிலே இடஒதுக்கீடு பெறுகிறவர்களில் வருமான வரம்பிற்கு அதிகமாக இருக்கிறவர்களுடைய பட்டியல் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைப்போன்ற கருத்துகளையெல்லாம் சொல்லியிருக்கிறார். நாடாளுமன்றத்திலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அ.இ.அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எல்லாம் இதற்கு மாற்றுக் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசினுடைய சார்பிலே அதனுடைய கருத்து என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். தமிழக அரசு ஓர் அறிக்கையை விட்டிருக்கிறது. இது மத்திய இடஒதுக்கீட்டிற்குத்தான் பொருந்தும், மாநிலத்திலே இருக்கின்ற 69 சதவீத இடஒதுக்கீட்டிற்கு இது பொருந்தாது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், தனியார் துறையைப் பொறுத்தவரை, creamy layer-ஐப் பொறுத்தவரை, இராணுவத்திலும், விஞ்ஞானத் துறையிலும், பிற துறைகளிலும் இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய கொள்கை பாரதிய ஜனதா அரசோடு ஒத்துப்போகிறதா இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்த இடத்திலே நீங்கள் நீர்த்துப் போகிறீர்களோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. இந்த 69 சதவீத இடஒதுக்கீட்டைக்கூட கொஞ்சம் பின் நோக்கி நீங்கள் அழைத்துச் செல்கிறீர்களோ என்கிற ஐயம் உங்கள் மீது எனக்கு வருகிறது. ஏனென்றால், மாநில அரசின் சார்பாக ஓர் அறிக்கை வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை முடியுங்கள், திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. ச. அழகிரி:** இடஒதுக்கீட்டைப் பாதியில் விட வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், பாதியில் விட்டாலும் பரவாயில்லை. நீங்கள் எதிலும் முடிக்கமாட்டேன் என்கிறீர்கள், பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) குமாரதாஸ் நீங்கள் பேசாமல் இருங்கள்.



**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம், அரை நிமிடத்தில் பேசி முடியுங்கள். இப்போது நேரம் என்ன ஆகிறது என்று பாருங்கள்.

*முற்பகல் 11-30*

**திரு. ச. அழகிரி:** மாநில அரசாங்கம் விடுத்திருக்கிற அறிக்கையிலே 69 சதவீத இடஒதுக்கீட்டைக் காப்பாற்றுவதற்கு ஓர் அரசியல் சட்டப் பாதுகாப்பு வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இடஒதுக்கீட்டைப் பற்றி உங்களைவிட அதிகம் தெரிந்தவர்கள் யாரும் இருக்க முடியாது. ஏற்கெனவே இதே சட்டப் பேரவையிலே 31(சி) பிரிவின்கீழ் ஒன்பதாவது அட்டவணையிலே பாதுகாப்புப் பெற்று, சட்டமன்றத்திலே சட்டமாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்று, குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் போதுமான சட்டம். நீதிமன்றம்கூட அந்தச் சட்டம் தவறு என்று சொல்லவில்லை. விஜயன் நீதிமன்றத்திற்குப் போனபோது, அந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதேயொழிய, தமிழ்நாடு அரசாங்கம் போட்டது தவறு என்று அதிலே அவர்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முக்கியப் பிரச்சினை. எழுப்பிவிட்டார். அதனால் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது. மன்னிக்கவும். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே போடப்பட்ட சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். வந்த கோளாறு என்னவென்றால், உச்சநீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, முன்பிருந்த தமிழக அரசின் சார்பாக எடுத்து வைக்கப்பட்ட கருத்தில், இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு, அது நாடாளுமன்றத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஷெடியூலில் சேர்ந்திருக்கிறது என்ற உண்மையை எடுத்துச் சொல்லவில்லை. சொல்லாத காரணத்தால்தான், நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, 69 விழுக்காடு விடுபட்டுப் போகாத ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். கடந்த கால அரசும் சரி, இந்த அரசும் சரி, அது கெடாத வகையிலே பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதனால்தான்

அதிகாரபூர்வமாக இந்தப் பிரச்சினை தீர்வதற்கு ஒரு வழிவகை வேண்டும் என்று அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் நல்ல பேச்சாளர். ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் பேசுகிற பேச்சாளர்கள்தான் நல்ல பேச்சாளர்களாக இருக்க முடியும். நான் 10-55 மணிக்கு, 11-15 மணிக்குள் முடியுங்கள் என்றேன். 11-30 மணிக்கு 'முடிக்கிறேன், முடிக்கிறேன்' என்று பேசிக் கொண்டிருந்தால் எப்படி? அது முறையல்ல. நான் மிக அன்போடுதான் உங்களிடம் சொல்கிறேன், உட்காருங்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பதில் சொல்லி விட்டார்கள், திரு. ச. அழகிரி, உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸை விட்டு மீதம் இருப்பதைப் பேசச் சொல்லுங்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க புத்தாயிரமாவது ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் 13-வது முறையாக அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு நிலையில் இருப்பவர்களும் மனமுவந்து பாராட்டிய இந்த நிதிநிலை அறிக்கையின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துகளை, ஆலோசனைகளை எடுத்து வைத்துள்ளார்கள்.

இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கரவொலியை 78 முறை பெற்ற நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஏழையெளிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. பொதுவாக ஒரு நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, சமுதாய முன்னேற்றத்திற்கான



கருவி என்று சொல்லப்படுவது உண்டு. அந்தவகையிலே இது ஒரு புதிய பாதையை உருவாக்கியிருக்கிறது. காலத்திற்கு ஏற்ற புதுமையான, புரட்சிகரமான திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசுகிறபோது ஒவ்வொரு முறையும் ஒரு குற்றச்சாட்டைக் கூறி, அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களாலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாலும் சரியான பதிலடி கொடுக்கப்பட்டவுடன், அவரே ஒரு விளக்கத்தினைச் சொல்கிறார். விளக்கம் பெறக் கேட்டதாக ஒவ்வொரு முறையும் சொல்லி, அழகாக இங்கே சமாளித்தார். அந்த நேரத்திலே எனக்கு ஒரு குறள்தான் நினைவுக்கு வந்தது.

"தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற அந்தக் குறள் இதற்குச் சரியான பதிலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11-35

ஓர் அரசை எப்படி நடத்த வேண்டுமென்பதற்கு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொல்கிறபோது, ஓர் அரசாங்கம் ஒரு பசு மாதிரி. பசு பாலைக் கொடுக்கிறபோது மக்கள் அதைச் சுவைக்க முடியும். பாலைக் குடிக்கும் மக்கள் பசுவுக்குப் புல் கொடுக்காமல் இருந்தால் பால் எப்படிக் கிடைக்கும்? ஆகவே, வரியை அரசாங்கத்திற்குக் கொடுத்தால்தான் நன்மை கிடைக்க முடியும் என்ற ஒரு மிகப் பெரிய விளக்கத்தை நம்முடைய மூதறிஞர் இராஜாஜி சொன்னதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதேபோல மாண்புமிகு முதல்வர் அவர்கள், மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப குறைந்த வரி விதிப்பு, அதிக வரி வருவாய் என்ற சந்தைப் பொருளாதார சித்தாந்தத்தைக் கருத்தில்கொண்டு அழகாக நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள்.

இன்னும்கூடச் சொல்ல வேண்டுமானால், இந்த அரசைப் பொறுத்தவரையில், அனைவருக்கும் இருக்க இடம், உடுக்க உடை, நடக்கப் பாதை, குடிக்கத் தண்ணீர், பார்க்க வெளிச்சம், படிக்கப் பள்ளி, உயிர் காக்க சுகாதாரம் இவை அனைத்தும் முழுமையாகக் கிடைக்கும்வரை ஓய்மாட்டேன் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களு[illegible]யும் ஈடேறும்வரை எங்கள் பணி ஓயாது என்று செய[illegible]

222775

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் போன்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் கூட்டுப் பொறுப்புடன் நிறைவேற்றப்படுகிற பல்வேறு திட்டங்கள் இதிலே அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

கல்வி, உள்ளாட்சி, தொழில், சுகாதாரம், பொது விநியோகம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை கொடுத்து கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க ஒன்று.

அரசின் சார்பிலே அமைக்கப்படுகிற உயர்மட்டக் குழுக்கள் அளிக்கும் அறிக்கைகள் வெறும் அறிக்கைகள் என்ற அளவிலே இல்லாமல், அவற்றை செயலாக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கிற ஓர் அரசு நம்முடைய அரசு.

எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவினுடைய பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, இப்போது செயலாக்கத்திலே இருக்கிறது. பொதுவாக The destiny of a nation is being shaped in the class rooms என்பார்கள். ஒரு நாட்டினுடைய தலைவிதி வகுப்பறையிலே நிர்ணயிக்கப்படுகிறது என்பார்கள். அதற்கேற்ப அதிகமான நிதியைக் கல்வித் துறைக்கு ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்று. அதேபோல ஓர் ஆங்கிலப் பேராசிரியர், C.E.M. ஜோடு அடிப்படைக் கல்வி இல்லாத ஜனநாயகம் முரண்பாட்டின் மொத்த உருவம் என்று சொல்வார்கள். தந்தை பெரியார் அவர்கள் சொல்கிறபோது, ஒரு நாடு மக்களால் உருப்படுகிறது; அந்த மக்கள் ஆசிரியர்களால் உருப்படுகிறார்கள் என்று சொல்வார்கள். அந்த வார்த்தைகளுக்கேற்ப, கல்விக்கு அதிகமான நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று.

இன்னும்கூட சொல்ல வேண்டுமானால், ஒவ்வொருவரும் ஒரு கோணத்திலே சிந்தித்து தங்களுடைய கட்டுரைகளை எழுதி நோபல் பரிசு பெற்ற நேரத்தில், அமர்த்தியா சென் அவர்கள் மட்டும் ஒரு புதிய கோணத்தில், பஞ்சம், பட்டினி குறித்து ஆராய்ச்சி செய்து, நோபல் பரிசு பெற்றார். பொருள் பற்றாக்குறையால் பஞ்சம் ஏற்படுவதில்லை; பொருட்களை வாங்கும் சக்தி மக்களுக்கு இல்லாததால்தான் பஞ்சமும் பட்டினியும் உள்ளது என்று அவர் சொல்லியதுதான் அந்த நோபல் பரிசு பெறுவதற்குக் காரணமாக இருந்தது என்று சொல்வார்கள். மக்களுடைய வாங்கும் சக்தியைப் பெருக்கக்கூடிய அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. அந்த அமர்த்தியா சென்னினுடைய கொள்கையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள இந்த



நிதிநிலை அறிக்கையை ஒப்பீடு செய்து ஒரு பத்திரிகையிலே வந்த செய்தியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். The Government has also adopted the Nobel Laureate Amritya Sen's theory of spending more on education and social sectors. நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் அவர்களின் தத்துவமான, கல்விக்கும் சமூகப் பணிகளுக்கும் செலவிடுதலை நம்முடைய அரசு அப்படியே ஸ்வீகரித்து உள்ளது என்று பாராட்டப்பட்டதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவில், ஒரு முறை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய கவிதைக்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. அவர்கள் ஓர் அழகான அணிந்துரையை எழுதி இருந்தார்கள்; 'படித்தேன்' என்கின்ற ஒரு சொல்லை மட்டும் வைத்துக்கொண்டு, ஒரு சொல்லாடலோடு அருமையான ஓர் அணிந்துரை எழுதி இருந்தார்கள்; அதிலே அவர்கள் சொல்லுகிறபோது, இந்தக் கவிதையை

"கவிதைக்காக ஒரு முறை,
கருத்துக்காக ஒரு முறை,
கொள்கைக்காக ஒரு முறை,
பொருளுக்காக ஒரு முறை,
இப்படிப் பலமுறை படித்தேன்,
ஒவ்வொருமுறையும் ஒரு 'படித்-தேன்'
ஆகவே இனித்தது."

என்று 'படித்தேன்' என்ற சொல்லையே சொல்லாடலோடு அந்த அணிந்துரையை வரைந்திருந்தார்கள்.

*முற்பகல் 11-40*

இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் பார்க்கிறபோது ஒவ்வொரு கோணத்திலேயும் இதைப் படித்தோம், பரவசம் அடைந்தோம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு உள்ளது. நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்கிற நிலையில் இந்திய துணைக் கண்டம் இருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லாவற்றிற்கும் அகில இந்திய அளவிலே இருக்கக்கூடியவர்கள் உரைத்துப் பார்க்கும் உரை கல்லாக

'reference book'-ஆகத் திகழ்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்து பேசிய பேச்சுகள், விமர்சனங்கள் அனைத்தும் வழிகாட்டும் ஒளிவிளக்காக இப்போதும் இருந்து வருவதை, அவருடைய பழைய பேச்சுக்களிலிருந்து காண முடியும்.

நான் ஒரே ஒரு கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் நாடாளுமன்றத்தினுடைய மாநிலங்களவையின் தலைவராக இருந்தபோது, எதிர்க்கட்சியும், ஆளுங்கட்சியும் எப்படிப் பணியாற்ற வேண்டுமென்று பேசியபோது "எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஆளுங்கட்சி மேற்கொள்ளக்கூடாது. அதேநேரத்தில், எதிர்க் கட்சிகளின் விமர்சனங்கள், நடவடிக்கைகள் ஆளுங்கட்சி அல்லது அரசாங்கத்தின் நிருவாகத்தைச் செயலிழக்கச் செய்யும் அளவிற்கு இருந்துவிடக் கூடாது" என்று ஓர் அருமையானத் தத்துவத்தை அன்றைக்குச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் பற்றி, உங்களுடைய பண்பைப் பற்றி பத்திரிகைகளிலே ஒரு செய்தி வந்தது. அதாவது 24-3-1999 அன்று தினமணி பத்திரிகையின் தலையங்கத்தில் "தண்டனை வழங்குவதில் அவைத் தலைவர்..." என்று உங்களைப் பற்றி, பேரவைத் தலைவரைப் பற்றி வந்த வாசகத்தை—செய்தியை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அந்தத் தலையங்கத்திலே, "தண்டனை வழங்குவதில் அவைத் தலைவர் மிகுந்த பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருப்பதைக் குறிப்பிட்டே தீர வேண்டும்" என்று குறிப்பிட்டுவிட்டு, "1996 தேர்தலுக்குப் பிறகு, சட்டமன்றத்தில் கட்டமைப்பும், சூழலும் அடியோடு மாறிவிட்டிருந்த நிலையில் அவைத் தலைவர் மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜனின் மேற்பார்வையில் சபையில் பழைய ஆரோக்கியச் சூழல் மீண்டது." என்று வரலாற்றுச் சிறப்புமிக்க (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பாராட்டை மாண்புமிகு அவைத் தலைவருக்கு வழங்கியிருப்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்திய நாட்டிலே முன்னோடி மாநிலம் (Pioneer State) என்று சொல்லக்கூடிய அளவிற்கு, ஒரு நிலைக்கு நம்முடைய முதல்வரவர்கள் உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு ஓர் உதாரணம், ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தினைப் பற்றி அன்றைக்கு மத்திய வீட்டு



வசதித் துறை அமைச்சராக இருந்த போலோ பாஸ்வான் சாஸ்திரி அவர்கள், "தமிழ்நாட்டிலேதான், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்தான் ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியிருக்கிறார்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

நேரு அவர்கள், "கடைசியாக ஓர் ஏழையின் கண்ணீர் துடைக்கப்படும் வரையில் எங்கள் பணி முடிந்ததாக அர்த்தம் இல்லை" என்று சொல்லியதையும், அறிஞர் அண்ணா அவர்கள் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று சொல்லியதையும் இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து நான் நினைவுபடுத்த விரும்புவது, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் எங்களிடத்திலே நினைவூட்டுகிற நேருவைப் பற்றிய ஒரு வாசகம். Robert Frost என்ற அமெரிக்கக் கவிஞருடைய அந்தக் கவிதை வரிகள். நேருவினுடைய மேஜையினை அலங்கரித்துக் கொண்டிருந்த அந்தத் தன்மையை, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான பாணியிலே எங்களிடத்திலே எடுத்துச்சொல்வார்கள். அந்தக் கவிதை வரிகள்,

The woods are lovely, dark and deep

But I have promises to keep

And miles to go before I sleep

And miles to go before I sleep" என்பதாகும்.

*முற்பகல் 11-45*

வனப்புமிக்க சோலை தான், மணமும் மிக்க சோலைதான். எனக்கு உற்ற கடமைகள் எத்தனையோ இருப்பதால் காதம் பலவும் கடந்துதான் நான் கண்ணயர முடியும். இந்த வாசகத்தை நாங்கள் நினைக்கிறபோது எங்களுடைய நினைவுக்கு வருவது எங்களுடைய முதலமைச்சர் அவர்களுடைய இல்லத்தில் இருக்கிற "காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது" என்ற வாசகம்தான். அப்படி மக்களுடைய பிரச்சினையில் ஒன்றிப்போய் இருக்கிற ஒரு முதலமைச்சரால் வழங்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் எவ்வளவு தூரம் செயலாக்கத்தில் இருக்கிறார் என்பதற்கு ஒரு செய்தி; நேற்றையதினம் பத்திரிகையில் வந்த

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [2000 மார்ச் 29

செய்தி. பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்துவது தொடர்பாக அரசுத் துறைச் செயலாளர்களிடம் முதல்வர் ஆலோசனை நடத்தினார் என்ற செய்தியை நாங்கள் பார்க்கிறோம்.

இன்னும்கூட பல்வேறு செய்திகள் இருந்தாலும்கூட, மாநில சுயாட்சி போன்ற கொள்கை விளக்கங்கள் இருந்தாலும்கூட ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இடஒதுக்கீட்டைப் பொறுத்த அளவில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே ஒன்றைச் சொன்னார். எந்த நேரத்திலேயும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தனித் தன்மையை விட்டுக் கொடுத்ததாக அரசியல் வரலாறே கிடையாது. எவ்வளவு இருந்தாலும்கூட உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்பதிலே இம்மியளவும் மாறாத ஓர் இயக்கம். ஒருமுறை நாடாளுமன்றத்தில் இடஒதுக்கீடு குறித்த பிரச்சினை வந்தபோது இப்போது மத்திய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் குறிப்பிட்டதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அவர், The First Amendment of the Constitution is the gift of the Dravidian movement to the backward classes of India என்று இடஒதுக்கீட்டுக் கொள்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கையை எடுத்து வைத்து வாதிடக்கூடிய சந்தர்ப்பங்களில் எந்த நேரத்திலும் வழுவியது கிடையாது. அதைப்போல இப்போது இந்த நிதிநிலை அறிக்கையை விமர்சிக்கின்றவர்களைப் பற்றி ஒரு செய்தியை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். 'Women's Era'— பெண்கள் சகாப்தம் என்ற ஒரு பத்திரிகை, மார்ச் மாதம் 4 ஆம் தேதி அதனுடைய முதல் பக்கத்தில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அது, கடந்த கால நிதிநிலை அறிக்கையின் மலிவுப் பதிப்பு என்றும், கண் துடைப்பு என்றும் சொன்னவர்களைப் பற்றிய வாசகம். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "அரசியல்வாதிகளிலேயே அதிகமான மோசடி செய்து ஊழல் செய்தவர்கள், தங்களுடைய சுயநலத்திற்காக எதையும் செய்யக் கூடியவர்கள்", அடுத்து சொல்கிறார்கள் "முதல் மந்திரியாக இருந்தபோது குவித்த சொத்துகள் வியக்கத்தக்கது." இதை நான் சொல்லவில்லை, பத்திரிகையிலே சொன்ன செய்தி. நாட்டிலுள்ள எந்த முதலமைச்சரும் தங்கள்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் என்ன?



2000 மார்ச் 29]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் பத்திரிகையிலே வந்த செய்தியை மட்டும் வைத்து முன்னாள் முதலமைச்சரைப் பற்றி இவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறபோது அதுபற்றி மறுத்துப் பேசுங்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம், விரைவாகப் பேசி உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறபோது மறுத்துப் பேசுங்கள். நீங்கள் ஆதாரம் என்று கேட்டால், வழக்கு நடக்கிறது என்று சொல்வார்கள். எதற்காக வெட்டியாக பேச்சை வளர்க்கிறீர்கள். நீங்கள் பேசுகிறபோது மறுத்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்தியைப்பற்றி இங்கே சொல்லக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். உறுப்பினரும் அந்த முறையைக் கையாள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் நான் சொல்கிறேன். ஆதாரம் என்ன என்று கேட்டால், வழக்கு நடக்கிறது, இத்தனை கோடிக்கு நடக்கிறது, இதெல்லாம் தேவையில்லாதது. உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறபோது பேசுங்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம் தன்னுடைய உரையை பேசி முடித்துவிட்டதாகக் கருதப்படுகிறது. இனிமேல் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சரியாக 10 நிமிடங்களுக்குள் உரையை முடிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

***திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்) தலைமை]

இந்த ஆண்டு நாங்குநேரி தொகுதியில் பச்சையாறு அணைக்கட்டுக்கும், கொடுமுடியாறு அணைக்கட்டுக்கும் நிதிஒதுக்கீடு செய்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை

அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் அன்பார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்குநேரி தொகுதி பின்தங்கிய தொகுதி என்பதைக் கருத்தில் கொண்டு அங்கே உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாங்குநேரி தொகுதியைப் பொறுத்தமட்டில், களக்காடு பகுதியில் ஆதிதிராவிட மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அங்குள்ள பல்வேறு சமுதாய மக்கள், குறிப்பாக ஆதிதிராவிட சமுதாய மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் நாங்குநேரியை விட்டு, மும்பை தாராவி பகுதிக்குச் சென்று அங்கே வேலை செய்து வருகிறார்கள். இப்பொழுது களக்காடு மற்றும் நாங்குநேரி பகுதியைச் சேர்ந்த மக்கள் மும்பையில் வேலைவாய்ப்பு இல்லாத நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்கள் இங்கும் அங்குமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைந்து வேலை தொடங்குகின்றபோது, களக்காடு மற்றும் நாங்குநேரி பகுதியிலிருந்து, மும்பைக்குச் சென்று அங்கே வேலையில்லாமல் இருக்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், நாங்குநேரி தொகுதியில் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றவர்களுக்கும், முன்னுரிமை அளித்து, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, நாங்குநேரி தொகுதியில் வளர்ந்து வருகின்ற நகரம், வள்ளியூர் நகரம். வள்ளியூர் நகரத்திலிருந்து தாலுகா அலுவலகம் செல்ல வேண்டுமானால், இராதாபுரம் செல்ல வேண்டியிருக்கிறது. வளர்ந்து வருகின்ற நகரம் என்பதைக் கருத்தில் கொண்டு, இராதாபுரம் தாலுகாவில் இருக்கின்ற வள்ளியூர் பகுதியையும் திசையன்விளையையும் சேர்த்து, வள்ளியூரைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு தனி தாலுகா அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் வள்ளியூரில் அரசு மருத்துவமனை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட பிறகும் அரசு மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்கு இதுவரையிலும் இடம் தேர்வு செய்யாத நிலையும், கட்டடம்



கட்டப்படாத நிலையும் இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அரசு மருத்துவமனை அமைக்கப்படும் என்று அறிவித்தும்கூட இதுவரை கட்டடம் கட்டவில்லையாதலால் பல்வேறு பகுதிகளிலுள்ள தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்லவேண்டியிருப்பதால், உடனடியாக, அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வள்ளியூரில் அரசு மருத்துவமனை அமைய, இடம் தேர்வு செய்வதுடன் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரியை தலைமையிடமாகக் கொண்டு நாங்குநேரியில் அரசு மருத்துவமனை இருக்கிறது. அந்த அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட டாக்டர் பணியிடங்கள் 5. அந்த 5 டாக்டர் பணியிடங்களிலே இப்போது இரண்டு பேர்கள்தான் பணியாற்றி வருகிறார்கள். குறிப்பாக நாங்குநேரி சுற்றுப் பகுதியில் இருந்து நாங்குநேரி அரசு மருத்துவமனைக்கு பேறுகாலத்தில் வருகின்ற பெண்களுக்கு மகப் பேறு பார்ப்பதற்கு பெண் மருத்துவர்கள் கிடையாது. ஆகவே, காலியாக இருக்கின்ற மூன்று பணியிடங்களுக்கும் மருத்துவர்களை நியமிக்கும்போது கண்டிப்பாக பெண் மருத்துவரையும் நியமிக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாங்குநேரி பகுதியில் சாதாரண குடும்பங்களைச் சார்ந்த படித்த இளைஞர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் மேற்படிப்பு படிப்பதற்கு அல்லது கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால், நாகர்கோவில் அல்லது பாளையங்கோட்டை செல்ல வேண்டியிருக்கிறது. நாங்குநேரி தொகுதியைப் பொறுத்தமட்டில், அரசுக் கல்லூரியோ அல்லது தனியார் கல்லூரியோ கிடையாது. இப்போது மாணவர்களுடைய நலனைக் கருதி, தனியார் ஒருவர், நாங்குநேரி பகுதியிலே கல்லூரி அமைப்பதற்கு முன்வந்திருக்கிறார். அப்படி தனியார் ஒருவர் முன்வந்திருப்பது வரவேற்கக்கூடிய விஷயம். அவர் தனியார் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி வேண்டி ஏற்கெனவே அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ளார். அந்தக் கல்லூரிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நமது கல்வி அமைச்சருக்கு நானும் சிபாரிசு செய்திருக்கிறேன். ஆகவே, நாங்குநேரி பகுதி மாணவர்களுடைய நலனைக் கருதி தனியாரால் அமைக்கப்பட இருக்கின்ற கல்லூரிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 634 கிராம ஊராட்சி ஒன்றியங்களில் 518 கோடி ரூபாய் செலவில் க'ந்த 3 ஆண்டுகாலமாக

பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. வரும் நிதியாண்டில் 210 கிராம ஊராட்சிகளில் 75 கோடி ரூபாய் அளவில் பணிகள் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, இந்த நிதியாண்டில், 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு அதிக அளவு பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இழப்பே இதில் இல்லை. அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, குறையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நாங்குநேரி வட்டத்திலுள்ள சிங்கிக்குளம், ஒத்தையடி, சிவகிரி, ராயகிரி போன்ற பகுதிகளிலே உள்ள ஆசாரி சமுதாய மக்கள் கோயில், வீடு கட்டுவதற்காக மலையிலிருந்து கல் உடைத்து பயன்படுத்தி வந்தார்கள். தற்சமயம், அரசு அதிகாரிகள் அங்கே கல் உடைக்கக்கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள். அந்தக் கல் உடைக்கும் தொழில் செய்பவர்கள் கல் குவாரி தொழிலையோ அல்லது ஜல்லி உடைக்கும் தொழிலையோ செய்வதில்லை. அவர்கள் வீடு கட்டுவதற்கும், கோயில் கட்டுவதற்கும்தான் கல் உடைத்து வந்தார்கள். இந்தப் பகுதியில் அது தடை செய்யப்பட்டிருக்கிறது. அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையை அந்த ஆசாரி சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். மேலும், கோயில் கட்டும் பணிகளும், வீடு கட்டும் பணிகளும் தடைபட்டு வருகின்றன. ஆகவே, இந்தப் பகுதியிலுள்ள ஆசாரி சமுதாய மக்களுடைய வாழ்வைக் கருதி, நலனைக் கருதி, அவர்கள் கல் உடைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

நாங்குநேரி தொகுதியிலே, சில கிராமங்களிலே, சில பேர்களுக்கு ration card கிடைத்திருக்கிறது. ஆனால், சில கிராமங்களில் கிடைக்கவில்லை. ஆகவே, ration card கிடைக்காத கிராமங்களிலே அனைவருக்கும் ration card கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*



நாங்குநேரி தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்ந்திருக்கிறது. இப்போது கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலமாக பல்வேறு கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. புளியங்குறிச்சி என்ற கிராமத்திலிருந்து இரண்டு கிராமங்களுக்குத் தண்ணீர் செல்கிறது. ஆனால், அந்த புளியங்குறிச்சி கிராமத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குத் தண்ணீர் செல்கிறபோது, அந்த கிராமத்திற்குத் தண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, புளியங்குறிச்சி, புதுக்குறிச்சி, இடையன்குளம், மேல்கரை, சடையமான்குளம், சுப்பிரமணியபுரம் போன்ற பகுதிகளிலே குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதால் அந்த கிராமங்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்குவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லை ஆவின் பால் பண்ணையில் 10 ஆண்டு காலமாக தினக்கூலி தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், விவசாயிகள் வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருப்பதால், விவசாயிகளுடைய நலனையும் விவசாயிகளுடைய நிலையையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, விவசாயிகள் வங்கியில் வாங்கிய கடன்களை ரத்து செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது).* ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

சிவகிரி வட்டத்திலே நீண்ட நெடுங்காலமாக கோம்பையாறு அணைக்கட்டு கட்டப்பட வேண்டுமென்று மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நாங்குநேரி தொகுதிக்கு இரண்டு அணைக்கட்டுகளைத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிவகிரி வட்டத்திற்கும் கோம்பையாறு அணைக்கட்டுத் திட்டத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களுக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு உழுபவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆகவே, கோயில் நிலங்களுக்கான பணத்தை விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு அந்த நிலத்தை அவர்களுக்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வது மட்டுமல்லாமல், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு,

இதுவரை பேச வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கியதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் கவர்ச்சிகரமான திட்டத்தைத் தந்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற அந்தத் திட்டத்தின்மூலம் 634 ஊராட்சிகளில் 518 கோடி ரூபாய் அளவிலே அடிப்படை வசதிகளைச் செய்து தந்திருக்கிறோம். நடப்பாண்டில் 210 கிராமங்களிலே, 75 கோடி ரூபாய் அளவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை ஏன் இவர்கள் குறை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்போது உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, அரசாங்கத்தினுடைய பல்வேறு துறைகளின் மூலமாக நிதி வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு கிராமத்திலும் சாலை வசதிகள், சிமெண்ட் சாலைகள், பள்ளிக்கூடம், திருமண மண்டபம் என்று பல அடிப்படை வசதிகளையும், குளங்களை ஆழப்படுத்துதல் போன்ற வசதிகளையும் செய்து கொண்டிருக்கிறோம்.

நண்பகல் 12-00

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாயிலிருந்து அதிகமான அளவிலே பங்கு கொடுத்தும், புதிதாக Cable T.V. நடத்துபவர்கள்மீது கேளிக்கை வரியை அவர்களாகவே விதித்து வசூல் செய்து கொள்கின்ற நல்ல கொள்கையையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது குடிநீர்ப் பிரச்சினை ஓரளவு முழுமையாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 2050-லே எப்படி குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கும் என்பதைச் சிந்தித்து,



நமது முதல்வர் அவர்கள் அதைத் தீர்ப்பதற்கு இப்பொழுதே திட்டம் தீட்டியதிலிருந்து, அவர்களுடைய எண்ணம் எந்த அளவிற்குக் கிராமப்புறங்களிலும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் விவசாயிகளுடைய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து, அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு, இப்போது அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, அபராத வட்டி நீக்கப்படுவது பற்றியும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே செயலாளர்களுடைய சில தவறான முறைகளை மாற்றுவதற்காக அவர்களை மாற்றக்கூடிய அந்தத் திட்டத்தினையும் இந்த ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். பாசன ஏரிகளிலும், கண்மாய்களிலும் தூர் வாரும் பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உழவர் சந்தையை எடுத்துக்கொண்டோமானால், இப்போது மதுரையிலே மிகப் பெரிய அளவில் வெற்றிகரமாக அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தாங்கள் பயிரிட்ட காய்கறிகளை அவர்களே சந்தைக்குக் கொண்டு சென்று, உழவர் சந்தையிலே நல்ல விலைக்கு, தரகு இல்லாமல் விற்பனை செய்து, மகிழ்ச்சியோடு திரும்புகிறார்கள். குறைந்த விலையிலே அதிகமான காய்கறிகளை வாங்கக்கூடிய தாய்மார்கள் தலைவர் கலைஞர் அவர்களைப் போற்றுவதை நாங்களெல்லாம் காதால் கேட்கிறோம். அந்த அளவிற்கு இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொகுதிக்கு ஒன்று என்ற அடிப்படையிலே, என் தொகுதியில் உழவர் சந்தையைத் தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 100 சதுர அடிகூட இல்லாத சாதாரண ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்கள், கிராமப்புறமானாலும் சரி, நகர்ப்புறமானாலும் சரி, புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்பவர்களுக்கு, பட்டா வழங்குவது என்று சொன்ன திட்டத்தை மிகப்பெரிய மனதோடு வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இப்போது எந்தக் கிராமத்தை எடுத்துக்கொண்டாலும், தொடக்கப் பள்ளி இல்லை என்று சொல்ல முடியாத அளவிற்கு, கடந்த இரண்டு ஆண்டுகளிலே 712 தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுடைய எதிர்கால நலனைக் கருதி, இப்போது 1000 மேல்நிலைப் பள்ளிகளிலே கணினிப் பயிற்சியைப் பெறுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உலக நாடுகள் கணினி மயத்திலே மிக வேகமாக வளர்ந்து வருகின்ற இந்த

நேரத்திலே நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்திலே ஒவ்வொரு மாவட்டமாக கணினிமயமாக்குவதும், பத்திரப் பதிவு அலுவலகங்களிலே கணினியை அறிமுகப்படுத்துவது என்பதும் மிகப் பெரிய திட்டம் என்பதால் இதனை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் நியமனம். கடந்த நான்கு ஆண்டுகளிலே சுமார் 40,000 ஆசிரியர்களை வேலைவாய்ப்பு முன்னுரிமை அடிப்படையிலே நியமித்து பல குடும்பங்களிலே விளக்கேற்றி வைத்திருப்பதுடன் நடப்பு ஆண்டில் 6,000 ஆசிரியர்களை நியமிக்க இருப்பது குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசிடம் இருந்து நிதியை அதிகமாகப் பெற்று, அந்தச் சுமார் 2,000 கிலோமீட்டர் தேசிய நெடுஞ்சாலை தரமான சாலைகளாகப் போடப்பட்டு வருகின்றன. கிராமச் சாலைகளெல்லாம் தார்ச் சாலைகளாக ஆக்கப்படுவதுடன் சுமார் 5,000 கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த ஆண்டு சிமெண்ட் சாலைகள் போடும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 4,290 கிலோமீட்டருக்கு இதர மாவட்டச் சாலைப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் 8,235 கிலோமீட்டருக்குப் பணிகள் இந்த ஆண்டு நடைபெற இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட சாலைப் பணிகள் இப்போது தமிழ்நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளை வருகிற ஏப்ரல் 13 ஆம் தேதி அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட இருக்கிறது என்ற நல்ல செய்தி, நீங்கள் அடிக்கல் நாட்டுவிழா நடத்துவதற்காக வரக்கூடிய செய்தி எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மதுரை மாநகரைச் சேர்ந்தவன் என்ற முறையிலே உள்ளபடியே உங்களை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவிப்பதற்கு நான் விரும்புகிறேன்.

அடுத்து, தென்மாவட்ட வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்களுக்காக ஒரு குழுவை அமைத்து, எங்களுடைய குறைகளை எல்லாம் கேட்டு, இப்போது அந்தக் குறைகளை சரிசெய்வதற்காக சில வசதிகளை நீங்கள் செய்வதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றி தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-05

NABARD மூலம் குளங்கள் மற்றும் கண்மாய்கள் பராமரித்தல், தோட்டக் கலைப் பயிர்கள் உற்பத்தியை மேம்படுத்துதல், தகவல் தொழில்நுட்ப வசதிகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல், கன்னியாகுமரியில் இரப்பர் தொழிற்சாலை அமைத்தல், குளச்சல் துறைமுகத்தை மேம்பாடு செய்தல், நாங்குநேரியில் Hi-Tech தொழில்நுட்பப் பூங்கா ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களை நீங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

எங்களுடைய மதுரை மாநகரைச் சுற்றி பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், எல்லாத் தொழிற்சாலைகளும் இப்போது சென்னையிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. மதுரை மாநகரத்திற்கு இப்போது அகல இரயில் பாதை வந்திருக்கிறது. மற்ற சாலை வசதிகளும் மிகப் பெரிய அளவிலே, நல்லமுறையிலே இருக்கிற காரணத்தினால், பெரிய தொழிற்சாலைகளுக்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனி, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு புதிய தரிசுநில மேம்பாட்டுத் திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அதற்காகவும் நான் தங்களைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைக் கூறிக்கொண்டு, வணிகர்களுடைய வேண்டுகோளை ஏற்று, (மணியடிக்கப்பெற்றது) அன்றாடம் பொது மக்கள் பயன்படுத்தி வரக்கூடிய பொருள்களுக்கு வரி குறைத்திருப்பது, வரி விலக்கு அளித்திருப்பது போன்ற நல்ல செயல்களைச் செய்திருப்பதற்காக நான் பாராட்டி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. முகம்மது கோதர் மைதீன்.

***திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால், இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது, ஒருசில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. முகம்மது கோதர் மைதீன்] [2000 மார்ச் 29

நான்காவது முறையாக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பாக, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே, பல நல்ல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும், குறிப்பாக, நெல்லை மாவட்டத்திற்கென்று திட்டங்கள் வருகின்றபோது, அவை முதலிலே பாளையங்கோட்டையிலேதான் செயல்படுத்தப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே நன்றியுணர்வோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, முதன்முதலாக, நெல்லை மாவட்டத்திலே, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே, சமத்துவபுரம்; அதேபோல் 1989 ஆம் ஆண்டு, பாளையங்கோட்டைக்குப் போட்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு, முதல்வர் அவர்கள், நான்காவது முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பின்பாகத்தான் ரூ. 6 கோடியே 63 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதேபோல், Oxford of South என்று பெயர் பெற்றிருக்கிற பாளையங்கோட்டைக்குச் சட்டக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, புற்று நோய்க்குச் சிகிச்சை அளிக்கின்ற cobalt therapy என்ற ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவியானது தரப்பட்டு, இப்போது அது சிறப்பாக தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருக்கிறது.

இப்போது உழவர் சந்தையும் பாளையங்கோட்டையிலே நிறுவப்பட்டிருக்கிறது. மேலப்பாளையம், கருங்குளத்தில் பீடித் தொழிலாளர்களுக்காகக் குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டிருப்பதும், நம்முடைய முதல்வர் அவர்களுடைய இந்த நல்ல ஆட்சியிலேதான். பச்சையாறு திட்டத்தைப் பொறுத்தமட்டில், நான் 1971-வது ஆண்டில், சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், களக்காட்டிலே அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்குப் பின்பாக, அந்தப் பணி நடைபெறாமல் இருந்து, கடந்த காலத்திலே இருந்தவர்கள் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சுமார் 35 குளங்கள் மற்றும் 3,357 ஏக்கர் நிலங்களை மாற்றி, வேறொரு தொகுதியிலே இருக்கக்கூடிய நிலங்களையெல்லாம், பச்சையாறு மூலம் பயன்பெறக்கூடிய திட்டத்திலே சேர்த்துவிட்டார்கள். நானும், என்னுடைய தொகுதி விவசாயிகளும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே எங்களுடைய நியாயமான கோரிக்கையினை முறையிட்டோம்.



2000 மார்ச் 29] [திரு. முகம்மது கோதர் மைதீன்]

எங்களிடம் இருக்கக்கூடிய பொதுப் பணித் துறை மற்றும் Revenue Records-ஐ எல்லாம், அவர்களிடத்திலே காட்டிய நேரத்தில் எங்களுடைய நியாயமான கோரிக்கைகளை உணர்ந்து, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய 35 குளங்களையும், 3,357 ஏக்கர் நிலங்களையும் வடக்குப் பச்சையாறு திட்டத்தின்மூலம் பயன்பெறுவதற்காகச் சேர்த்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மேலப்பாளையத்திலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் இப்போது கட்டித் தரப்பட்டுள்ளன. என்னுடைய தொகுதியிலே இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிவர்த்தி செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

பாளையங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தமட்டில், 1996-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டதற்குப் பின்பாக, இத்திட்டம் இரண்டு ஆண்டுகளிலே நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டது. அப்படியென்றால், 1998-ஆவது ஆண்டிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதிகாரிகளின் மெத்தனப்போக்கின் காரணமாக இதுநாள்வரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வதற்காக திருநெல்வேலிக்கு வந்தபோது, நான் இந்தத் திட்டத்தைப் பற்றி அவரிடம் விரிவாக எடுத்துச் சொன்னேன். அவர்களும் இந்தத் திட்டம் காலதாமதம் ஆவதற்கு அதிகாரிகளிடத்திலே மிகுந்த கோபம் கொண்டு, உடனே இதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அன்றைக்கு எங்களிடம் கொடுக்கப்பட்டிருந்த அறிக்கையிலே இந்த திட்டம் 2000-ஆம் ஆண்டு 3-ஆவது மாதத்திற்குள் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பு தரப்பட்டிருந்தது. ஆனால், இன்றைக்கு 2000-ஆம் ஆண்டின் மூன்றாவது

மாதமும் முடிந்துவிடுகிற நிலையில் அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1996-ஆம் ஆண்டிற்குப்பிறகு, பாளையங்கோட்டைத் தொகுதியிலே பல விரிவாக்கப் பகுதிகள் உருவாகி இருக்கின்றன. அதிலே வி.என். சத்திரம் பகுதி, கட்டபொம்மன் நகர், காமாட்சி நகர், மூகாம்பிகை நகர், அருணாச்சலம் நகர் மற்றும் ரஹ்மத் நகர் போன்ற 30, 40 விரிவாக்கப் பகுதிகள் உருவாகியிருக்கின்றன. இப் பகுதிகளிலே, குறிப்பாக மூகாம்பிகை நகர், ரஹ்மத் நகர், சீனிவாச நகர் போன்ற பகுதிகளிலே நிலத்தடி நீர் மிகுந்த உப்பு நீராக இருக்கின்ற காரணத்தினாலே அவற்றை மக்கள் பயன்படுத்த முடிவதில்லை. இவற்றையெல்லாம் விட, இப்போது வி.என். சத்திரம் பகுதியில் பகுதி-1, பகுதி-2 மற்றும் பகுதி-3 என்கின்ற முறையில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பல வீடுகள் கட்டப்பட்டுள்ளன. குறிப்பாக இங்கு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உயர் அதிகாரிகள் எல்லாம் வாழ்கிறார்கள். பாளையங்கோட்டையிலே இருக்கக்கூடிய பழைய பகுதிகளுக்கும், புதிதாக உருவாகியுள்ள சில பகுதிகளுக்கும் ரூ.6 கோடியே 63 இலட்சத்திலே உருவாக்கப்பட்டு இருக்கக்கூடிய திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறது. நான் குறிப்பிட்டிருக்கிற மற்ற பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்த நேரத்திலேகூட, அவர்களிடத்தில் இதை நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே, வி.என். சத்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய குடிநீர்த் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல்வர் அவர்களின் நிதிநிலை அறிக்கையிலேகூட, பதினோராவது பக்கத்தில், நகர்ப்புற குடிநீர்த் திட்டம் என்கின்ற தலைப்பிலே, பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தில் 76 நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு, அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஏற்பாடு செய்ய இருக்கின்றது என்பதை நான் பார்த்தேன். ஆகவே, அருள்கூர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், இந்த 76 நகரங்களிலே பாளையங்கோட்டை தொகுதியிலே நான் குறிப்பிட்டுள்ள பகுதிகளையும் சேர்த்து அவற்றிற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** அடுத்து பாளையங்கோட்டையிலேயும், மேலப்பாளையத்திலேயும் குடிநீர் விநியோகம் மாநகராட்சியால் மிகவும் மோசமான நிலையிலே செயல்படுத்தப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். பாளையங்கோட்டையிலும், மேலப்பாளையத்திலும் முறையாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. கடந்த இரண்டு மாதங்களாக, அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் குடிநீருக்காக பல இடங்களிலே அலைந்துகொண்டு இருக்கிறார்கள். மாநகராட்சியினுடைய நிருவாகம், அதைப்பற்றி சற்றும் கவலைப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்று அவர்கள் ஒன்றைச் சொல்கிறார்கள். மணப்படைவீட்டிலேயும், அதேநேரத்தில் கொண்டா நகரப் பகுதியிலேயும் நீரேற்றும் பம்புகள் நீண்ட நெடுநாட்களுக்கு முன்பாகப் பொருத்தப்பட்டன, ஆகவே அவை பழுதுபட்டிருக்கின்றன. அப்படி பழுதுபட்டிருக்கக்கூடிய நிலையின் காரணமாக, அங்கே இருந்து தண்ணீரை முறையாக தொட்டிகளுக்கு எடுக்க முடியவில்லையென்கின்ற குறையைச் சொல்கிறார்கள். ஆக, அந்த மாநகராட்சி அதிகாரிகளினுடைய மெத்தனப் போக்கின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை உருவாகியிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் கவலையோடு இருக்கிறார்கள்.

இன்னொன்றையும் சொல்லவேண்டுமானால், மாநகராட்சியினுடைய நிருவாகத்திலே இருக்கக்கூடிய ஆணையாளர் அவர்களைப்பற்றி மக்கள் எல்லாம் மிகுந்த வேதனையில் இருக்கிறார்கள். கடந்த பல மாதங்களுக்கு முன்பாக திருநெல்வேலி மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலே, மாநகராட்சியினுடைய ஆணையாளர் வீடுகளை ஜப்தி செய்வது, கோயில்களை ஜப்தி செய்வது, தான் சொல்கின்ற காரியங்களைச் செய்யாதவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்வது என்கின்ற நிலையிலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்கின்ற புகார் நெல்லை மாநகராட்சியிலே இருக்கிறது. கடந்த 4 நாட்களுக்கு முன்பாகக்கூட, ஒருசில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. மின் துறையைச் சார்ந்த ஓர் அதிகாரியிடத்திலே தன்னுடைய வீட்டிற்கு three phase line உடனே வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்கு அவருக்கு முறையாக, அந்த விநியோகம் தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று அவர்

சொன்னதற்குப் பின்பாக, மாநகராட்சியினுடைய ஊழியர்களை அழைத்து, லாரியிலே குப்பையை எடுத்துக்கொண்டுபோய், அந்த அதிகாரியினுடைய வீட்டிற்கு முன்பாகக் கொட்டச் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட ஒருவர்தான் இப்போது மாநகராட்சியினுடைய ஆணையாளராக திருநெல்வேலியில் இருந்து கொண்டிருக்கிறார். பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. நம்முடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள்கூட விளக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, அவரைப்பற்றி மனு கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய ஓர் ஆணையாளராக அவர் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு முக்கியமான செய்தி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** கூடுதலாக இரண்டு நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். மேலப்பாளையத்திலே, மேட்டுப்பகுதியாக இருக்கக்கூடிய, 31, 32, 36, 37 ஆகிய வார்டுகளிலே குடிநீர் கிடைக்கவில்லை, ஆகவே, அங்கே ஜின்னா திடலிலே ஒரு tank ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக 7-11-1998-லே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நான் 4 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதுவரையிலே, அந்தப் பணியானது நிறைவேற்றப்படவில்லை. ஆனால் மாநகராட்சி திட்ட அலுவலருக்குச் சென்ற மாதம் கொடுத்த அறிக்கையிலே, அந்தப் பணி நிறைவேற்றப்பட்டதாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பணி இன்னும் நிறைவேற்றப்படவில்லையென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில், [illegible]பாட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கொடுக்கப்பட்ட நிதியின் மூலம் இன்னும் பாலப் பணிகள் முடிக்கப்படவில்லை என்பதையும், நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்) :** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** முக்கியமான ஒன்று. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு, முதல்வராகப் பொறுப்பேற்ற நேரத்திலேதான் உருது பேசுகின்ற முஸ்லிம்களை பின்தங்கிய வகுப்பிலே



சேர்க்க வேண்டுமென்ற எங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றினார்கள். அன்றைக்கு, சட்ட அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் அவர்களுக்கும் மத்தியிலே பல வாக்குவாதங்கள் நடந்ததற்குப் பின்பாக, முதல்வர் அவர்கள் எழுந்து, சட்டத்திலே இடம் இல்லை என்று சொன்னாலும், என்னுடைய உள்ளத்திலே இடம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, உருது பேசுகிறவர்களை நான் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்ப்பேன் என்று அன்றைக்குச் சொல்லி, உருது பேசுகின்றவர்களை அன்றைக்குப் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்த்தார்கள். ஆனால், இப்போது இட ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில், இஸ்லாமிய சமுதாயத்தவர்கள் அத்தனை பேர்களும் இந்த முதல்வர் அவர்கள்தான் செய்வார்கள், அதைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். முதல்வரும் பல அறிவிப்புகள் மூலம் இதனைக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஏற்பட்டிருக்கிற ஐயம் எல்லாம் 1971 ஆம் ஆண்டு அவருடைய உள்ளத்திலே ஏற்பட்ட அந்த நினைவு இன்றைக்கு ஏற்படவில்லையோ என்பதுதான். 1971 ஆம் ஆண்டு சொன்னதைப்போல், அவருடைய உள்ளத்திலே மீண்டும் அந்த எண்ணம் ஏற்பட்டு, முஸ்லிம்களுக்கு 10 சதவிகிதமாவது இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** நேரம் ஆகிவிட்டது. அடுத்து திருமதி கோமதி சீனிவாசன். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) கூட 3, 4 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** இறுதியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். இப்போது தீவிரவாதிகள் என்கின்ற பெயராலே பல அப்பாவி முஸ்லிம்கள் சிறைச்சாலைகளிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே பலர் தவறு செய்யாதவர்களாக காராகிரகத்திலே அடைக்கப்பட்டிருப்பது என்பது அவர்களும் எதிர்காலத்திலே குற்றவாளிகளாக மாறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிடக் கூடாது என்கின்ற அடிப்படையில் அவர்களை விசாரித்து அப்பாவிகளாக இருக்கிறவர்களை விடுதலை செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழி செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்) :** அடுத்து, திருமதி கோமதி சீனிவாசன்.

***திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு இம்மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

என்ற அய்யன் வள்ளுவன் வாக்கிற்கிணங்க, செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் வல்லவன் அமைச்சன் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தமிழக மக்களுக்காக நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கழக அரசின் கொள்கைப்படி, மத்திய அரசில் குவிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சி மலர வேண்டும் என்பதிலும், அனைத்து தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழியாக வேண்டும் என்பதோடு, முதற்கட்டமாக நம் தமிழ்மொழிக்கு அந்தத் தகுதி கிடைக்க வேண்டும் என்பதையும் இந்த நிதிநிலை அறிக்கை வலியுறுத்துவது கண்டு தமிழ் மக்கள் பெருமைப்படுகிறார்கள். ஏழை எளிய, நடுத்தர மக்கள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குக் குறுக்கிடும் தடைகளை உடைத்தெறிந்து, ஜாதி மத பேதங்களை அகற்றி தந்தைப் பெரியார் கண்ட கனவு, பேரறிஞர் அண்ணா வகுத்தளித்த பாதையில் தடம் புரளாது, சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அரசால் அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையினை, நல்லவர்கள், வல்லவர்கள், படித்தவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், பெண்கள், வணிகர்கள், பத்திரிகையாளர்கள், ஆகியோர் பாராட்டுகின்றார்கள், போற்றுகின்றார்கள்.



தேசிய, மாநில, மாவட்ட, கிராமப்புறச் சாலைகள் மேம்பாட்டிற்காகவும், குடிநீர் மற்றும் துப்புரவுப் பணிகளுக்காகவும் அதிக நிதி ஒதுக்கியிருப்பது சிறப்பிற்குரியதாகும். நகர்ப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் அரசால் அளிக்கின்ற அனைத்து நன்மைகளையும் பெறுவதுபோல, கிராமங்களில் வாழ்கின்ற மக்களும் பெற்றாக வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை அடிப்படையாக வைத்து இங்கே கொண்டு வரப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும், அரசு செய்கின்ற காரியங்களில் மக்களும் பங்கு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டுவரப்பட்ட நமக்கு நாமே திட்டமும் சிறப்பாகச் செயல்பட்டு வருவதோடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-25*

அடுத்து, விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்கி, அதன் செயல்பாடுகளைக் கண்காணிக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, துறை அமைச்சர்களையும், விவசாய சங்கப் பிரதிநிதிகளையும் வல்லுநர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு குழு ஒன்று அமைத்திருப்பது பாராட்டுக்குரியது.

நகர்ப்புறங்களில் வாழ்கின்ற வசதி படைத்தவர்களும், படித்தவர்களும் தங்கள் உடல்நிலையைப் பரிசோதனை செய்து, முன்கூட்டியே சிகிச்சை பெறுகிற நிலையினை எண்ணிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களும் இந்த வாய்ப்பினைப் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் கிராம மக்கள் வாழ்கின்ற பகுதிக்கே அனைத்துப் பிரிவு மருத்துவர்களை அனுப்பி, உடல்நிலையைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கும் திட்டமான வருமுன் காப்போம் திட்டத்தின்மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கின்ற மக்கள் பயன்பெறுவதோடு, மகிழ்ச்சியடையும் வகையில் இந்த அரசை வாழ்த்துகிறார்கள்.

தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை இடைத்தரகர் இன்றி நேரடியாக நியாயமான விலையில் நிலையான மையங்களில் விற்பனை செய்ய உழவர் சந்தை அமைத்துத் தந்த இந்த அரசு, கிராமப்புற மக்களால் செய்யப்படுகின்ற கைவினைப் பொருட்களையும் நியாயமான விலையில் விற்க நிலையான மையங்களை அமைத்து, அந்த கைவினைப் பொருள்களுக்கு 'பூமாலை' என்னும் வணிகச் சின்னம் தந்தது குறித்து

கைவினைஞர்களும், உழவர் பெருமக்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். போற்றுகிறார்கள்.

வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பத் துறைக்கு ஈடு கொடுக்கும் வகையில் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் கணினிமயமாக்கி, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக முதலிடம் வகிப்பது தமிழகம்தான் என்று அறிஞர்கள் பாராட்டுகிறார்கள்.

அடுத்தபடியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நியாயவிலைக் கடைகளில் பெண்களால் நடத்தப்படுகின்ற கடைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்கிற காரணத்தால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு மேலும் அதை அதிகமாக்க முயற்சி செய்யும் என்கின்ற தித்திப்பான செய்தியினைத் தந்த இந்த நிதிநிலை அறிக்கையைக் காணுகின்றபோது பெண்களின் சார்பாக பெருமையடைந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனித் தனித் துறையின் மூலம் நடத்தப்படும் அனைத்து மகளிர் திட்டங்களையும் ஒருங்கிணைத்து 'வாழ்ந்து காட்டுவோம்' என்கிற பெயரில் முதலமைச்சர் செயலகத்தில் நேரடி கண்காணிப்பில் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பை இந்த நிதிநிலை அறிக்கையில் பார்க்கின்றபோது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மகளிர் முன்னேற்றத்தில் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபைச் சேர்ந்த மாணவியர்கள் நடுநிலைப் பள்ளிவரை கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் 3ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவியருக்கு ஆண்டு ஒன்றுக்குத் தலா ரூ.500 ஊக்கத் தொகையும், 6 ஆம் வகுப்பில் பயிலும் 30,000 மாணவியருக்கு மாதம் ரூ.100 ஊக்கத்தொகையும் வழங்க முடிவு எடுக்கப்பட்டிருப்பது, பெண்களின் கல்வி வளர்ச்சியில் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதரவற்றோர், முதியோர், மீனவர்கள், விதவைகள் போன்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஓய்வூதியத் தொகையை ரூ.150-லிருந்து ரூ.200 ஆக உயர்த்தியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது.



அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இடஒதுக்கீடுகளில் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் அரசு எடுத்துவருகின்ற நடவடிக்கை குறித்த வெள்ளை அறிக்கை சட்டமன்ற நடப்புக் கூட்டத்தொடரில் வைக்கப்படும் என்கிற அறிவிப்பு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் யாருக்கும் அஞ்சாது தூய்மையான மனம் கொண்டவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

பழங்குடியினருக்காக தனி இயக்ககம் கண்ட பெருமையை இந்த நிதிநிலை அறிக்கையில் காண முடிகிறது. மகளிரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தினைக் கருத்திற்கொண்டு, வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ஆடை தயாரிக்கும் பூங்கா அமைத்திருப்பதற்காகவும், இந்தியாவில் முதன் முறையாக சென்னைக்கு அருகில் கேளம்பாக்கத்தில் பெண் தொழில்முனைவோருக்கு என்று தனி உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை உருவாக்கியிருப்பதற்காகவும் பெண்களின் சார்பாகப் பெருமைப்படுகிறேன். பெண்களின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகர்கள், மாணவ, மாணவியர்கள், பெண்கள் போன்ற அனைவரும் பயன்பெறும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பதோடு, பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பது கண்டு அனைவரும் பாராட்டுகிறார்கள்.

பிற்பகல் 12-30

அடுத்து, என் தொகுதிப் பிரச்சினைகள்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். என் தொகுதியில் வலங்கைமானிலிருந்து நீடாமங்கலம் வரை, திட்டையிலிருந்து மெலட்டூர் வரை, சாலியமங்கலத்திலிருந்து பாபநாசம் வரை சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. இது நீண்டநாள் கோரிக்கை. இந்தச் சாலைகளை அகலப்படுத்தி செப்பனிட்டுத் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்தத் துறை சம்பந்தம் இல்லை என்றாலும் நிதி ஒதுக்கீடு செய்வது தமிழக முதல்வர் அவர்கள்தான். ஆகவேதான் நான் தமிழக முதல்வர் அவர்களிடம் இதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல களக்குடி என்ற இடத்தில் வெண்ணாற்றின் குறுக்கே ஒரு பாலம் கேட்டு இருந்தேன். அந்தப் பாலத்தையும் கட்டித் தருவதற்கு முயற்சி எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** செல்வி க. ராணி.

**செல்வி க. ராணி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நன்றி.

'உரிய கருவி

உற்ற காலம்

ஆற்றும் வகை

ஆற்றிடும் பணி'

என்ற திருக்குறளின் கருத்துகளுக்கு ஒப்ப செயல்படுவதாக முதல்வர் அவர்கள் தனது நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றி எங்களுக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் எது உரிய கருவி, எது உற்ற காலம், ஆற்றிடும் வகைகளில் சிறந்தது எது, ஆற்றிடும் பணிகள் யாருக்காக என்பதையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது பதிலுரையில் இங்கே மிக விளக்கமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, உரிய கருவி என்று குறிப்பிடுவது அரசு இயந்திரம் என்றே நான் கருதுகின்றேன். அந்தவகையில் அரசு இயந்திரம் எத்தனை விழுக்காடுகள் அரசு வருமானத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறது என்ற புள்ளிவிவரங்களை எல்லாம் இந்த அவைக்கு முதல்வர் அவர்கள் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களில் அநேகமாக 80 விழுக்காடு நஷ்டத்தில் இயங்கி வருவதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அந்த வகையில் ஆண்டுதோறும் budget மூலமாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த மானியம் எவ்வளவு? தமிழ்நாடு அரசாங்கம் இதுவரை மத்திய அரசாங்கம், Reserve Bank, பொது நிறுவனங்கள், வெளிநாட்டு மூலதனங்கள் அளிக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் எவ்வளவு கடன் பெற்றுள்ளது, அதற்காகக் கொடுக்கப்படும் வட்டி என்ன, இதெல்லாம் போக இந்த budget-ன் மூலம் இந்த ஆண்டு ஏழை எளிய மக்களைப் போய்ச்சேரும் நிதி எவ்வளவு என்பதை முதல்வர் அவர்கள்



இங்கே குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குக் கிடைத்த தகவல் உண்மையாக இருக்குமேயானால் சுமார் 10% வருவாய் மட்டுமே மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருகிறது என்ற அந்தக் கருத்து பற்றிய விரிவான விளக்கத்தை இங்கு நான் மட்டுமல்ல, நாடே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அதற்கான சிறந்ததொரு விளக்கத்தை முதல்வர் அவர்கள் தர வேண்டும். இந்தியாவில் உள்ள அநேக மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறையால் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம்கூட கொடுக்க முடியாத நிலையில் உள்ளன. அந்தச் சூழ்நிலை உருவாகாமல் இருக்க தமிழ்நாடு அரசு சில அடிப்படையான தீர்வுகளை மேற்கொள்ளவில்லையென்றால் பஞ்சாப், பிஹார், உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைப்போல் நாமும் அந்த அட்டவணையில் சேர்ந்துவிடுவோம் என்பதை மறுத்துவிட முடியாது.

வருவாய் பற்றாக்குறையைத் தீர்ப்பது குறித்து பல குழுக்கள்—அமைச்சர்கள் கொண்ட குழுக்கள், அதிகாரிகள் கொண்ட குழுக்கள், பொருளாதார வல்லுநர்கள் கொண்ட குழுக்கள் எல்லாம் ஆராய்ந்து தங்களுடைய ஆய்வு அறிக்கையில் downsize the Government என்று result-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலில் அரசாங்கத்தின் நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் முதல் தீர்வு. 90% நம்முடைய வருவாயைச் சாப்பிடுகின்ற அரசின் நிர்வாகச் செலவைக் குறைக்காமல் ஏழை எளிய மக்கள்மீது வரி விதிப்பதில் என்ன நியாயம்? அது மிகப் பெரிய ஜனநாயகக் குற்றம் அல்லவா?

அடுத்தபடியாக இங்கே நிதிநிலை அறிக்கையிலே சுமார் 714 mini-buses இயக்கப்படுவதாக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் சேலம், தருமபுரி மாவட்டங்களில் mini-buses- இயக்குவதற்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமலேயே உள்ளன. தற்போது சேலத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 50 proposals-ம் Court-ல் வழக்குகளாக, நிலுவையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தனியார் பஸ் உரிமையாளர்கள் mini-bus route கொடுப்பதற்குத் தடையாக இருப்பதாகவும், அதற்கு அரசுத் தரப்பில் ஆதரவு தருவதாகவும் கூறப்படுகிறது. எங்கள் தலைவாசல் தொகுதியில் ஏராளமான கிராமங்களில் இன்று வரை bus என்றால் என்னவென்றே தெரியாத நிலைமை உள்ளது. எனவே, நீதிமன்றங்களில் உள்ள வழக்கினை முடிவுக்குக் கொண்டுவந்து இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு

தரக்கூடிய mini-buses இயங்க தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஆத்தூரிலிருந்து சுமார் 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தம்மம்பட்டியில் அரசுப் பேருந்து பணிமனை ஒன்றினை நிறுவிட வேண்டும் அதற்காக சுமார் 5 ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சுமார் 30 ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் இருக்கும் செந்தாரப்பட்டி சாலையைத் தாங்கள் செப்பனிட்டுத் தர வேண்டும்.

பிற்பகல் 12-35

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் அளிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் தற்போது அன்னை தெரசா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்ற பெயரில் தம்மம்பட்டியில் ஒரு மோசடிப் பள்ளியால் 80 மாணவிகளும் 30 மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களும், மாணவிகளும் நிவாரணம் பெறும் வகையில் அந்தப் பள்ளியின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, ஆண்டுதோறும் இரண்டு முறை வரும் semester தேர்வைப்போல, முதியோர் உதவித்தொகை 6 மாதங்களுக்கொரு முறைதான் வருகிறது. அது மாதாமாதம் கிடைத்திட தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாமக்கல் என்று சொன்னாலே கோழிகள்தான் நினைவுக்கு வருகின்றன. வெளிநாடுகளுக்குப் பெருமளவில் முட்டைகளை ஏற்றுமதி செய்து இந்த நாட்டிற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கக்கூடிய கோழிப் பண்ணையாளர்களுக்குத் துரோகம் செய்கின்ற வகையில் மத்தியில் தமிழக முதல்வரின் ஆதரவோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய B.J.P. அரசு, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்து கோழித் தொடைகளை இறக்குமதி செய்ய ஆதரவு தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதைச் செய்தித் தாள்களில் படித்து இப்போது நாமக்கல் மாவட்டமே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறது. மத்திய, மாநில அரசுகள் கோழிப் பண்ணையாளர்களுக்கு உதவி புரியாவிட்டாலும், இதுபோன்ற தற்கொலை முயற்சிக்குத் துணை போகக் கூடாது என்பதை இங்கே நான் வலியுறுத்துகிறேன்.



நாமக்கல் வழியாக, சேலம்-கரூர் இரயில் பாதை கிடப்பில் போடப்பட்டு நீண்டகாலமாக வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களை நேரில் அழைத்துப் பேசி சுமூகத் தீர்வு கண்டு இந்த வழக்குகளை திரும்பப் பெறவைக்க வேண்டும். அந்த இரயில் பாதைத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சேலம் மாவட்டத்தில் தினந்தோறும் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள ஏற்றுமதித் துணி ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், அந்தத் துணிகளை டில்லி, மும்பை போன்ற நகரங்களிலேயுள்ளவர்கள் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று ready-made ஆடைகளாக மாற்றி கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். சென்னைக்கு அருகில் 200 ஏக்கர் நிலத்தில் ஏற்றுமதி வளர்ச்சி மையம் ஒன்றை ஆடை தயாரிப்பதற்கென்றே, முக்கியமாகப் பெண்கள் பயன்பெறும் வகையில் அமைப்பதாகத் தனது நிதிநிலை அறிக்கையிலே முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல, 50 ஏக்கர் நிலத்திலாவது சேலத்தில் ஆடை தயாரிக்கும் பூங்கா ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மன்றத்தின் அகத்தும், புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த கருத்துகளையும் ஆலோசனைகளையும் வரவேற்பதாகக் கூறியிருக்கும் முதல்வர் அவர்கள், எனது இந்தக் கோரிக்கையிலும் காய்தல் உவதல் இன்றி ஏற்று ஆவன செய்ய முயற்சி செய்வார் என்ற நம்பிக்கையில் இத்துடன் முடித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** அடுத்து, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு முன்பு, நான் முதலில் என்னுடைய ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். அதாவது, ஒரு தேசியக் கட்சி என்ற முறையில் நாங்கள் இருவராக இருந்தாலும், எங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்குச் சற்று அதிக நேரம் ஒதுக்கித் தர வேண்டுமென்று முதலில் என்னுடைய பணிவான வேண்டுகோளைச் சொல்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைமீது நம்முடைய பத்மனாபபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது, அவர்கள் R.S.S.-ஐப் பற்றியோ அல்லது B.J.P.-யைப் பற்றியோ எந்த வார்த்தைகளையும் எங்கேயும்

பேசவில்லை. ஆனால் R.S.S.-ஐ எப்படி establish பண்ண முடியுமோ அதற்கான முயற்சியை மேற்கொண்டார். (குறுக்கீடு) என்ன என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. என்னைப் பேசவிடுங்கள் (குறுக்கீடு) நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தேவையில்லாமல் அவர் ஒரு வாதத்தை இங்கே எப்படிக் கிளப்பினார் என்பதுதான் அது. எனவேதான், நான் இங்கே ஒன்றைச் சொல்கிறேன். 1948, ஜனவரி மாதம் 30 ஆம் தேதி, உலகத்தினுடைய மனச்சாட்சியை உலுக்கிய ஒரு செய்தி வந்த நாள். இந்தியாவினுடைய விடுதலைப் போராட்டத்தினுடைய சிற்பி மகாத்மா காந்தி அவர்கள் ஒரு R.S.S. ஆளால் கொலை செய்யப்பட்டார் என்ற ஒரு செய்தி உலகம் முழுவதிலும் பரவியது. அது இந்த உலகத்தினுடைய மனச்சாட்சியை உலுக்கிய ஒரு செய்தி.

அதுமட்டுமல்லாமல், நான் இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். R.S.S. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தேசப் பிதாவை, இதுவரையிலே தேசப் பிதா என்று சொல்வதற்குத் தயாராக இல்லாத நிலையில், அவர்கள் எதற்காக இந்த வாதத்தை இங்கே வைத்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

நான் இந்த நிதிநிலை அறிக்கையின்போது சிலவற்றை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, On a point of order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் R.S.S.-ஐப் பற்றியோ, B.J.P.-யைப் பற்றியோ எதுவும் நான் பேசுவதே கிடையாது. ஆனால், இந்தச் சட்டமன்றத்தில் பலர் B.J.P.-யைப் பற்றியும், R.S.S.-ஐப் பற்றியும் மோசமாகப் பேசிய காரணத்தால்தான் நான் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது, காந்தி கொலை வழக்கைப் பொறுத்தமட்டில், உச்சநீதிமன்றமே காந்தி கொலை வழக்குக்கும் R.S.S.-க்கும் சம்பந்தம் இல்லை என்று தீர்ப்புச் சொல்லி விடுதலை செய்திருக்கின்றது. அதற்குப் பிறகும் இதைப் பற்றிப் பேசுவது உச்சநீதிமன்றத்தை மதிக்கவில்லை என்று பொருளாகிவிடும்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றம் சொன்னதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நாதுராம் விநாயக கோட்சேவின் உடன்பிறந்த தம்பி கோபால் கோட்சே காந்தியடிகளின் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 17 ஆண்டுகள் சிறையில் இருந்துவிட்டு வெளியிலே வந்து என்ன சொன்னார் என்றால் நாதுராம் விநாயக கோட்சே R.S.S.-ஐச் சார்ந்தவர், நானும் R.S.S.-ஐச் சார்ந்தவன்தான். R.S.S. இல்லை என்று அத்வானி சொல்வது படுகோழைத்தனமானது என்று குறிப்பிட்டிருக்கிறார் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. வேலாயுதன், உட்காருங்கள். அவர் பேசட்டும். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக ஒன்றைச் சொல்கிறேன். குறிப்பாக, 2000-2001-ல் நம்முடைய நாடு எந்த வழியைக் கடைபிடிக்க வேண்டும்? இப்போது கேந்திரமாக இருக்கிற பெரிய பிரச்சினை என்பது வேலையில்லாத் திண்டாட்டம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில் மாவட்ட வாரியாக புதிய புதிய தொழிற்சாலைகளை அரசு சார்பாகக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் அதிகமாகப் பார்க்க முடியவில்லை. எனவே, மீண்டும் நம்முடைய நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுவதற்கான ஒரு வாய்ப்புதான் ஏற்பட்டுள்ளது.

அடுத்தபடியாக பல்வேறு கோணங்களிலே பொதுவாக பார்க்கிறபோது தனியார் துறைக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் சில கருத்துகளும் இங்கே இருக்கின்றன. முதலாவதாக மின்சார வாரியத்தை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், நம்முடைய பற்றாக்குறையைப் போக்குவதற்கு, நமக்கு நிதி வசதி இருக்கிறதோ இல்லையோ, ஆனாலும்கூட, அதைத் தனியாருக்குத் தருகிற ஒரு நிலையை இப்போது அரசு கையாண்டு வருகிறது. அப்படி தனியார் துறைக்குச் செல்கிறபோது, சென்னையிலேகூட தனியார் மின்சார உற்பத்தி செய்வதை நாம் விலைக்கு வாங்குகிறபோது யூனிட்டுக்கு 4 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலைவருகிறது. ஆனால் நெய்வேலியிலே இருந்து வாங்குகிறபோது

யூனிட்டுக்கு 2 ரூபாய்க்கும் குறைவாகத்தான் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, தனியார் துறையைக் கொண்டு வருவதன் மூலமாக நம்முடைய பொருளாதாரம் பெரிய அளவுக்கு வளரும் என்றோ, இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவுக்குக் குறையும் என்றோ நாம் சொல்வதற்கில்லை.

அடுத்து கல்வி. கல்வித் துறைக்கு நிதிப் பற்றாக்குறை என்று பொதுவாக மாண்புமிகு முதலமைச்சர் ஆனாலும் சரி, மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆனாலும் சரி, கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நிதிப் பற்றாக்குறை இருப்பது என்பது உண்மை. இருந்தாலும்கூட, உண்மையாகக் கல்வி தனியார் துறைக்குச் செல்கிறபோது என்ன என்ன சங்கடங்களை எல்லாம் நாம் சந்திக்க வேண்டியிருக்கும் என்று சொன்னால், ஒரு பள்ளி ஆசிரியை நியமனம் செய்கிறபோது 4 இலட்சத்திலிருந்து 6 இலட்சம் ரூபாய்வரை தனியார் துறை கையூட்டுப் பெறுகின்ற துர்பாக்கியமான நிலை நம்முடைய மாநிலத்திலே இருக்கிறது. எனவேதான் கல்வித் துறையை தனியாரிடம் விடாமல் பொதுத் துறையிலே, அரசுத் துறையிலே செயல்படவிட வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

அடுத்தபடியாக போக்குவரத்துத் துறை. ஏற்கெனவே போக்குவரத்துத் துறை நஷ்டத்தில்தான் செயல்படுகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அது உண்மையும்கூட. ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் துறையை இலாபகரமாக நடத்துவதற்கு எத்தகைய வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். மாநிலத்திலே இருக்கிற அமைச்சர் பெருமக்களும், வல்லுநர்களும் சேர்ந்து எப்படி இலாபகரமாக நடத்த வேண்டும் என்பதிலே கவனம் செலுத்தினால் அதை இலாபகரமாகக் கொண்டு வரமுடியும் என்பது என்னுடைய கருத்து. தனியாருக்குச் சில service-களைத் தந்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே அதை எங்கேயிருந்து ஆரம்பிக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சாதாரணமாக அரசுப் பேருந்துகள் ஓடுகின்ற பகுதியிலே தனியார் பேருந்துகள் இயங்காது என்று சொன்னார்கள். நாகர்கோவிலைப் பொறுத்தமட்டிலே தனியார் பேருந்துகள் மீனாட்சிபுரத்திலிருந்து ஆரம்பித்து, பார்வதிபுரத்திற்கு வந்து, அதற்குப் பக்கத்திலே நம்முடைய பேருந்துகள் செல்லாத இடத்தில் ஒரு கிலோமீட்டர் போய், மீண்டும் நகரப் பகுதியை அவை சுற்றிவருகின்றன. அதனாலே நமக்கு இலாபம் வருவதில்லை.



இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். திருவனந்தபுரத்திலிருந்து தனியார் பேருந்துகள் நாகர்கோயிலுக்கு வருகின்றன. நம்முடைய அரசுப் பேருந்துகள் புறப்படுவதற்கு 10 நிமிடத்திற்கு முன்னே full-ஆக அவர்கள் இடத்தை முழுவதும் நிரப்பிக்கொண்டு இங்கே வந்தால் நமது வண்டியிலே ஏறுவதற்கு யார் இருப்பார்கள்? எனவே இந்த வழிமுறையை சற்று தடுத்து நிறுத்தினால்தான் இந்தத் துறையை இலாபகரமாக நடத்த முடியும் என்பது எங்களுடைய கருத்தாகும்.

அடுத்து, மாவட்டத்தினுடைய திட்டக் குழு. 1996-லே உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் முடிந்தவுடனே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினோம். மாவட்டப் பஞ்சாயத்து என்று வருகிறபோது, அதிகாரம் முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கையிலேதான் வருகிறது. இப்போதுதான் அதை மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவருக்கு மாற்றித் தந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால் அதனுடைய நிதி அதிகாரம் D.R.D.A. என்று சொல்கின்ற நிர்வாகத்திடம், அதாவது மாவட்ட ஆட்சித் தலைவரின் கையிலேதான் இருக்கின்றது. அதை மாவட்டப் பஞ்சாயத்துக்குத் தரவேண்டும். இங்கே நான் ஒரு ஊராட்சியைக் குறிப்பிடுகிறேன். மேல்புறம் பஞ்சாயத்து ஒன்றியத்திலே இரண்டு ஈப்புகள் இருக்கின்றன. அவை புதிய ஈப்புகள். அவை என்ன ஆயிற்று என்றால், அவற்றை வெயில் படாமல், மழைபடாமல் கட்டடத்தில் வைத்துக் காப்பதற்கு ஏதுவாக நிதி இல்லை. அங்கே நிதிநிலைமை படுமோசமாக இருக்கிறது.

உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் என்பதற்கு அடையாளமாக அதிகமான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். பல நூறு கோடி ரூபாய் தந்திருக்கிறீர்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாகத் தந்திருக்கிறீர்கள். அதனை வரவேற்கிறேன். ஆனால், அதுவும் போதுமானதாக இல்லை. நம்முடைய வருவாயில் ஏறத்தாழ 40 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு நாம் தருவதன் மூலமாகத்தான் அங்கே உள்ளவற்றை மேம்படுத்த முடியும். ஓரளவிற்குச் சொல்லப்போனால், மருத்துவத் துறை என்று சொன்னால் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்திக்கொள்ளக்கூட அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அந்தவகையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அடுத்து, நம்முடைய கேந்திரமான கோஷமாக இருப்பது நிலச் சீர்திருத்தம். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த

காலத்தில் ஒரு நிலச் சீர்த்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அது முழுமை பெறாமல் என்னவாயிற்று என்று சொன்னால், நிலங்களை எல்லாம் பினாமிகள் எடுத்துக்கொண்டார்கள். அதற்கு எதிராக அன்றைய காலகட்டத்தில் விவசாயிகள் சங்கம்—ஒன்றுபட்ட சங்கம்—ஒரு பெரிய போராட்டத்தை நடத்தி 25 ஆயிரம் பேர், நான் உட்பட மூன்று மாதங்களுக்கு மேல் சிறைச்சாலையில் இருந்தோம். ஆனால் அவை மீட்கப்படவில்லை. இரண்டாவது முறையாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே முதலமைச்சராக ஆட்சியில் இருந்தபோது அதுபோன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இருந்தும், மீதமுள்ள நிலங்களை நாம் எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்குத் தருவதற்கு முடியவில்லை. ஒரு பகுதிக்குத் தந்திருக்கிறீர்கள். அது போதுமானதாக இல்லை. கண்டிப்பாக மீதம் இருக்கிற நிலங்களை முழுமையாக எடுத்து நிலமற்ற விவசாயிகளுக்கு, 5 இலட்சம் பேருக்கோ, 10 இலட்சம் பேருக்கோ ஓர் ஏக்கர் வீதமாவது தர வேண்டும். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 3 ஏக்கர் நிலம் கொடுத்தால் அதிலிருந்து வருகின்ற வருமானத்தைக்கொண்டு மிக ஒழுங்காக தங்களுடைய குடும்பத்தை நடத்திக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, 15 standard ஏக்கரா என்று இரண்டாவது முறையாக தி.மு.க. ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது உச்சவரம்புச் சட்டம். முதலில் கொண்டு வரப்பட்டது பெருந்தலைவர் காமராசரால். அதிலே நிலம் வழங்கப்படவில்லை என்பது உண்மை. அதுகுறித்து உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 15 standard ஏக்கரா என்று கொண்டு வரப்பட்டபோது நிலம் எதுவும் எடுக்கப்படவில்லை, மிகக் கொஞ்சம் என்று சொன்னார்கள். இல்லை. ஏறத்தாழ 2 இலட்சம் பேருக்கு நிலம் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இன்னும் அதிகம் பேருக்குச் செய்ய முடியாததன் காரணம், இருந்த நிலமே அவ்வளவுதான். மீதமுள்ள நிலம், கொஞ்சம் நிலம்தான் இருக்கிறது. அதுகூட வழக்குமன்றத்திலே இருக்கிறது. அதன் காரணமாக அவற்றைப் பகிர்ந்து அளிக்க முடியவில்லை. ஏறத்தாழ 2 இலட்சம் பேருக்கு நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ச. அழகிரி:** பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த 30 standard ஏக்கர் நிலத்திலும் உபரி நிலம் எடுக்கப்பட்டிருந்தன. (குறுக்கீடு) கொஞ்சம்கூட எடுக்கவில்லையா?



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** யாருக்கும் கொடுக்கப்படவில்லை. சில ஆயிரம் ஏக்கர்தான் எடுக்கப்பட்டது. அதைத்தான் மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்கு நன்றி. ஆனால், இதிலே எடுக்கப்படுகின்றபோது பல்வேறு நிலங்கள் பினாமிகளால் பிரிக்கப்பட்டு போய்விட்டன. பினாமி நிலங்களைக் கண்டறிந்து அவற்றை மீண்டும் எடுப்பதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சரியான முடிவை நாம் எடுக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே கோலப்பன் குழுவினுடைய பரிந்துரை முழுமையாக......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பினாமி நில ஒழிப்புச் சட்டம் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. மத்திய சர்க்காருடைய ஒப்புதல் வரவேயில்லை. அதற்குப் பிறகுகூட ஒரு முறை பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதுவும் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு, அனுமதி அங்கேயிருந்து கிடைக்கவில்லை. எனவே, மீண்டும் ஒருமுறை அதுபற்றி முயற்சிக்கலாமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

*பிற்பகல் 12-50*

**திரு. டி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தக் கூட்டத்தொடர் முடிவில் அப்படி ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தின் மூலமாக மத்திய அரசாங்கத்திற்கு நாம் தெரிவிப்பது முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கோலப்பன் குழு பரிந்துரையை முழுமையாக அமல் நடத்துவதற்குரிய நடவடிக்கையை நாம் எடுத்துக்கொண்டாக வேண்டும். அதுபோன்று தரிசு நிலங்களை ஏழைகளுக்கு விநியோகம் செய்வதில் ஏற்கெனவே இங்கே ஒரு பிரச்சினை. வெள்ளைக்காரன் காலத்தில் தலித் மக்களுக்கு பஞ்சமி நிலங்கள் என்ற பெயரில் ஏற்கெனவே நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிலத்தை இப்போது தனியார்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த பஞ்சமி நிலங்களை மீட்டு அவர்களுக்குத் தருவதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

[திரு. டி. மணி] [2000 மார்ச் 29

இன்னொன்று, சமீபத்தில் அரசு ஒன்றைச் சொல்லியிருக்கிறது. நல்ல காரியம், பாராட்டுக்குரிய காரியம். புறம்போக்கு நிலத்தில் மூன்றரை சென்ட் அல்லது நான்கு சென்ட் இடத்தை அவர்களுக்குப் பட்டா கொடுப்பதாகச் சொல்லியிருப்பது, 20 ஆண்டுகள் என்று சொல்லியிருந்ததை 10 ஆண்டுகள் என்று இப்போது சொல்லியிருக்கிற அந்த நல்ல காரியத்தை வரவேற்கிற அதேநேரத்திலே மூன்றரை சென்ட் என்பதை நகர்ப் பகுதிகளில் 5 சென்ட் என்றும், கிராமப் பகுதிகளில் 10 சென்ட் என்றும் கொடுக்க வேண்டும். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், 1957-ல் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அரசு கேரளாவில் பொறுப்பில் இருந்தபோது, நகர்ப் பகுதிகளில் 5 சென்ட் என்றும், கிராமப் பகுதிகளில் 10 சென்ட் என்றும் அவர்களுக்கு இலவசப் பட்டா வழங்கினார்கள். அதுபோன்ற ஒரு நிலையை நாம் கையாளவேண்டும். முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே இருந்த காலத்திலேதான், புறம்போக்கு நிலங்களுக்கு ஓர் ஏக்கரிலிருந்து 3 ஏக்கர் வரையிலும் இலவசப் பட்டா எங்களுடைய மாவட்டத்தில் வழங்கப்பட்டது. அந்த நல்ல காரியத்தை நாம் தொடருவோமானால், கிராமப் பகுதிகளில், மலைப்பாங்கான பகுதிகளில் இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

இன்னொன்று, பல்வேறுவிதமான classifications இருக்கின்றன. இப்போது வனத்திற்குச் சொந்தமான நிலங்களில் நாம் கை வைக்கமுடியாது. ஆனால், சென்றமுறை, அணைப் புறம்போக்கு பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். செம்பகத்தரிசு என்ற இடத்தில், சாராயம் காய்ச்சி, அதன்பேரில் அங்கே துப்பாக்கிச் சூடு நடந்த அந்த விவகாரமான பகுதிக்கு நம்முடைய அதிகாரிகளும், voluntary organisations-ம் போய் சாராயம் காய்ச்சுவதை நிறுத்தினார்கள். ஆனால் அவர்கள் சிற்றாறு அணை 1, 2 வருவதற்கு முன்னாலே அந்தக் காட்டுப்பகுதியில் குடியேறியவர்கள். அவர்கள் கேட்ட கோரிக்கை என்பது, ஒரே ஒரு நபருடைய கையில் ஓர் ஏக்கர் நிலம் மட்டும் தான் இருக்கிறது. மற்றவர்களிடமெல்லாம் 10 சென்டிலிருந்து 50 சென்ட், 60 சென்ட் இருக்கிறது. எங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று அவர்கள் கேட்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** 15 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.



2000 மார்ச் 29]

**திரு. டி. மணி:** அவர்கள் பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தாலுகா அடிப்படையில், தாசில்தார், அங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், இவர்கள் எல்லாம் கூடி, எந்தெந்த இடத்தைக் கைப்பற்றுவது, எந்தெந்த நிலத்திற்குப் பட்டா கொடுக்க முடியும் என்ற ஒரு கருத்தை ஆராய்ந்து, கண்டறிந்து, அந்த அடிப்படையில் அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம்— நிலமற்ற விவசாயிகள், ஒவ்வொருவருக்கும் 5 சென்ட் என்றோ, 10 சென்ட் என்றோ நாம் நிலத்திற்குப் பட்டா கொடுப்பதன் மூலமாக ஒரு பகுதி மக்களைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

சேலம் உருக்காலை சம்பந்தமாக நாம் தீர்மானம் போட்டோம். போட்டாலும்கூட, அதை மத்திய அரசாங்கம் கண்டுகொள்ளுமோ, கண்டுகொள்ளாதோ என்று தெரியவில்லை. அந்தவகையிலே மத்திய அரசு, சேலம் உருக்காலையைத் தனியாருக்கு விற்பனை செய்யாத ஒரு சூழ்நிலையை நாம் மீண்டும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற இரண்டு பிரச்சினைகளை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். நீண்டகாலமாக, 1957-லேயிருந்து வைத்து வருகின்ற ஒரு கோரிக்கை, எங்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்பது அங்கே இடம் இருக்கிறது. பல கூட்டங்கள் இருக்கின்றன. கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, அந்தக் கூட்டத்தொடரில் அந்த விவரங்களையெல்லாம் நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக்கையில் அதுபற்றிய அறிவிப்பு இடம் பெறாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயாவது ஓர் அறிவிப்பைத் தர வேண்டும். அடுத்த ஆண்டிலாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குகின்ற ஒரு வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அங்கேயுள்ள முக்கியத் தொழில் இரப்பர் தொழில். தொழில் பூங்கா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனக்கு நினைவு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு முதலமைச்சராக இருந்தபோது நாகர்கோயிலுக்கு வருகை தந்திருக்கிற நேரத்தில், ஒரு செய்தியைச் சொன்னார்கள். 300 கோடி

ரூபாயில் இரப்பர் டயரையும் டியூபையும் உற்பத்திச் செய்கிற ஒரு கனரகத் தொழிற்சாலையை உருவாக்குவது என்று அறிவித்தார்கள். அதன் மூலமாகத்தான் அந்த மாவட்டத்திலே கொஞ்சம் பேருக்காவது வேலைவாய்ப்புத் தர முடியும். அந்தவகையில் இதை மறுபரிசீலனை செய்வதோடு, நிதியைத் தந்து ஒரு கனரக இரப்பர் தொழிற்சாலையை உருவாக்குவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே Rubber Plantation குறித்து ஒரு பிரச்சினை இருக்கிறது. மரங்களையெல்லாம் வெட்டுகிறார்கள். புதிதாகக் குழிகளை வெட்டுகிறார்கள். ஆனால் அந்தக் குழிகளைத் தோண்டுவதை வேண்டுமானால் Contract முறையில் விடட்டும். ஆனால் செடிகளை நடுகிறபோது நம்முடைய தொழிலாளர்களை வைத்து நடச் சொல்ல வேண்டும். இல்லையென்று சொன்னால், அந்த plantation உருப்படாது. அது எங்களுடைய அனுபவம். எனவேதான் சொல்கிறேன்.

நெடுஞ்சாலைகளுக்கு நிறைய நிதியைத் தந்திருக்கிறீர்கள். இதிலே என்ன சங்கடம் என்று கேட்டால், அதற்குத் தேவையான தார் மட்டும் தரப்படவில்லை. கடலோரச் சாலை இருக்கிறது. வேலை முடிந்திருக்கிறதா என்று கேட்டால், Metalling முடிந்துவிட்டது. அதற்கு மேலே தார் இல்லை. அதற்கு மேலே ஒரு துறை அதிலே செயல்படுகிறது. குளச்சல் வரைக்கும் முடிந்துவிட்டது. அதற்கு மேல் முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் Construction Corporation கையில் கொடுத்து அவர்கள் அந்த நிதியை வைத்துக்கொண்டு ஒப்பந்தக்காரர்களுக்குத் தராத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தப் பொறுப்பை நெடுஞ்சாலைத் துறையிடமே கொடுத்து அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. வி.சி. சண்முகம்.

**திரு. வி.சி. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நடந்து முடிந்த நெல்லிக்குப்பம் சட்டப்பேரவை இடைத் தேர்தலிலே தேசிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய, திராவிட முன்னேற்றக்



கழகத்தினுடைய வேட்பாளராக என்னை நிறுத்தி வைத்து, வெளி உலகத்திற்கு அடையாளம் காட்டி, இரவு, பகல் பாராது, கடுமையாக உழைத்து என்னை வெற்றிபெறச் செய்து, இந்த மாமன்றத்திலே ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக ஆக்கி, உங்கள்முன் நிறுத்தி, உங்களோடு என்னுடைய கருத்துகளைப் பரிமாறிக்கொள்கின்ற ஒரு மிகப் பெரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த என்னுடைய நெஞ்சகத்து நாயகர், தமிழ் இனத் தலைவர், முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இங்கே காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் வெற்றிக்கு அயராது பாடுபட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த மாமன்றத்தின் வாயிலாகச் சமர்ப்பிக்கின்றேன். நான் சார்ந்த என்னுடைய தொகுதிவாழ் மக்கள் இந்த இடைத் தேர்தலில் மட்டுமல்ல, வர இருக்கின்ற 2001-லும், இன்னும் வர இருக்கின்ற 2006-லும் நடைபெற இருக்கின்ற அத்தனைத் தேர்தல்களிலும் நாங்கள் கலைஞர் பக்கமதான், கலைஞர்தான் எங்களுடைய முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும் நாங்கள் கழகத்தின் பக்கம்தான் நிற்போம் என்று சொல்கின்ற வகையில் அவர்களுடைய பொன்னான வாக்குகளை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்து என்னை வெற்றி பெறச் செய்த என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலம் காணிக்கையாக்குகின்றேன்.

*24-1-2000* அன்று இந்த மாமன்றத்திலே தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களால் படைக்கப்பட்ட, அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை புத்தாயிரம் ஆண்டிலே, தமிழின மக்களுக்கு இந்த அரசால் அளிக்கப்பட்ட மாபெரும் பரிசு என்று சொன்னால் அது மிகையாகாது. சமுதாயத்தின் பல நிலைகளில் உள்ள இளைஞர்கள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், இப்படி பலதரப்பட்ட சமூகத்தினரையும் தொட்டு, அரவணைத்து, அவர்களுடைய மேம்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற திட்டம்தான், இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற பாரதியின் பாடலுக்கேற்ப, விவசாயப் பெருங்குடி மக்களுடைய மேம்பாட்டிற்காகவும், தொழிலாளர்கள் மேம்பாட்டிற்காகவும், விவசாயப் பெருங்குடி மக்களை ஒரு கண்ணாகவும், தொழிலாளர்களை மறு கண்ணாகவும் இணைத்து படைக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் போற்றத்தக்கது, பாராட்டுக்குரியது, பலதரப்பட்ட மக்களால் வரவேற்கக்கூடியது. தமிழகத்து மக்கள் இதனை

இப்போது வரவேற்று மகிழ்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 75,000 ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையிலே மேம்படுத்துகின்ற திட்டம், ஒரு சிறப்பான திட்டம்.

அடுத்து, உழவர் சந்தை. இன்றைக்கு என் முன்னால் இருக்கின்ற இந்த ஒலி வாங்கி, இதைத் தயாரிக்கின்ற கம்பெனியாரால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதோ நான் போட்டிருக்கின்ற இந்தச் சட்டை, இதைத் தயாரிக்கின்ற கம்பெனியாரால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால், விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு, வியாபாரிகள் என்ற பெயராலே இடைத் தரகர்களால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விவசாயிகள் ஏமாற்றப்படுகிறார்கள் என்ற பேருண்மையை உணர்ந்து, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய திட்டம்தான் உழவர் சந்தை. இந்த உழவர் சந்தையின் வாயிலாக விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு, நல்ல விலை பெறுகின்ற அதேசமயத்தில், நுகர்வோர்கள், அதாவது இதை வாங்கிப் பயன்பெறுகின்றவர்களும் குறைந்த விலையில் தரமான, நிறைந்த பொருள்களை வாங்கி மகிழ்கின்றார்கள். 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பதைப்போல, இந்தத் திட்டம் மிகவும் சிறப்பானதொரு திட்டம் என்று சொல்லி நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தை வரவேற்கிறேன்.

பிற்பகல் *1-00*

அடுத்து, கடலோரங்களில் முந்திரி சாகுபடி செய்வது மண் அரிப்புக்கும், காற்றுத் தடைகளுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக, சுற்றுச்சூழலைப் பராமரிக்கின்ற வகையிலே இந்தத் திட்டம் ஒரு சிறப்பான திட்டம். இந்தத் திட்டத்தை நான் பெரிதும் வரவேற்கிறேன். பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல், கால்வாய்களைத் தூர் வாரும் திட்டம், வெள்ளத் தடுப்புத் திட்டம் இப்படிப் பல திட்டங்கள். புதிய வேளாண் கொள்கையை உருவாக்கி அதன் செயல்பாட்டினைக் கண்காணிக்க ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து செயல்படுத்துகின்ற திட்டம் மிகப் பெரிய திட்டம். இது வரவேற்கக்கூடிய, பாராட்டக்கூடிய திட்டம். எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டுறவுத் துறையிலே, கூட்டுறவு வங்கிகளைச் செம்மைப்படுத்துகின்ற வகையிலே அந்த நிறுவனங்களிலே



பணியாற்றுகின்ற அலுவலர்களை இடமாற்றம் செய்கின்ற திட்டத்தை கிராம மக்களெல்லாம் வரவேற்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே கடன் வாங்கிய விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய தவணை தவறிய கடன்களைக் கட்டுகின்றபோது, அதற்குச் செலுத்த வேண்டிய அபராத வட்டியை நீக்கியிருப்பது போற்றத்தக்கதொரு திட்டம். அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் முறையாகக் கட்டுகின்றபோது அவர்களுக்கு வழங்கியிருக்கின்ற 7% ஊக்கத்தொகை, பெற்ற கடன்களைத் திரும்பக் கட்டுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவதுபோல் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அடுத்து, தனியார் கரும்பு ஆலைகள் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை குறித்து ஆலை அதிபர்களை அழைத்துப் பேசி அவர்களுக்கு உரிய முறையில் அதை பட்டுவாடா செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்று சொல்லும் திட்டம் போற்றத்தக்க திட்டம். இது அனைவராலும் பாராட்டப்படக்கூடிய திட்டம்.

கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் வரவேற்றுப் பாராட்ட வேண்டிய திட்டம். அதுபோல், 'வருமுன் காப்போம் திட்டம்'. ஒரு காலத்திலே பொதுவாக கிராமத்திலே இருக்கிற மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நகரங்களை நோக்கி, அரசை நோக்கிச் செல்கின்ற நிலை மாறி, இன்று அரசாங்கமே கிராமங்களை நோக்கி, கிராம மக்கள் இல்லங்களைத் தட்டி, இதோ நாங்கள் இருக்கிறோம், உங்களுக்குத் தேவையான பாதுகாப்பை அளிக்கிறோம், உங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருகிறோம் என்று சொல்கின்ற வகையிலே கால்நடைப் பாதுகாப்புத் திட்டமும் வருமுன் காப்போம் திட்டமும் அமைந்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

தொழில் துறையிலே நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா 2 ஆயிரம் ஏக்கரில் அமைக்கப்படவிருப்பது அங்கிருக்கிற மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய ஒரு திட்டமாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. கடலூரிலே 950 ஏக்கர் நிலப் பரப்பளவில் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற தொழில் பூங்கா அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு நல்ல வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய திட்டம். அந்தத் திட்டத்தை நான் நெஞ்சார வரவேற்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, சென்னைக்கு அருகே 200 ஏக்கர் நிலப்பரப்பில் ஆடை தயாரிக்கும் பூங்கா. அமைதிப் பூங்காவாக இருக்கிற தமிழகத்திலே

எத்தனையோ தொழில் பூங்காக்களைக் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஓசூரில் 70 கோடி ரூபாய் செலவில் 200 ஏக்கர் நிலப்பரப்பிலே மலர்ப் பூங்கா அமைக்கும் திட்டம் சிறப்பான திட்டம். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் இணைந்து 338 கோடி ரூபாய் செலவில், 12 இலட்சம் சதுர அடியில் அமைத்து வரும் டைடல் பூங்கா (Tidel Park) நிறைவடையும் நிலையில் இருப்பது தமிழக மக்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப் பெரிய வரப்பிரசாதம் என்று சொன்னால் அது மிகையாகாது.

அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நல வாரியம். தையல் தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கும் நல வாரியம். இப்படிப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நல வாரியத்தை அமைத்து தொழிலாளர்களுடைய நலத்தில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற திட்டங்கள்தான் இந்தத் திட்டங்களெல்லாம். (மணியடிக்கப்பெற்றது)

உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை, இப்படிப்பட்ட அத்தியாவசியத் தேவைகளை அள்ளித் தருவதுதான் இந்த அரசு. அதைப்போலவேதான், மீனவர்களுக்கு 14.8 கோடி செலவில் 4 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவது. உள்நாட்டு மீனவர்களுக்கு ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவது. மீனவர் அங்காடி, பட்டா வழங்கும் திட்டம், 6 ஆயிரம் ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துதல், 4 ஆயிரம் காவலர்களைப் பணியில் அமர்த்துதல், இப்படிப்பட்ட ஏராளமான திட்டங்களைத் தந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் நெஞ்சார வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நெல்லிக்குப்பம் நகரத்தின் ஊடே ஒரு வாய்க்கால் சென்று கொண்டிருக்கிறது. வெள்ளப்பாக்கத்தான் வாய்க்கால் என்று பெயர். அந்த வாய்க்கால் கடந்த 15, 20 ஆண்டுகளாக தூர் எடுக்கப்படாமல் முக்கால் பகுதிக்கு மேல் தூர்ந்திருக்கிறது. சிறு மழை பெய்தால்கூட அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட நான்கு, ஐந்து தெருக்களைச் சார்ந்த மக்கள் வெள்ளத்திலே மிதந்துகொண்டு, சுகாதாரக் கேட்டுக்கு ஆளாகிறார்கள். நான் இடைத்தேர்தல் முடிந்தவுடனே அவர்களிடத்திலே நன்றி சொல்லச் சென்றபோது அங்கே மழை பெய்திருந்த காரணத்தினால், அங்குள்ள மக்கள் எல்லாம் என்னைச் சூழ்ந்துகொண்டு, உடனடியாக நீங்கள் இந்த வாய்க்காலில் தூர் எடுக்கும்



பணியை நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே சொல்லி, செய்து தாருங்கள் என்று சொன்னார்கள். நான் உண்மையிலேயே சொல்கிறேன், அவர்கள் உங்களுடைய முதல்வர் என்று சொல்லவில்லை அல்லது முதல்வர் என்று சொல்லவில்லை, நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருப்பது அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்மீது எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வாய்க்காலைத் தூர் எடுத்து செம்மைப்படுத்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. வி.சி. சண்முகம்:** நடுவீரப்பட்டு என்ற பகுதியிலே ஒரு புறக்காவல் நிலையம் இருக்கிறது. அந்தப் புறக்காவல் நிலையம் கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுகளாக புறக்காவல் நிலையமாகவே இருக்கிறது. அந்தப் புறக்காவல் நிலையத்திற்கு வழக்கு பதிவு செய்யச் செல்கின்ற மக்கள், புறக்காவல் நிலையத்திலே தங்களுடைய மனுவைக் கொடுத்துவிட்டு, பிறகு நெல்லிக்குப்பத்திற்கு வந்து அங்கே ஆய்வாளரையோ அல்லது துணை ஆய்வாளரையோ சந்தித்து தங்களுடைய வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் புறக்காவல் நிலையத்திற்கு ஒரு துணை ஆய்வாளரை நியமித்து அதை முழுமையான ஒரு காவல் நிலையமாக ஆக்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நெல்லிக்குப்பத்தின் வடபுறத்திலே விஸ்வநாதபுரம், வான்பாக்கம் என்று இரண்டு பெரிய கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் நகரத்திற்கு அடிக்கடி வந்து போகின்றார்கள். விஸ்வநாதபுரம், வான்பாக்கம் என்று சொல்லப்படுகின்ற அந்த இரண்டு பகுதிகளுக்கும் ஒரு கிலோமீட்டர் தூர இடைவெளிதான் இருக்கிறது. இதற்கு ஒரு இணைப்புச் சாலை அமைத்துத் தந்தால், அந்த வழியாக நகரப் பேருந்துகள் சென்று வரமுடியும். அங்குள்ள மக்களுக்கு நல்ல போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தர முடியும். அதைச் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அரசூர் மலட்டாறு என்ற ஓர் ஆறு இருக்கிறது. கிட்டத்தட்ட நெல்லிக்குப்பம் தொகுதியினுடைய மேற்குப் பகுதியினுடைய எல்லையைத் தொடுகின்ற வகையிலே அது தூர் எடுக்கப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், நெல்லிக்குப்பம் எல்லையிலிருந்து அது சுத்தமாக தூர்ந்துபோய் இருக்கின்ற காரணத்தினால், அங்கே நிலத்தடி நீர் கீழ்மட்டத்திற்குச் சென்றுவிட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 160 அடி, 200 அடி ஆழத்தில் இப்போது ஆழ்குழாய் கிணறுகள் மூலம் நீர் கிடைக்கிறது. அந்த வாய்க்காலை தூர் எடுத்தால், நிலத்தடி நீர் மேம்பட்டு, கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி செம்மையாகக் கிடைக்கும் என்று சொல்லி, அதைச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** இன்னும் இரண்டு, மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டும். திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு தந்தமைக்கு தங்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அரசுப் பணியில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கை சரியாக நடைபெறவில்லையென்று சொன்னால், அதற்குச் சரியான வெள்ளை அறிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்படும் என்று சொல்லியிருப்பதை நான் பாராட்டுகிறேன். இட ஒதுக்கீட்டுக் கொள்கை இப்போது அரசியல் சட்டப்படி இருந்தாலும்கூட, தமிழகத்தில் தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட வேண்டிய, சட்டப்படியான ஒதுக்கீடு, கல்வி, வேலைவாய்ப்புகளில் வழங்கப்படவில்லை என்பது குறித்து கண்டறிய சென்றமுறை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் குழு ஒன்று அமைத்து ஆராய்ந்தபோது, அனைத்துத் துறைகளிலும் இப்படிப்பட்ட நிலை ஏராளமாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதுகுறித்து இப்போது அரசுக்குக் கோரிக்கையாக சமர்ப்பித்திருக்கிறோம். அரசு அதிகாரிகளால் அந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லையாதலால்தான் அந்தச் சமுதாய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அரசுப் பணிகள் கிடைக்கவில்லை என்பதை முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, முதலமைச்சர் அவர்கள் சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரமாக ஆக்கக்கூடிய சூழ்நிலை இல்லையென்று, கேள்விக்குப் பதில் அளிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கிராமப்புறங்களில் பகுதிநேரத் தொழிலாளர்களாக, வேலையாளர்களாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு அரசு வழங்குகிற ஊதியம் நிச்சயமாகப் போதவில்லை. ஆகவே, அவர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்று சொன்னாலும்கூட, அவர்களுக்குப் போதிய ஊதியத்தை வழங்கக்கூடிய அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

இன்னொன்றையும் முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். தமிழகம் பூராவும் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேறுபாடு இல்லாமல், இந்த அரசு முறையாக நடவடிக்கை எடுக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக என்னுடைய தொகுதியில் பொதுமக்களுடைய குறைகளைக் கேட்டு சுற்றுப்பயணம் சென்றபோது, என்னுடைய தொகுதி மக்கள், அந்தப் பக்கம் தஞ்சாவூர் பகுதியிலும், இந்தப் பக்கம் புதுக்கோட்டையிலும் வேண்டியவர்களுக்கு எல்லாம், கேட்காதவர்களுக்கு எல்லாம் நிரம்ப இலவச வேட்டி சேலை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், ஆலங்குடி தொகுதியில் மட்டும் எப்போதும் கொடுக்கப்படும் வேட்டி சேலைகளைக்கூட இப்போது அதிகாரிகள் கொடுக்க மறுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். இதை நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய .கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். வேண்டுமானால் நீங்கள் ஆலங்குடிக்கு தனியாக அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யுங்கள். இந்த நிலை, குறைபாடு அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிறது. ஆகவே, இந்தக் குறைபாடுகளை நீக்கக்கூடிய அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் இலவச வேட்டி சேலைகளை அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையில் உழவர் சந்தையைத் திறந்து வைத்திருக்கிறார்கள். கரம்பக்குடியை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்பதற்காக சென்னைக்கு வந்த மரியாதைக்குரிய பல்லவராயர் அவர்கள் விபத்தில் இறந்திருக்கிறார்கள். கரம்பக்குடி தனி வட்டமாக ஆக்க வேண்டுமென்று தொடர்ந்து பல

ஆண்டுகளாக கோரிக்கை வைத்திருந்தாலும், அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. சிலையைத் திறந்து வைத்த முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் தனி வட்டமாக ஆக்குவார் என்று எதிர்பார்த்தேன். அது இடம் பெறவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சட்டப்படி மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையை இப்போது செயல்படுத்த முடியாது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்பதற்காக வந்த பல்லவராயர் அவர்களும் வழியிலே விபத்திலே மறைந்தது உண்மை. அவருடைய சிலையை அண்மையிலே நான் சென்று புதுக்கோட்டை பக்கத்தில் கரம்பக்குடியில் திறந்து வைத்தபோதுகூட, இந்தக் கோரிக்கை அங்கே நண்பர் திருநாவுக்கரசு அவர்களாலும், வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களாலும், மற்றவர்களாலும் வைக்கப்பட்டது. அப்போதே அதைப் பற்றி நான் கூறியிருக்கின்றேன். ஏனென்றால், இப்போது மக்கள்தொகை கணக்கு எடுப்பு எடுக்கும்போது எந்த ஒரு புதிய வட்டமோ, தாலுகாவோ அல்லது எதுவுமோ அமைக்கக் கூடாது. அப்படி அமைத்தால் Census எடுக்கும்போது பிரச்சினை ஏற்படும் என்று ஒரு சட்டமே இருக்கிறது. அதை மீறி இப்போது அதைச் செய்ய முடியாது. இப்போது அறிவித்திருக்கிறோம். Census எடுத்து முடிந்தபிறகு அது செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறோம். Census எடுத்து முடிந்தபிறகுதான் அதைச் செயல்படுத்த வேண்டும். அதனால்தான் இப்போது அரியலூரைத் தனி மாவட்டமாக நாம் பிரித்தும்கூட அதைச் செயல்படுத்த முடியவில்லை. ஒரு Special Officer-ஐதான் போட்டிருக்கிறோம். இன்னும் மாவட்ட ஆட்சியரை அங்கு நியமிக்கவில்லை. காரணம் அதுதான்.

**திரு. அ. வெங்கடாசலம்:** தனி வட்டமாக ஆக்கப்படும் என்று உத்தரவாதம் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல் புதுக்கோட்டை மாவட்டம் தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம் என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள். கொள்ளிடம், காவிரியில் வருகிற உபரிநீர் வீணாகக் கடலில் சென்று கலப்பதைத் தடுத்து, புதுக்கோட்டையிலுள்ள பொதுப் பணித் துறை ஒன்றியத்தைச் சேர்ந்த குளங்களில் நிரப்பினால், முழுமையாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுவதற்கு ground water இருக்கக்கூடிய அளவிற்கு அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் பெரிதும் பயன்படும். ஆகவே, தொடர்ந்து இந்த மன்றத்தில் நான்கு ஆண்டுகளாக அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையில் வரவில்லை என்று சொன்னாலும்கூட, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலாவது



கொள்ளிடத்தில் செல்கிற உபரி நீரை புதுக்கோட்டைக்குத் திருப்புவதற்கான அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த ஆட்சி ஒளிவு மறைவு இல்லாத ஆட்சி என்று அனைவரும் இப்போது சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட, நான் முதலமைச்சர் அவர்களைப்பார்த்து பணிவோடு கேட்டுக்கொள்வது, இப்போது கிராமப் பகுதிகளில் செல்கிறபோது, புதிய குடும்ப அட்டை வேண்டுமென்று கடந்த நான்கு ஆண்டுகளாக பலமுறை விண்ணப்பம் செய்தும் எங்களுக்குப் புதிய குடும்ப அட்டை கிடைக்கவில்லை, அது என்ன ஆயிற்று என்ற பிரச்சினை பொதுமக்களிடம் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் சொல்கிறபோது, இதுவரையிலே குடும்ப அட்டைகள் கிடைக்காத குடும்பங்களுக்கு எப்போதுதான் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதை அறிவிக்க வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அடுத்தாற்போல, தொடர்ந்து என்னுடைய தொகுதியில் 50 ஆண்டுகளாக நிறைவேறாமல் இருக்கிற 2 கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடத்தில் வைக்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன். அக்கினி ஆறு 4 ஊராட்சிகளை துண்டாக்கிச் செல்கிறது. அக்கினி ஆற்றின் குறுக்கே அபிராமி விடுதி பாலம் கடந்த 50 ஆண்டுகளாக கட்டாத காரணத்தால், மலையூர் Firka-ல் 4 ஊராட்சிகளை இணைக்க முடியாமல், 10, 15 கிலோமீட்டர் சுற்றி வரக்கூடிய அவல நிலை இருக்கிறது. ஆகவே, அக்கினி ஆற்றின் குறுக்கே அபிராமி விடுதி பாலம் கட்ட வேண்டுமென்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டது. அண்மையில்கூட 30 பாலங்கள் எடுக்கப்பட்ட அறிவிப்பை பத்திரிகையிலே பார்த்தேன்; அதிலே அக்கினி ஆற்றின் குறுக்கே கட்டவேண்டிய அபிராமி விடுதி பாலம் இடம் பெறவில்லை. அதேபோல அரும்பலத்தை இணைக்கக்கூடிய இசிவுபட்டி பாலமும் இடிந்து இருக்கிறது; போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருக்கிறது. 106 பாலங்களைக் கட்டுகிறோம் என்று பெருமைகொள்கிற இந்த ஆட்சி, அந்த இரண்டு பாலங்களையும் நிச்சயமாகக் கட்டித்தர வேண்டும்.

இன்னுமொன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்றமுறை புயலால் பாதிக்கப்பட்டபோது......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** பேசி முடியுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** பேசி முடித்துவிடுகிறேன். திருச்சியில் அதிகமாக வெள்ளப் பெருக்கு எடுத்து, அது கீரனூர், கந்தர்வக்கோட்டை வழியாக கரம்பக்குடி பகுதியில் 5, 6 பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய காவிரிநீர்ப் பாய்கிற பகுதியில் மிகப் பெரிய சேதத்தை உருவாக்கி இருக்கிறது. கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகளினுடைய பயிர்கள் பாதிப்பு அடைந்து இருக்கிறது. அந்தப் பாதிப்புக்கு அரசு இதுவரையிலும் நிவாரணம் வழங்கவில்லை. அதோடு, 14 குளங்கள், அவற்றின் கலுங்குகள், கரைகள் எல்லாம் முற்றிலும் உடைந்து, காவிரி ஆறு பாய்கிற கரம்பக்குடி பகுதியில் 14 குளங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. சாலைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** உரையை முடித்துவிடுங்கள், நேரமாகிறது, அடுத்து இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. அ. வெங்கடாசலம்:** கொஞ்ச நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** கரம்பக்குடி பகுதியில், காவிரி ஆறு பாய்கிற பகுதியில் 14 குளங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்ற நிலை பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு தனியாக fax அனுப்பி இருக்கிறேன். இதுவரையில் அந்தப் பணிகள் எடுக்கப்பட்டனவா? இல்லையென்றால், அவை நிறைவேற்றப்படுமா என்ற பதில்கூட வரவில்லை. அண்மையில் முதலமைச்சர் அவர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சி நடைபெற்றபோதுகூட முதலமைச்சர் அலுவலகத்திற்கு இதை கோரிக்கையாகத் தெரிவித்து இருக்கிறேன். அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு) நேரமாகிவிட்டது.



**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அரை நிமிடம் மட்டும் கொடுங்கள். முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1-1-1996 முதல் 31-3-1998 முடிய ஓய்வுபெற்ற கல்லூரிப் பேராசிரியர்களுக்கு திருத்திய ஓய்வூதிய நிலுவை 40 விழுக்காடு வழங்கப்பட்டு விட்டது. மீதி 60 விழுக்காடு 2003-2004-ல்தான் வழங்கப்படும் என்று அரசாணை இருக்கிறது. ஆனால் 1-4-1998 ஆம் தேதிக்கு பிறகு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு முழுவதுமாக அந்த ஓய்வூதிய நிலுவை வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ.லெ. சுப்பிரமணியன்):** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக தங்களுக்கு எனது நன்றியைக் கூறிக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கும் எனது சேரன்மகாதேவி தொகுதியிலே முக்கூடல்-வீரகநல்லூருக்கு இடையிலே 7 கோடி ரூபாயிலே பாலம் தந்தமைக்காக நான் முதற்கண் எனது நன்றியை கூறிக்கொள்கிறேன். அதேபோன்று பத்தமடை பாய் உலகப் புகழ்பெற்றது. அதற்குத் தர நிர்ணயம் கொண்ட வணிகச் சின்னம் உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்வோம் என்று சொன்னதற்காக அதற்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

எனது தொகுதியிலே நெல் சாகுபடி செய்கின்ற நஞ்சை நிலம் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. அந்த நெல் விவசாயம் செய்கின்ற விவசாயிகள் தங்கள் நெல்லுக்கு விலை போதாது என்று சொல்கிறார்கள். இப்போது யூரியா விலை உயர்வு; விவசாயக் கூலி உயர்வு போன்ற விலை உயர்வுகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால், நெல்லுக்கு குவிண்டாலுக்கு 800 ரூபாய் விலை நிர்ணயம் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று விவசாயத்திற்கு இரவிலே மின்சாரம் தருகின்றார்கள். விவசாயிகள் இரவிலே வயலுக்குச் செல்கின்றபோது, அவர்கள் பாம்பு கடி, மின்சாரம் தாக்குதல் போன்ற விபத்துகளால் இறக்க நேரிடுகிறது. எனவே, விவசாயம்

செய்கின்ற விவசாயிகள் விபத்திலே இறந்தால் அவர்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுவாக மக்கள் பிரதிநிதிகளை மதிப்பதே கிடையாது. இதைக் கடந்த கூட்டத் தொடரிலே கூட முதல்வரிடத்திலே சொல்லியிருக்கிறேன். அவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே என்னையும் அழைத்துச்சென்று விழா நடத்தியபோது, அதிலே அவருடைய பெயரை மட்டும் பெரிய எழுத்துகளில் வைத்தார்கள் என்று முதல்வரிடத்திலே மனு கொடுத்தேன். ஆனால் அதற்குப் பிறகும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை அவர் தொடர்ந்துகொண்டிருக்கிறார். மக்கள் சாசனம் என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் சேரன்மகாதேவி தொகுதியின் பெயரே கிடையாது. எல்லாத் தொகுதிகளும் அதிலே இருக்கின்றன. சேரன்மகாதேவி தொகுதி பற்றிக் கிடையாது. சேரன்மகாதேவி தொகுதி நெல்லை மாவட்டத்திலே இருக்கிறதா, இந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அது தெரியுமா அல்லது அவரே இந்தத் தொகுதியை நெல்லை மாவட்டத்திலிருந்து நீக்கியிருக்கிறாரா எனத் தெரியவில்லை. அதுபோன்று நிகழ்ச்சிகள் நடத்துகின்றபோது சட்டமன்ற உறுப்பினர் பெயரே அழைப்பிதழில் கிடையாது. இதற்கான ஆதாரத்தைத் தங்களுக்குத் தருகிறேன். பல நிகழ்ச்சிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்களை அவர் அழைப்பதே கிடையாது. கடந்த ஆண்டு முதல்வரிடம் கொடுத்த புகார் காரணமாக இப்படிச் செய்கிறாரா? அங்கே ஏதாவது நிகழ்ச்சி நடைபெறும்போது ஏதாவது விவரங்களை நான் சொன்னால் அது அவருக்குப் பிடிக்கமாட்டேன் என்கிறது. எல்லையே தெரியாத ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார், ஆட்சி செய்து கொண்டிருக்கிறார் என்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோன்று மணிமுத்தாறு பிரதான கால்வாய் முதல் வீச்சிற்கு தண்ணீர் கேட்டு நான் விவசாயிகளோடு சேர்ந்து போராட்டம் நடத்தியபோது — நான் விவசாயச் சங்கத் தலைவராக உள்ளேன் — பொதுப் பணித் துறை அமைச்சரைப் போய் பார்க்கச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் என்னிடம் சொன்னார். பொதுப் பணித் துறை அமைச்சரை வந்து நான் பார்த்தேன். அவர்கள் நல்லபடியாக தண்ணீர் தருகிறேன் என்றுதான் சொன்னார்கள். ஆனால் கடைசியில் ஒரு வார்த்தை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுவிட்டு தருகிறேன் என்று



சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது). இதுவரையில் சரித்திரத்திலே 1958-க்குப் பிறகு இவ்வளவு ஆண்டுகளில் அணையில் 100 அடிக்கு மேல் தண்ணீர் இருந்து அந்த வருடம் 4 வீச்சுக்குத் தண்ணீர் தரமுடியாத நிலை இருந்தது என்று ஆதாரத்தோடு சொன்னால் நாங்கள் தண்ணீர் கேட்கமாட்டோம். இதைப் பற்றி நான் பொதுப் பணித் துறை அமைச்சரிடம் கேட்டேன். இந்த விவரங்களைக்கூடச் சொன்னேன். பொதுப் பணித் துறை அமைச்சரைப் பொறுத்தவரையில் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருப்பதாகத் தெரிகிறது. 6 முறை பொதுப் பணித் துறை அமைச்சரை அணுகியிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் 4 நாட்களில் தண்ணீர் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இன்றுவரை தண்ணீர் வரவில்லை. என்ன சிக்கல் என்று எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு பாசன அமைப்பு முறை பற்றி அவர்களுக்குத் தெரியும். மணிமுத்தாறு பாசனம் 4 வீச்சுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் முதல் மற்றும் இரண்டாம் வீச்சில் உள்ள உறுப்பினரின் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுத்தோம். இந்த வருடம் மூன்று மற்றும் நான்காம் வீச்சுகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம். அங்கே 167 குளங்கள் இருக்கின்றன. 128 குளங்களுக்குத்தான் தண்ணீர் பாய்ந்திருக்கிறது. மணிமுத்தாறில் இப்போது 88 அடி தண்ணீர் இருக்கிறது. அதிலிருந்து 80 அடி, 82 அடி தண்ணீர்தான் எடுக்க முடியும். 6 அடி தண்ணீரை எடுக்க முடியாது. இன்னும் 39 குளங்களுக்கு நாங்கள் தண்ணீர் கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் பாத்தியதை உள்ள நேரத்தில் அதைப் பறித்து எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்டால் என்ன நியாயம்? இரண்டாவது ஒன்று கேட்கிறேன். இந்த மன்றத்திலே உள்ள எந்த உறுப்பினரும் மனதிலே கைவைத்துச் சொல்லட்டும். என்னிடத்திலே விவசாய பிரச்சினை என்று சொல்லி வருபவர்கள் குறித்து தலைவர் ஒன்றைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். எந்த விவசாயி நிலத்திலாவது பயிர் வாடுகிறது என்ற நிலையிருந்தால் நாம் நம் கடமையிலிருந்து தவறுகிறோம் என்று அர்த்தம்; அந்தப் பயிர் வாடாமல் பார்த்துக்கொள்வதுதான் பொதுப் பணித் துறை, நீர்ப்பாசனத் துறை அமைச்சருடைய கடமை என்கிற தாரக மந்திரத்தினைச் சொல்லிக்கொடுத்து இருக்கிறார்கள். அந்த வகையில் எல்லோருக்கும் செய்திருக்கிறோம். மூன்று மற்றும் நான்காம் வீச்சுகளுக்கு தண்ணீர் போகும்போது, நான் மனம் விட்டு கேட்கிறேன், நியாயம்தானா? இவ்வளவு பொறுப்புள்ள M.L.A. நீர்ப்பாசனச் சங்கத் தலைவர், தண்ணீரை இடையிலே வெட்டி எடுக்கலாமா? உங்கள் வீட்டிற்கு எதிரில்

இருக்கிற காணாங்குளத்திலே நிரப்பலாமா? மற்ற 14 குளங்களிலே தண்ணீரை நிரப்பலாமா? சட்டம்-ஒழுங்கு பிரச்சினை வருமென்று நான் சொன்னேன். கொஞ்சம் பொறுங்கள், நான் செய்கிறேன் என்று சொன்னேன். ஆனால் நீங்கள் சாகும்வரை உண்ணாவிரதம் என்று போய் உட்கார்ந்தீர்கள். அதைச் செய்தீர்களா? இல்லை. அதை விட்டுவிட்டு என்ன செய்தீர்கள்? Bus மறியல் செய்தீர்கள். Bus மறியல் செய்தபோதுகூட என்னிடத்தில் வாருங்கள், கொஞ்சம் நீக்குபோக்கோடு செய்கின்றேன் என்றேன். உண்டா, இல்லையா அப்பாவு? அவரையும் வைத்துக்கொண்டுதான் சொன்னேன்.

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தண்ணீர் கொடுக்கப்பட்டபோது 90 அடிதான் தண்ணீர் இருந்தது. அதற்கு மேல் தண்ணீர் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நியாயத்தோடு பேசுங்கள். நானும் உங்களுக்காகப் பரிந்துரை செய்தேன். அப்பாவு அவர்களும் செய்தார். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டுதான் அவர் உங்களுக்கு உதவி செய்கிறேன் என்று சொன்னார். அதனால் நியாய உணர்வோடு நீங்கள் பேசுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** நீங்களும் தண்ணீர் தர வேண்டுமென்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரால் கொடுக்க முடிந்தால்தான் தண்ணீரைக் கொடுப்பார். முறை இருக்கிறவர்களுக்குக் கொடுக்காமல் உங்களுக்கு எப்படிக் கொடுக்க முடியும்?

**திரு. பா. வேல்துரை:** Supplement-ல் அப்படித் தண்ணீர் கொடுப்பது வழக்கம். நீங்கள், அமைச்சர் நினைத்திருந்தால் தந்திருக்கலாம். இந்த வருடம் 110 அடி தண்ணீர் வந்திருந்தும், நீங்கள் தரவில்லை. இதற்கு முன்னால் எந்த வருடத்திலும் தராமல் இல்லை. நீங்கள் நினைத்திருந்தால் முதலில் உள்ள குளங்களுக்காவது தண்ணீர் தந்திருக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது விவசாயிகள்மீது வாய்க்கால்கள் வெட்டினார்கள் என்று case போட்டிருக்கிறார்கள். அந்த case பூராவையும் திரும்பப் பெற வேண்டுமென்று முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-25

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதை என்னால் செய்ய முடியும், செய்கிறேன். (சிரிப்பு)

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு நான் சென்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மரபிற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு பேசுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையிலே போய் நான் கேட்டபோது, அங்கே நிறைய மருந்துகள் வருகின்றன என்று சொன்னார்கள். அதிலே ஒன்றும் குறை சொல்லவில்லை. ஆனால் periodical-ஆக ஒழுங்காக வருவதில்லை. திடீர் திடீர் என்று நிறைய மருந்துகள் வருகின்றன, bulk-ஆக வருகின்றன, கொஞ்ச நாள் மருந்துகளே இல்லாமல் இருக்கிறது, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை அங்கே இருப்பதாக என்னிடத்திலே மருத்துவ சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலேயே தனியாக ஒரு கிடங்கு கட்டி, எப்போது தேவைப்பட்டாலும், உடனடியாக மருந்துகளை வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டைக்குப் பக்கத்திலேதான் அந்த கிடங்கும் இருக்கிறது. ஏதாவது குறை இருக்குமானால், அங்கே அதிகாரிகளிடத்திலே சொன்னால் அதற்கு நிச்சயமாக, உடனடியாக ஏற்பாடுகள் செய்வார்கள்.

**திரு. பா. வேல்துரை:** என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஓர் ஏழைக் குடும்பத்திற்கு இலவச வேட்டி கொடுத்தால், சேலை கிடையாது; சேலை கொடுத்தால் வேட்டி கிடையாது. அதாவது ஏழைகள் வேட்டி சேலை எடுத்துக் கட்ட முடியாது. ஒரு திருவிழா நேரத்திலே நாம் கொடுக்கிறோம். ஒருவர் புத்தாடை கட்டியிருந்தால் இன்னொருவர் புத்தாடை கட்ட முடியாத நிலையிலே மிகவும் மோசமான நடவடிக்கையாக இருக்கிறது. ஆகவே, இலவச வேட்டி சேலையை முழுவதுமாகக் கொடுத்துவிடுங்கள். முதலாம் ஆண்டு மட்டும் ஒழுங்காக வந்தது. அதற்குப் பிறகு போன வருஷமும், இந்த வருஷமும், இரண்டு வருஷமாக இலவச வேட்டி சேலைகள் ஒழுங்காக வழங்கப்படவில்லை.

[திரு. பா. வேல்துரை] [2000 மார்ச் 29

வீட்டுமனைப் பட்டாவிற்காக நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் பரிந்துரை பண்ணியும் எதுவுமே வழங்கப்படவில்லை. அவர்கள் இஷ்டத்திற்கு பட்டாவிற்கு 3000 ரூபாய், 2000 ரூபாய் என்று வாங்கிக்கொண்டு இலவச பட்டா வழங்குகிறார்கள். அதிலே பயங்கரமான முறைகேடு நடக்கிறது. அதை நீங்கள் கவனிக்க வேண்டும். என்னுடைய பரிந்துரையை ஏற்று அதிலே நியாயமாக இருப்பதை கொடுக்கச் சொல்லி நீங்கள் உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடும்ப அட்டைகள் நிறைய பேருக்கு இன்னும் வழங்கப்படவில்லை. குடும்ப அட்டைகளை நீங்கள் உடனடியாக வழங்குவதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1999-2000 ஆண்டிலே கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள நிதியையெல்லாம் திரும்ப cheque போட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் வாங்கியிருக்கிறார். அது என்ன, ஏது என்று விசாரித்தால் அந்த நிதியை உழவர் சந்தை கட்டுவதற்காகப் பயன்படுத்தியதாகச் சொல்கிறார்கள். அதிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று தெரியவில்லை. கிராம வளர்ச்சிக்காக ஒதுக்கிய பணத்தை நகர்ப்புற வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்தலாம்? அந்தத் தவறு அங்கே நடந்திருக்கிறது. ஏன் அந்த கிராமப் பஞ்சாயத்துகளில் இருந்த நிதியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரும்பப் பெற்றார் என்பதற்கான உண்மை நிலை தெரியவில்லை. மீண்டும் இந்த ஆண்டு நிதி வழங்கும்போது, அந்த நிதியைச் சேர்த்துத் தர வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த எந்த ஊராட்சி மன்றங்களில் இருந்து cheque போட்டு வாங்கினார்கள் என்ற விவரத்தை அவையில் தெரிவித்தால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அனைத்து கிராம ஊராட்சி மன்றங்களில் இருந்தும் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்து மட்டுமல்ல, எல்லா பஞ்சாயத்துகளிலுமே Account No.3-ல் உள்ள பணம் திரும்ப வாங்கப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டம் முழுவதும் அவ்வாறு வாங்கப்பட்டிருக்கிறது. அதனால் நீங்கள் எந்த அடிப்படையில் வாங்கப்பட்டது என்பதைத் தெரிந்து உடனடியாக அதைத் திரும்ப வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2000 மார்ச் 29] [திரு. பா. வேல்துரை]

தூத்துக்குடியிலே நடைபெற்ற அரிசி கடத்தலைப்பற்றி நிறைய பேசினோம். ரெயில் மூலமாகக் கடத்தியதுபற்றி எல்லாம் பேசி முடித்துவிட்டோம். அதற்குப் பிறகும் 26-3-2000 நாளிட்ட தினமலர், தினத்தந்தி ஆகிய பத்திரிகைகளில் 350 மூட்டை அரிசி பழையபடி பிடிக்கப்பட்டிருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. அதாவது தாசில்தார் நம்பிராஜ் மற்றும் பறக்கும்படை தாசில்தார் மோகன் ஆகிய இரண்டு பேரும் தூத்துக்குடியிலே எட்டயாபுரம் சாலையிலே உள்ள தனியார் கிடங்குக்குப் போய் 350 மூட்டை அரிசியைப் பிடித்திருக்கிறார்கள். இது எப்படி இன்னும் தொடர்கிறது? இதற்கு ஒரு சரியான முடிவை அரசு எடுக்க வேண்டும். அரிசி பெரிய பிரச்சினை, பொது மக்களின் அத்தியாவசியமான பொருள். அரிசிப் பிரச்சினை ஓர் ஆட்சியை எப்போதுமே வீழ்த்திவிடும். எனவே, அப்படிப்பட்ட ஒரு தவறான நடவடிக்கை தொடருவதற்கு இந்த அரசு அனுமதிக்கக் கூடாது. இதிலே கடுமையான நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஐந்தாம்கட்டளை கூட்டுக்குடிநீர் திட்டம்... (மணியடிக்கப்பெற்றது). கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்கள் தருகிறேன். அதற்குள் பேசி உரையை முடிக்க வேண்டும்.

**திரு. பா. வேல்துரை:** என்னுடைய தொகுதியிலே, ஐந்தாம்கட்டளை கூட்டுக்குடிநீர் திட்டம் என்ற ஒரு குடிநீர் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, 1999 ஜனவரியிலே எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்தத் திட்டத்திற்குரிய முழுமையான detailed estimate போட்டு, மதிப்பீடு எல்லாம் sanction ஆகவில்லை. ஐந்தாண்டுகளுக்குள் அதாவது 2001-க்குள் தண்ணீர் முழுமையாகக் கொடுப்போம் என்று சொன்னீர்கள். இந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும். கிராமத்தில் குடிக்க சுத்தமாக தண்ணீர் கிடையாது. ஐந்தாம்கட்டளை கூட்டுக்குடிநீர் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 30 கிராமங்கள் இருக்கின்றன. ஒரு சொட்டு தண்ணீர்கூடக் கிடையாது. கோடையில் பெரிய கஷ்டமாகிவிடும். அதுபோக, பாப்பாக்குடி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக tender விடப்பட்டிருக்கிறது. இன்னும் tender பரிசீலிக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்படவில்லை. அதுபோன்று, 1997-98-லே அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் வெங்கடாம்பட்டி ஊராட்சி எடுக்கப்பட்டது. இன்னமும் 23 கிராமங்களுக்குக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சர்

பிற்பகல் 1-30

அவர்கள் நெல்லைக்கு வந்தபோது, மார்ச் மாதம் வழங்கப்படும் என்று அமைச்சர் முன்னிலையிலேயே வாக்குறுதி அளிக்கப்பட்டது. இன்னும் 6 மாதம் ஆனாலும்கூட முடிவுறும் என்கிற நிலையில் அது இல்லை, முடிவதுபோல் தெரியவில்லை. ஆகவே, அந்தத் திட்டங்களை விரைந்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி ஆகிய பேரூராட்சிகளில் குடிநீர் திட்டத்தை TWAD Board மூலம் செய்யாமல், பஞ்சாயத்தையே குடிதண்ணீர்தொட்டி கட்டச் சொல்லியதால், பஞ்சாயத்து ஒன்றரை, இரண்டு வருடங்களாகியும் தொட்டியைக் கட்டி முடிக்கவில்லை. அதனாலே, எந்தக் குடிநீர் திட்டமாக இருந்தாலும், TWAD Board மூலமாகவே செய்வதற்கு மிகவும் கடுமையான உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீரவநல்லூர் பேரூராட்சியிலே, ஒன்றேகால் கோடி ரூபாய்க்கு குடிநீர் திட்டத்திற்கான மதிப்பீடு உங்களுக்கு வந்திருக்கிறது. அந்த ஊரிலே குடிப்பதற்குத் தண்ணீரே இல்லை. இந்த நிதியாண்டில் நீங்கள் நிதியை ஒதுக்கித்தந்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரை, மேல்நிலைப் பள்ளிகளில் கணினி கல்வி பயின்றுவிட்டு வெளியே வருகிறவர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே, கல்லிடைக்குறிச்சி, அரியநாயகிபுரம், மருதமுத்தூர் ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் இல்லை; மற்றும் சாதனங்கள் எல்லாம் தேவைப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து விஞ்ஞானக்கூடம் கட்டிக்கொடுங்கள். நாங்கள் எல்லாம் அப்படித்தான் செய்கிறோம்.

**திரு. பா. வேல்துரை:** அப்படிக் கொடுக்கலாம். அதை எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கொடுக்க முடியாதல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. பா. வேல்துரை:** மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபு மாணவியர்களுக்கு மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிப்பதற்கு வருடத்திற்கு 500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்குகிறீர்கள். இந்த ஊக்கத் தொகையை பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று உங்களை மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தமானுக்கு நாங்கள் ஆய்வுப் பயணம் சென்றபோது, அங்கேயிருந்த பழங்குடி மக்களைப் பார்த்தபோது, இராமநாதபுரம், விளாத்திக்குளம், தூத்துக்குடி போன்ற பகுதிகளிலேயிருக்கிற பனை ஏறுகின்ற நாடார்கள் எல்லாம், அந்தமானில் வாழ்கின்ற அந்தப் பழங்குடி மக்கள் மாதிரியே இருக்கிறார்கள். ஆகவே, பனை ஏறும் நாடார்களைப் பிரித்து, அவர்களைப் பழங்குடி மக்களில் சேர்க்கவில்லையென்றாலும்கூட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்து, அவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குரிய சலுகைகள் கிடைப்பதற்கான நடவடிக்கையை முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

117. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1998-99). [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

118. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1998-99). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

[2000 *மார்ச்* 29

*119. 1998-99* ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. *(1948* ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் [மத்தியச் சட்டம் *54/1948) 75(1)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

*120.* தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பத்துநான்காவது ஆண்டறிக்கை. *(1998-99).* [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

*121.* தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்துமூன்றாவது ஆண்டறிக்கை. *(1996-97).* [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

ஏதுமில்லை.

22775

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.